விலை: 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 ஆனி 27 புதன்கிழமை (11.07.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 204

## மோசமான சித்திரவதை இலங்கை முதலிடம்

### சித்திரவதைகளிலிருந்து விடுவித்துக் கொள்ளும் சர்வதேச அமைப்பு அறிக்கை

(கொழும்பு) உலகில் மிகமோசமான சித்திரவதைகளும் துன்புறுத்தல்களும் இடம்பெறும் நாடுகளின் பட்டியலில் இலங்கை மீண்டும் முதல் இடத்தை பிடித்துள்ளது. சித்திரவதைகளிலிருந்து விடுவித்துக்கொள்ளும் சர்வதேச அமைப்பு வெளியிட்ட அறிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளது. இந்த அறிக்கையின்படி, தொடர்ந்து ஏழாவது ஆண்டாக இலங்கை (2017-ம் ஆண்டு புள்ளி விபரங்கள்) இந்த பட்டியலில் முன்னிலையில் உள்ளது. (23-ம் பக்.)



### எரிபொருள் விலை மீண்டும் அதிகரிப்பு

(கொழும்பு)

எரிபொருள்களின் விலைச் சூத்திரம் நேற்று செவ்வாய்க்கிழமை நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் என நிதி அமைச்சு பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு பணித்துள்ளது. 23

### சட்ட ஒழுங்கு அமைச்சர் பொலிஸ்மா அதிபர் நாளை யாழ்.விஜயம்

(கொழும்பு)

யாழ்ப்பாண குடாநாட்டில் வாள் வெட்டு, கொள்ளை மற்றும் சிறுவர் மீதான துன்புறுத்தல் என குற்றச்செயல்கள் அதிகரித்துள்ள நிலையில் சட்டம், ஒழுங்கு அமை 23

### காலில் கிருமி தொற்று ஏற்பட்ட மாணவன் பலி

(யாழ்ப்பாணம்)

காலில் காயமடைந்த மாணவர் ஒருவர் கிருமி தொற்றுஏற்பட்டு 6 நாட்களின் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

அனலைதீவு 3-ம் வட்டாரத்தை சேர்ந்த அனலைதீவு சதா 23

### மாதாந்தம் 10-ம் திகதி எரிபொருள் விலைகளில் மாற்றம்

(கொழும்பு)

எரிபொருள்களின் விலையை மாதாந்தம் மாற்றம் செய்யும் வகையில் விலைச் சூத்திரத்தை நடைமுறைக்குக் கொண்டு 23

### 457 தொண்டர் ஆசிரியர்களுக்கு ஜூலை மாதம் நிரந்தர நியமனம்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வரும் 22-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருகை தருகின்றார்.

யாழ்ப்பாணத்துக்கு வருகை தரும் பிரதமர் வடக்கு மாகாண 23


### அனுமதியின்றி இயங்கும் மருந்தகம், சிகிச்சை நிலையங்கள் மூடப்படும்
#### சுகாதார அமைச்சர் குணசீலன்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் அனுமதி பெறப்படாமல் இயங்கும் அனைத்து மருந்தகம் மற்றும் சிகிச்சை நிலையங்கள் உடனடியாக மூடப்படும்என தெரிவித்த வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் குணசீலன், அனைத்து மாவட்டங்களிலும் உடனடியாக அமுலுக்கு வரும் படி சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவில் மூடப்பட்ட மருந்தகங்கள் 6 மாத காலத்துக்கு திறந்துவிட வேண்டும் என ஒருங்கிணைப்புக் குழு கூட்ட 23

#### எந்த அமைச்சரையும் பதவி இறக்க முடியாது
### முதலமைச்சர் கடமையிலிருந்து நான் தவறவில்லை : விக்னேஸ்வரன்



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையில் தற்போது உள்ள எந்த ஒரு அமைச்சரையும் பதவி இறக்க முடியாது என தெரிவித்த வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், முதலமைச்சர் என்ற கடமையில் இருந்து நான் தவறவில்லை. என் வரையறைக்குள் இருந்து எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை நான் எடுத்துள்ளேன்.

மேலும் அதிகாரப் பரவலாக்கம் பதின்மூன்றாம் திருத்தச் சட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப் 24

### மாணவிக்கு தொல்லை கொடுத்த இராணுவ வீரர் பொலிஸாரால் கைது

(வவுனியா)

வவுனியாவிலிருந்து பூவரசன் குளம் ஊடாக மெனிக்பாம் சென்ற இ.போ.ச பேருந்தில் பாடசாலைச் சீருடையுடன் சென்ற பாடசாலை மாணவிக்கு தொல்லை கொடுத்த இராணுவச்சிப்பாயை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ளதாகத் தெரிவித்து பொதுமக்களும் பேருந்தில் சென்ற பயணி 23

#### டெனீஸ்வரன் விவகாரத்தால்
### வடக்கு மாகாண சபையில் சர்ச்சையும் குழப்பங்களும்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தின் தற்போதைய அமைச்சர்கள் யார் என்ற கேள்வியுடனும் டெனீஸ்வரனின் அமைச்சர் விவகாரத்தில் அவருக்கான ஆசன ஒதுக்கீடு தொடர்பான விடயங்கள் நேற்று மாகாண சபை அமர்வில் எடுத்துக்கொள்ளப்பட்ட போது சபையில் பலத்த சர்ச்சைகளும் குழப்பங்களும் ஏற்பட்டது.

வடக்கு மாகாண சபையின் 126-வது அமர்வு நேற்று கைதடியில் உள்ள மாகாணசபை சபா மண்டபத்தில் சபைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் இடம்பெற்றது. 23

### ஆளும் கட்சி முரண்பாட்டை விடுத்து மக்கள் நலன் சார்ந்த விடயங்களை சபையில் எடுங்கள் - எதிர்க்கட்சியினர்


(யாழ்ப்பாணம்)

ஆளும் கட்சிக்குள் உள்ள முரண்பாடுகளை மட்டுமே சபையில் கொண்டுவராது மக்கள் நலன்சார்ந்த விடயங்களை எடுத்துக்கொண்டு செயற்படுங்கள் என வடக்கு மாகாண சபையில் நேற்று இடம்பெற்ற குழப்பத்தின் பின்னர் எதிர்க்கட்சியினர் தெரிவித்தனர்.

வடக்கு மாகாண சபையின் 126-வது அமர்வு நேற்று கைதடியில் உள்ள மாகாணசபை சபா மண்டபத்தில் இடம்பெற்றது. அதில் டெனீஸ்வரனின் அமைச்சர் விவகாரம் தொடர்பாக சபையில் குழப்ப நிலை ஏற்பட்டது.

அப்போது எதிர்க்கட்சி உறுப்பினர் தவநாதன் கருத்து 02

### காணாமல் ஆக்கப்பட்டவர்கள் அலுவலகத்திற்கு அவகாசம் வழங்கவேண்டும் - கனேடிய தூதுவர்



(கொழும்பு)

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விடயம் தொடர்பில் திறக்கப்பட்டுள்ள அலுவலகம் சம்பந்தமாக உடன் புரிந்து கொள்ள முடியாவிடினும் அவர்களுக்கு அவகாசம் கொடுத்து பார்ப்பதே சிறந்தது என இலங்கைக்கான கனேடிய தூதுவர் டான்ட் மிக்கினோ தெரிவித்து 23

### போதைப்பொருள் கடத்தலுக்கு இனி தூக்குத் தண்டனை
#### அமைச்சரவை ஏகமனதாக தீர்மானம்

(கொழும்பு)

போதைப் பொருள்களை கடத்தல், பதுக்கல் மற்றும் விற்பனை செய்தல் ஆகிய குற்றங்களுக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்படும் குற்றவாளிகளுக்கு அதனை நிறைவேற்றுவது என அமைச்சரவை நேற்று ஏகமனதாக தீர்மானித்துள்ளது.

இந்த விடயத்தை அமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேரா தெரிவித்தார்.

ஹெரோயின் உள்ளிட்ட உயிர்க் கொல்லி போதைப்பொருள்களை கடத்தல், பதுக்கல், விற்பனை செய்தல் ஆகிய குற்றங்களுக்கு மேல் நீதிமன்றால் குற்றவாளிகளுக்கு தூக்குத் தண்டனை விதி 23

### வவுனியாவில் பிரபல ஹெரோயின் வியாபாரி கைது

(வவுனியா)

வவுனியாவில் நேற்று வன்னிப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபரின் கீழ் செயற்படும் புலனாய்வுத் துறையினருக்கு கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் சென்ற புலனாய்வுத்துறையினர் வவுனியாவில் பிரபல கஞ்சா மற்றும் ஹெரோயின் வியாபாரியை 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெனீஸ்வரன் கதிரைக்கு ஆசைப்படாமல் மக்கள் நலன் சார்ந்து செயற்பட வேண்டும்

## மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணசபை முன்னாள் அமைச்சர் டெனீஸ்வரன், தனது கட்சிக்கு கட்டுப்படாமல் தன்னிச்சையான நடவடிக்கைகளை எடுத்து செயற்பட்டுள்ளார் என தெரிவித்த மாகாணசபை உறுப்பினர் சிவாஜிலிங்கம், கதிரைக்கு ஆசைப்படாமல் மக்கள் நலன் சார்ந்து செயற்பட முன்வாருங்கள் என தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபையின் 126-வது அமர்வு நேற்று கைதடியில் உள்ள மாகாணசபை சபாமண்டபத்தில் இடம்பெற்றது. அதில் டெனீஸ்வரன் தாக்கல் செய்த வழக்கின் மேன்முறையீட்டுமன்றத் தீர்ப்பினை தொடர்ந்து அவையில் அவரது சிறப்புரிமை தொடர்பில் பேசப்பட்டது. அதன் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், டெனீஸ்வரனின் அமைச்சர் விவகாரத்தில் மேல் நீதிமன்றம் இடைக்கால உத்தரவைப் பிறப்பித்துள்ளது. அந்த தடை உத்தரவுக்கு எதிராக முதலமைச்சர் ரீட் மனுத் தாக்கல் செய்துள்ளார். அதற்கான தீர்ப்பு கிடைக்கலாம் கிடைக்காமலும் விடலாம். அது நீதிமன்ற விடயம். அது தொடர்பில் விவாதிக்கப் போவதில்லை. இலங்கை அரசின் அரசியல அமைப்பின் கீழ் கடந்த காலத்தில் நீதித் துறை மிகவும் கேவலமாக நடந்து கொண்டதென்பது வரலாற்றின் அடிப்படையில் அனைவரும் அறிந்த் விடயம். அந்த வகையில் அரசியல் அமைப்பில் பாரதூரமான நிலைக்கு, டெனீஸவரன் தாக்கல் செய்த வழக்கின் இடைக்கால உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மாகாணசபை உறுப்பினர் டெனீஸ்வரன், தான் பதவி நீக்கப்பட்டது தவறு என்றால் தனது கட்சியுடன் கலந்துரையாடியிருக்க வேண்டும். தமிழீழ விடுதலை இயக்கம் சார்பாக தான் அவர் மாகாணசபைக்குள் வந்தார். எமது கட்சி சிபாரிசு செய்யாமலே முதலமைச்சர் அவரை அமைச்சராக நியமித்தார்.

இந்த நிலையில் முதலமைச்சருக்கு எதிராக நடந்து கொண்ட காரணத்தினால் அவர் சார்ந்த எமது கட்சி 3 வருடம் அவரை இடைநிறுத்தியுள்ளது.

இருப்பினும் இதுவரை டெனீஸ்வரன் தனது கட்சியுடன் இது தொடர்பாக எந்தவிதமான கலந்துரையாடலும் மேற்கொள்ளப்படவில்லை. டெனீஸ்வரனுடைய இந்த நடவடிக்கைகள் தனிப்பட்ட தன்னிச்சையான நடவடிக்கைகள். அதற்கும் ரெலோவுக்கும் எந்த உடன்பாடும் இல்லை. அமைச்சர் விவகாரம் தொடர்பாக முதலமைச்சரிடம் பொறுப்பு கொடுத்துள்ளோம் அவர் அதை செய்ய வேண்டும்.

அதை விடுத்து சொந்த பிரச்சினைக்காகவும் கொடுப்பனவுகளை பெறுவதற்காகவுமே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது போல் தெரிகிறது. கட்சிக்கும் மக்கள் நலன் சார்ந்தும் அவர் நடவடிக்கை எடுக்கவில்லை என தெரிவித்தார். (ம-9)

## பிரபல ஹெரோயின்...

ஹெரோயினுடன் கைது செய்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், வவுனியா நெளுக்குளம், காத்தான் கோட்டம் பகுதியில் ஹெரோயின் கஞ்சா வியாபாரிகளின் நடவடிக்கைகள் அதிகளவில் காணப்படுவதாக புலனாய்வுத்துறையினருக்குத் தெரியவந்துள்ளது.

இதையடுத்து நேற்று திடீரென்று மேற்கொண்ட நடவடிக்கையின்போது பிற்பகல் 4 மணியளவில் காத்தான்கோட்டம் பகுதியில் வைத்து 34 வயதுடைய பிரபல கஞ்சா மற்றும் ஹெரோயின் வியாபாரியை 970 கிராம் ஹெரோயினுடன் கைது செய்துள்ளதாக தெரிவித்துள்ளனர். (ம-281)

## விஜயகலாவை உடனடியாக விசாரிக்குக

# பொலிஸ் மா அதிபர் சட்டமா அதிபருக்கு பணிப்பு

(கொழும்பு)

சிறுவர் மற்றும் மகளிர் விவகார முன்னாள் இராஜாங்க அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்த கருத்து தொடர்பில் உடனடியாக விசாரணைகளை முன்னெடுத்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஸ் மா அதிபருக்கு சட்ட மா அதிபர் நேற்று அறிவுறுத்தியுள்ளார்.

கடந்த 2ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடந்த அரச நிகழ்வில் உரையாற்றிய விஜயகலா மகேஸ்வரன், தமிழீழ விடுதலைப் புலிகளின் கை ஓங்கவேண்டும் என்று தெரிவித்தார்.

அவரது கருத்து தெற்கில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. அதனால் விஜயகலா மகேஸ்வரன் மீது ஐக்கிய தேசிய கட்சி ஒழுக்காற்று நடவடிக்கையை முன்னெடுப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றுக்கு அறிவித்தார்.

அத்துடன், விஜயகலா மகேஸ்வரனின் உரை அரசியலமைப்பை மீறுகின்றதா? என சட்ட மா அதிபரிடம் ஆலோசனை கோரப்பட்டுள்ளதாக சபாநாயகர் நாடாளுமன்றுக்கு அறிவித்தார்.

தனது உரையை திரிபுபடுத்தி ஊடகங்கள் திட்டமிட்டு செயற்பட்டுள்ளன என்று முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் குற்றஞ்சாட்டினார்.

ஐக்கிய தேசிய கட்சியின் அழுத்தத்தால் தனது இராஜாங்க அமைச்சுப் பதவியை நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன் துறந்தார்.

இந்த நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்த கருத்து தொடர்பில் உடனடியாக விசாரணைகளை முன்னெடுத்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஸ் மா அதிபருக்கு சட்ட மா அதிபர் நேற்று அறிவுறுத்தியுள்ளார். (ம)

## ஆளும் கட்சி முரண்பாட்டை...

தெரிவிக்கையில், பல மணி நேரமாக சபையில் எடுக்க வேண்டிய விடயங்கள் எடுத்துக்கொள்ளப்படவில்லை.

ஆளும் கட்சிக்குள் உள்ள குத்து வெட்டு முரண்பாடுகள்தான் நடக்கிறது. அதாவது கட்சி சார்பானதும், கூட்டணி தனிநபர் சார்ந்த பிரச்சினை தான் பேசப்படுகிறது. மக்கள் நலன் சார்ந்து எதுவும் எடுக்கப்படவில்லை. மீண்டும் மீண்டும் நேரத்தை வீண்விரயமாக்கி பேசுகிறார்கள்.

பொதுவாக எதிர்க்கட்சியினர் தான் பாரிய பிரச்சினைகளை சபையில் கொண்டு வருவார்கள் ஆனால் இங்கு ஆளும் கட்சியினரே தமது பிரச்சினைகளை சபையில் கொண்டு வந்து நேரத்தை வீணடிக்கிறார்கள். இவ்வாறு இனி நடக்காமல் பார்த்துக்கொள்ளுமாறு அவைத்தலைவரை அவர் மேலும் கேட்டுக் கொண்டார். (ம-9)


A/L கருத்தரங்கு
ஊடகவியல் A/L 2018
என். கஜிதரன்
17,18,19 ஆம் திகதிகளில்.
நேரம்: 2.00P.M
பொருளியற் கல்லூரி, யாழ்.நகர்
தொடர்புகளுக்கு:- 077 395 6158 075 916 0431
(சி-3202)



சேல்ஸ்மன் தேவை
யாழ்.நகரில் இயங்கும் புடைவை விற்பனை நிலையத்துக்கு அனுபவம் உள்ள ஆண்கள் தேவை. (பழக விரும்புபவர்களும், O/L, A/L எடுத்தவர்களும் விரும்பத்தக்கது)
சென்னை பெசன் 63, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்


## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை

### சட்டஆலோசனை வழங்குநர்களைப் பதிவுசெய்தல்

சபையானது 2018ஆம் ஆண்டிற்கு சட்டஆலோசனை வழங்குவதற்கு சட்ட ஆலோசகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

**நிபந்தனை**

- வலிகிழக்கு பிரதேச சபையின் எல்லைக்குள் வசிப்பவராக இருத்தல் வேண்டும் அல்லது அலுவலக வசதிகளை கொண்டிருத்தல் வேண்டும்.
- குறைந்தது 2 வருடங்கள் சட்டத்தரணியாகவும் நொத்தாரிசு ஆகவும் பணியாற்றியிருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை சபையின் தலைமை அலுவலகத்தின் நிதிக்கிளையில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் பதிவுக்கட்டணமாக ரூபா 1000.00 (வரிநீங்கலாக) செலுத்தப்படல் வேண்டும்.

தாங்கள் இச்சேவையினை வழங்கவிரும்பினால் அதற்கான விண்ணப்பப்படிவத்தினை தலைமை அலுவலகத்தில் பெற்று பூரணப்படுத்தி 20.07.2018ஆம் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ கடித உறையின் இடதுபக்க மூலையில் **"சட்டஆலோசனை வழங்கலுக்கான விண்ணப்பம் 2018"** எனக் குறிப்பிட்டுதபால் மூலம் **"தவிசாளர், தலைமை அலுவலகம், வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, பருத்தித்துறை வீதி, புத்தூர்"** எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு 021 205 8867எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

**தியாகராஜா நிரோஷ்**
தவிசாளர்
வலிகாமம் கிழக்குபிரதேச சபை - புத்தூர் (சி-3200) 2018.07.11


பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு. சுரேஸ்குமார் பிரகலாதன்

05.07.2018 அன்று பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற பொதுப்பட்டமளிப்பு விழாவில் விஞ்ஞானமாணி (B.Sc) சிறப்புப் பட்டத்தினைப் பெற்றமையையிட்டு எமது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன் அவர் மேலும் பல பட்டங்களைப் பெற ஆசி கூறுகின்றோம்.

அன்புடன்...
வாழ்த்துவோர்: குடும்பத்தினர்
(4863)



சிவமயம்



காரைநகர் களபூமி திக்கரை முருகமூர்த்தி கோவில்
தேர்த் திருவிழா விஞ்ஞாபனம்

முருகன் மெய் அடியார்களே,
கலியுகவரதனாம் வள்ளிதேவசேனா சமேத சிவசுப்பிரமணிய முருகமூர்த்திப்பெருமானுக்கு வருடாந்த உற்சவமாக விளம்பி வருடம் ஆனித்திங்கள் 27ஆம் நாள் (11.07.2018) தேர்த்திருவிழா நடைபெறுகிறது. அத்தருணம் முருகன் அடியார்கள் ஆசார சீலர்களாக ஆலயத்திற்கு வருகை தந்து தேரேறி வரும் ஆறுமுகப் பெருமானை தரிசித்து பேரின்பப் பெருவாழ்வை பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

வேல் உண்டு வினை தீர்க்க!

கார்விளையும் காரைநகர்க் களபூமித் திக்கரையில்
ஊர் விளங்கக் கோயில் கொண்டு உயிர்க்கருளும் முருகனருள்
சீர்பொலியும் மகோற்சவத்துத் தேரோடும் திருவிழாவில்
பார்போற்றப் பணிசெய்த பரம்பரைக்கு உரித்தான
சூரியவம்சத்துச் சுடர்விடுநற் சோதரர்கள்
நேரிய எம்பெருமான் வாரிசுகள் என நிமிர்ந்தோர்
பேரியல் வணிகத்தால் சிறப்புறவே திருப்பணியை
பேணினார் தம்பி முத்தையாபிள்ளை தம்பிராசா
கலங்கிய காலத்தில் கைமாறிய தேர் உபயம்
விலங்கிடு மனத்தவர் வெற்றியாய் மாறிப்பின்
காரிருள் விலகிய கதிரவன் ஒளிபோல்
நீர்பெற் றுயர்ந்திட்ட நிறைபுலப் பயனாக
எம்பர் வீட்டுத் தொண்டாக மீண்டதுவே:
கூரிய ஆணவம் குலை நடுங்கிச் சென்றதுவே
ஆலயத் திருவிழா அழகுறவே நடக்கிறது
அதனிடைச் சங்காபிஷேக அருள்வந்து கலக்கிறது
வாலாய மாகவே தேரோட்டத் திருநாளில்
வாய்மையின் வெற்றியோடு வணங்கிடுவோம் முருகனையே!

தேர்த்திருவிழா விசேட நிகழ்ச்சிகள்
இலங்கை, இந்திய பிரபல தவில், நாதஸ்வர வித்துவான்களின் இசை மழை

1. அகில உலக தவில் மாமேதை, லயஞான விவகார வித்வமணி இணுவையூர் அமரர். N.R. சின்னராசாவின் புதல்வன் லயஞான இளவரசன், கரவேக லயஞான தவில் சக்கரவர்த்தி திருவாளர். N.R.S. சுதாகரன்
2. நாதஸ்வர இசை அரசன், ஸ்வரவேத நாதசக்கரவர்த்தி காரைநகர் கணேசன் பவப்பிரியன் குழுவினர்
3. நாதஸ்வர இன்ப கான திலகம், ஸ்வர ஞானமணி நல்லூர் U. உதயசங்கர் குழுவினர்

திக்கரை, களபூமி, காரைநகர்.
இங்ஙனம்: தேர்த்திருவிழா உபயகாரர். தம்பி முத்தையாபிள்ளை தம்பிராசா (எம்பர் வீட்டு வாரிசு)
(4864)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## நல்லாட்சியிலும் தொடரும் சித்திரவதைகள்

# கீழ்த்தரமான தந்திரோபாயங்களை பொலிஸார் பின்பற்றுகின்றனர்

## அமைச்சர் பொன்சேகா காட்டம்

(கொழும்பு)

சிறுவன் ஒருவனை பொலிஸார் மிருகத்தனமாக தாக்கிய சம்பவம் தனது தொகுதியில் இடம்பெற்றுள்ளது என முன்னாள் இராணுவத் தளபதியும் அமைச்சருமான சரத் பொன்சேகா குற்றம் சாட்டியுள்ளார்.

கீழ்த்தரமான முறைகேடான தந்திரோபாயங்களை பின்பற்றுவதன் மூலம் பொலிஸாரால் பாதாள குழுக்களின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்த முடியாது.

எனது தேர்தல் தொகுதியில் பொலிஸார் அப்பாவி மக்கள் மீது தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர். அப்பாவிகளின் வீட்டில் போதைப் பொருட்களை வைத்த பின்னர் அவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளனர். கப்பம் கேட்டுள்ளனர் எனவும் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

என்னுடைய தொகுதியில் சிறுவன் ஒருவனை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து சென்று சிறுவனின் கண்ணில் மிளகாய்த்தூளை போட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.



சிறுவனின் தலையை பொலித்தீன் பையினால் மூடிய பின்னர் அவனை தலைகீழாக தொங்கவிட்டு தாக்கியுள்ளனர் எனவும் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

எனவே இனியாவது பொலிஸார் நேர்மையான முறையில் நடந்துகொள்ள வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ-7)

## காணாமல் போயிருந்த ஏழு மீனவர்களும் மீட்பு

(கொழும்பு)

காலி மீன்பிடித் துறைமுகத்திலிருந்து ஆழ்கடல் மீன்பிடி நடவடிக்கைக்காக சென்று காணாமல் போயிருந்த ஏழு மீனவர்களும் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் மாலைதீவு கடற்பிரதேசத்திலிருந்து பாதுகாப்பாக மீட்கப்பட்டதாக மீன்பிடித்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த ஜூன் மாதம் 14 ஆம் திகதி காலி மீன்பிடி துறைமுகத்தில் இருந்து ஆழ்கடல் மீன்பிடி நடவடிக்கைக்காக சென்ற ஆழ்கடல் படகு ஒன்று ஏழு மீனவர்களுடன் காணாமல் போயிருந்தது.

ஹிக்கடுவ, தெல்வத்தை, தொட்டகமுவ ஆகிய பிரதேசங்களை சேர்ந்த ஏழு பேரே இவ்வாறு காணாமல் போயி ருந்தனர்.

இந்நிலையில் அவர்கள் ஏழு பேரும் மாலைதீவில் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர். (இ-7)

## சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்த

# நகரசபை உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சாவகச்சேரியில் விழிப்புக்குழு உருவாக்கம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இடம்பெறும் குற்றச் செயல்களை கட்டுப்படுத்த நகரசபை உறுப்பினர்களின் ஆதரவுடன் விழிப்புக் குழு அமைக்கப்பட வேண்டும் என சாவகச்சேரி நகரசபையின் உப தவிசாளர் பாலமயூரன் சபையில் பிரேரணை ஒன்றை முன்வைத்துள்ளார்.

சாவகச்சேரி நகரசபையின் சபா மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற அமர்வின் போதே அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மைக்காலமாக சாவகச்சேரி நகரை அண்மித்த பகுதிகளில் போதைவஸ்து. பாவனை மற்றும் திருட்டு உள்ளிட்ட சட்டவிரோத செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

இதனால் இளைய தலைமுறையினர் தடம்மாறக் கூடிய சாத்தியப்பாடுகள் உள்ளன. ஆகவே இதனைத் தடுக்க நகரசபை உறுப்பினர்களின் ஆதரவுடன் வட்டார ரீதியாக விழிப்புக் குழுக்களை அமைத்து இவ்வாறான சட்டவிரோதச் செயற்பாடுகளைத் தடுக்க வேண்டும். இதற்கு பொலிஸாரும் பூரண ஒத்துழைப்பு வழங்குவதாக தெரிவித்துள்ளனர் எனத் தெரிவித்தார்.

உபதவிசாளரின் பிரேரணையை ஏற்று நகரசபை உறுப்பினர் சர்வானந்தன் வழிமொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேலும் சாவகச்சேரி நகரில் மக்கள் நடமாட்டம் அதிகமாக உள்ள பகுதிகளில் இடிதாங்கி அமைக்கப்பட வேண்டும் என்ற பிரேரணையையும் சாவகச்சேரி நகரசபை உப தவிசாளர் பாலமயூரன் சபைக்கு கொண்டு வந்தார். இதன்போது அண்மையில் சாவகச்சேரி மகளிர் கல்லூரி மற்றும் சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை மின் இணைப்புக்களில் மின்னல் தாக்கம் ஏற்பட்டதைச் சுட்டிக் காட்டி னார். (இ-30)

## பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான நேர்முகத்தேர்வும் பிரயோகப் பரீட்சையும்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளரால் 2017.07. 05 ஆம் திகதி வட மாகாண சபை இணையத்தளம் மூலமாக கோரப்பட்ட ஆட்சேர்ப்பு விளம்பரத்திற்கு அமைவாக வடக்கு மாகாண தமிழ் மொழி மூலப் பாடசாலைகளில் நிலவும் இலங்கைஆசிரியர்சேவையின் 3ஆம் வகுப்பு 1(அ) தரப் பதவிவெற்றிடங்களுக்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை-2017 (III) இற்கு விண்ணப்பித்திருந்தவர்களில் தகுதி பெற்றவர்கள் 2018. 06. 09 ஆம் திகதி நடத்தப்பட்ட திறந்த போட்டிப் பரீட்சைக்கு தோற்றியிருந்தார்கள்.

அவர்களில் எழுத்துப் பரீட்சையில் தகைமை பெற்ற 353 விண்ணப்பதாரிகளுக்குமான நேர்முகத் தேர்வுடன் இணைந்த பிரயோகப் பரீட்சை எதிர்வரும் 17.07.2018 (செவ்வாய்கிழமை), 18.07. 2018 (புதன்கிழமை) ஆம் திகதிகளில் காலை 9 மணி முதல் செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள வட மாகாண கல்வி அமைச்சில் நடைபெறவுள்ளது.

மேற்குறித்த தேர்விற்கு அழைக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் அனைவரும் அன்றைய தினம் தவறாது சமுகமளிக்குமாறுவடமாகாணகல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் அறிவித்துள்ளார்.

வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளரால்அனுப்பி வைக்கப்பட்ட பட்டியலில் உள்ள 353 விண்ணப்பதாரர்களுக்குமான நேர்முகத்தேர்வு அவர்களின் அழைப்புக் கடிதம் அவர்களின் சொந்த முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. மேலும் நேர் முகத் தேர்வுக்கு அழைப்பு விடுக்கப்பட்டவர்களின் பெயர் விபரம், நேர்முகத் தேர்வில் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள், பிரயோகப் பரீட்சைக்கு தயார்படுத்த வேண்டிய விடயப்பரப்புக்கள் என்பவற்றை வட மாகாண சபை இணையத்தளம் www.np.gov.lk மற்றும் வட மாகாண கல்வி அமைச்சின் இணையத்தளம் www.edumin.np.gov.lk எனும் முகவரியில் பார்வையிட முடியும் என கல்வியமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் அறிவித்துள்ளார். (இ

## சிறுவர் துஷ்பிரயோகங்கள் குறித்து அரையாண்டில் 185 வழக்குகள்

(ஏறாவூர்)

கிழக்கு மாகாணத்தில், இவ்வருட அரையாண்டில் சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பாக 185 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என, மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் ஆணையாளர் சிவகெங்கா சுதீஸ்னர் தெரிவித்தார். இதற்கமைய, கிழக்கு மாகாணத்தில் இவ்வாண்டு ஜனவரி முதல் ஜூன் வரையான ஆறு மாதகாலங்களில் பதிவாகியுள்ள சிறுவர் துஷ்பிரயோகங்களில், மட்டக்களப்பு மாவட்டத்திலேயே அதிகளவில் இவை. இடம்பெற்றுள்ளன எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

## இராஜாங்க அமைச்சர்களாக இருவர் நேற்று பதவியேற்பு

(கொழும்பு)

இராஜாங்க அமைச்சர்களாக இருவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் நேற்றுப் பதவியேற்றுக் கொண்டனர்.

உள்நாட்டு அலுவல்கள் பிரதி அமைச்சராக இருந்த



ஜே.சி. அலவத்துவல அதே அமைச்சுக்கான இராஜாங்க அமைச்சராகவும், மலைநாட்டு புதிய கிராமங்கள் பிரதி அமைச்சராக இருந்த லக்கி ஜெயவர்தன நீர்வழங்கல் துறை இராஜாங்க அமைச்சராகவும் பதவியேற்றுள்ளனர். (இ-7)

## குற்றவியல் தண்டனைகளை நடைமுறைப்படுத்த இலங்கை - தாய்லாந்து இடையே ஒப்பந்தம்

(கொழும்பு)

இலங்கைக்கும் தாய்லாந்திற்கும் இடையே குற்றவியல் தண்டனைகளை நடைமுறைப்படுத்துதல் தொடர்பான ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அழைப்பை ஏற்று, தாய்லாந்து பிரதமர் இலங்கைக்கு வரவுள்ள நிலையில் இதன்போதே குறித்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவுள்ளது.

தாய்லாந்து பிரதமர் ஜெனரல் பிரயுத் சான்-ஓ-சா இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயம்மேற்கொண்டுநாளை வியாழக்கிழமை இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

குறித்த விஜயத்தின் போது அவர் ஜனாதிபதி உள்ளிட்ட, அரசாங்கத்தின் உயர்மட்ட அதிகாரிகளை சந்தித்து உரையாடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, குற்றவாளிகளை பரிமாற்றுதல் மற்றும் குற்றவியல் தண்டனைகளை நடைமுறைப்படுத்தல் தொடர்பான ஒப்பந்தம், மூலோபாய பொருளாதார பங்காண்மை தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கை, ஆரம்பநிலை உற்பத்திகளின் பெறுமதி உட்சேர்ப்புடன் சார்பான தொழில்நுட்ப ஒத்துழைப்பு தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கை உள்ளிட்ட பல ஒப்பந்தங்கள் இதன்போது ஏற்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் பொலிஸ் உயர் அதிகாரி கைது

(கல்குடா)

கல்குடா பொலிஸ் நிலையத்தின் நிர்வாக பொறுப்பதிகாரி, பொலிஸ் பரிசோதகர் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் கைது செய்யப்பட்டுள்ளார்.

3 இலட்சம் ரூபா பணத்தை இலஞ்சமாக பெற்றுக் கொள்ளும் போது அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கோரளைப்பற்று பிரதேச செயலகத்தில் வைத்து இலஞ்சப் பணத்தைப் பெற்றுக் கொள்ளும் போது அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வர்த்தகர் ஒருவருக்கு பொலிஸ் நற்சான்றிதழ் வழங்குவதற்காக அவர் 5 இலட்சம் ரூபாவை இலஞ்சமாக கோரியுள்ளதுடன், அதில் 3 இலட்சம் ரூபாவை பெற்றுக் கொள்ளும் போது கைது செய்யப்பட்டுள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கர்ச்சிக்குமா இங்கிலாந்து சிங்கங்கள்? பதறுமா குரோஷியா!

## உலக கால்பந்தின் 2ஆவது அரையிறுதியில் இன்று மோதல்






### கடந்து வந்த பாதை

**குரோஷியா**

லீக் சுற்று
நைஜீரியாவை வீழ்த்தியது (2-0)
ஆர்ஜென்ரீனாவை பந்தாடியது (3-0)
ஐஸ்லாந்துடன் வெற்றி (2-1)
ரவுண்ட் 16
டென்மார்க்கை பெனால்டியில் வீழ்த்தியது 1-1 (3-2)
காலிறுதி
ரஷ்யாவை பெனால்டியில் மடக்கியது 2-2 (4-3)

**இங்கிலாந்து**

லீக் சுற்று
துனிசியாவை வீழ்த்தியது (2-0)
பனாமாவுடன் அமர்க்களம் (6-1)
பெல்ஜியத்துடன் வீழ்ந்தது (1-0)
ரவுண்ட் 16
கொலம்பியாவை பெனால்டியில் வீழ்த்தியது 1-1 (4-3)
காலிறுதி
சுவீடனுடன் வெற்றி (2-0)

உலக கிண்ணத் தொடரில் இன்று நடக்கும் இரண்டாவது அரையிறுதி போட்டியில் இங்கிலாந்து, குரோஷிய அணிகள் பலப்பரீட்சை நடத்துகின்றன.

28 ஆண்டுகளுக்குப் பின் அரையிறுதிக்குள் நுழைந்த இங்கிலாந்து அணி இன்று சாதிக்கும் பட்சத்தில், 52 ஆண்டுகளுக் குப் பின் இறுதிக்கு முன்னேறி சரித்திரம் படைக்கலாம்.

ரஷ்யாவில் 21ஆவது 'பிபா' உலக கிண்ண கால்பந்து தொடர் நடக்கிறது. கிண்ணத்துக்கான போட்டியில் இருந்து இதுவரை 29 அணிகள் வெளியேறிவிட்டன.

இந்நிலையில் மொஸ்கோவில் இன்று நடக்கும் இரண்டாவது அரையிறுதியில் இங்கிலாந்து (செல்லமாக மூன்று சிங்கங்கள்), குரோஷிய அணிகள் மோதுகின்றன.

**ரசிகர்கள் அதிகம்**

லீக் சுற்றில் 2 வெற்றி பெற்றாலும் பெல்ஜியத்துடன் தோற்ற போது சற்று சறுக்கியது இங்கிலாந்து. அடுத்து 'ரவுண்ட் 16' போட்டியில் 'பெனால்டி' வரை சென்று தான் இங்கிலாந்து கரை சேர்ந்தது.

இருப்பினும் ஆர்ஜென்ரீனா, போர்த்துக்கல், பிரேசில் உள்ளிட்ட முன்னணி அணிகள் வெளியேறிய நிலையில் இங்கிலாந்து பங்கேற்கும் போட்டிகள் 'ரிவி' பார்வையாளர்களை அதிகம் ஆக்கிரமித்துள்ளது.

பயிற்சியாளர் கரேத் சவுத்கேட்டின் துடிப்பான வியூகத்தால், இங்கிலாந்தின் ஏராளமான ரசிகர்களும் ஆதரவு தருகின்றனர். கோல்காப்பாளர் ஜோர்டன் பிக் போர்ட் நட்சத்திர வீரராக நம்பிக்கை அளிக்கிறார். சுவீடன் அணிக்கு எதிரான காலிறுதியில் இவரது சிறப்பான செயல்பாடுதான் அணியை அரையிறுதிக்கு கொண்டு வந்தது.

அணித் தலைவர் ஹரி கேன் இதுவரை 6 கோல் அடித்து, தங்க காலணி ('கோல்டன் பூட்') விருதுக்கான முதல் வீரராக உள்ளார். கடந்த போட்டியில் ஒரு கோல் கூட அடிக்காத இவர் இம்முறை வெற்றிக்கு உதவலாம். தவிர, ஹெண்டர்சன், ஸ்டெர்லிங், கடந்த முறை கோல் அடித்த டேல் அல்லி, மாகுயரேவும் கைகொடுக்கும் பட்சத்தில் 1966க்குப் பின் மீண்டும் கிண்ணம் வெல்ல முயற்சிக்கலாம்.

**எதிர்பாராத வருகை**

குரோஷிய அணி இத்தொடரில் சில ஆச்சர்யங்களை நிகழ்த்தலாம் என கணிக்கப்பட்டது. இதற்கேற்ப லீக் சுற்றில் ஆர்ஜென்ரீனாவை சாய்த்தது. இந்த அசத்தல்கள் தொடர, தற்போது 100 சதவீத வெற்றியுடன், 1998க்குப் பின் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

மத்திய கள பகுதியில் உலகளவில் சிறப்பாக திகழும் லூகோ மட்ரிக் (2 கோல்), ராகிடிச் என இருவரும் இந்த அணியில் இருப்பது பயிற்சியாளர் ஜலட்கோ டாலிக்கிற்கு பெரும் பலமாக உள்ளது. தவிர மரியோ மாண்ட்ஜுகிச், இவான் பெரிசிக், ரெபிக் என பலரும் கோல் அடிப்பதில் வல்லவர்கள் மட்டுமன்றி, கடந்த பத்தாண்டுகளாக தொடர்ந்து அணிக்காக விளையாடி வருவது பலம்.

**'ரப்பர் சிக்கன்' பயிற்சி**

அரையிறுதிக்கு தயாராக இங்கிலாந்து வீரர்கள் ரப்பர் சிக்கனை வைத்து ஜாலியாக பயிற்சியில் ஈடுபட்டனர். இரு பிரிவாக பிரிந்த வீரர்கள், இந்த சிக்கனை எதிரணி வீரர்கள் மீது எறிவர். அவர் தன் மேல் பட்டு விடாமல் விலக வேண்டும். போட்டியின் போது பந்தை லாவகமாக பெறுவதற்காக இப்படி பயிற்சி செய்தனர்.

**விடாவுக்கு தடையா!**

குரோஷியாவின் தற்காப்பு பகுதி வீரர் தோமா கோஜ் விடா. ரஷ்யாவுக்கு எதிராக காலிறுதியில் கூடுதல் நேரத்தில் கோல் அடித்தவர். இந்த வெற்றியை உக்ரைனுக்கு சமர்ப்பிப்தாக, துணை பயிற்சியாளர் இவிகா ஆலிச், விடா தெரிவித்தனர்.

ஏற்கெனவே உக்ரைனுடன் சர்ச்சை உள்ளதால் கோபமடைந்த ரஷ்யா, 'பிபா விடம்' புகார் தெரிவித்தது. இதனால் இவிகா ஆலிச்சை உடனடியாக திருப்பி அனுப்பியது குரோ ஷியா. தனது செயலுக்கு மன்னிப்பு கேட்ட விடாவை, 'பிபா' எச்சரித்தது.

தற்போது உக்ரைனுக்கு ஆதரவான இரண்டாவது வீடியோ வெளியிட்டார் விடா. இது எங்கு, எப்போது எடுக்கப்பட்டது என தெரிய வில்லை. இதனால் இன் றைய அரையிறுதியில் பங்கேற்க விடாவுக்கு தடை வரலாம் எனத் தெரிகிறது.




# விம்பிள்டன்: கெர்பர் அசத்தல்



விம்பிள்டன் டென்னிஸ் தொடரின் அரையிறுதிக்கு லாட்வியாவின் ஆஸ்டபென்கோவா, ஜேர்மனியின் கெர்பர் உள்ளிட்டோர் முன்னேறினர்.

லண்டனில், விம்பிள்டன் டென்னிஸ் தொடர் நடக்கிறது. இதன் பெண்கள் ஒற்றையர் பிரிவு காலிறுதியில் தரவரிசையில் 33 ஆவது இடத்திலுள்ள சுலோவாகியாவின் சிபுல்கோவா, லத்வியாவின் ஆஸ்டபென்கோவா (12ஆவது இடம்) சந்தித்தார். தொடக்கம் முதலே அசத்திய ஆஸ்டபென் கோவா முதல செட்டை 7-5 என வசப்படுத்தினார்.

தொடர்ந்து அசத்திய இவர் அடுத்த செட்டையும் 6-4 என வென்றார். ஒரு மணி நேரம் 22 நிமிடம் நடந்த போட்டியின் முடிவில், ஆஸ்டபென்கோவா 7-5, 6-4 என்ற நேர் செட் கணக்கில வெற்றி பெற்று, அரையிறுதிக்குள் நுழைந் தார்.

**செரினா வெற்றி**

மற்றொரு காலிறுதியில் ஜேர்மனியின் கெர்பர், ரஷ்யாவின் டேரியா கசட்கினாவை எதிர் கொண்டார். முதல் செட்டை 6-3 என எளிதாக கைப்பற்றிய கெர்பர், இரண்டாவது செட்டையும் 7-5 என தனதாக்கினார். முடிவில், கெர்பர் 6-3, 7-5 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்றார். அரையிறுதியில் ஆஸ்ட பென்கோவா - கெர்பர் மோத உள்ளனர்.

மற்றொரு போட்டியில் அமெரிக்காவின் செரினா 3-6, 6-3, 6-4 என இத்தாலியின் கமிலா ஜியார்ஜியை வீழ்த்தி அரையிறுதிக்குள் நுழைந் தார்.

**போட்ரோ போராட்டம்**

ஆண்கள் ஒற்றையர் பிரிவு 4வது சுற்றில் ஆர்ஜென்ரீனாவின் ஜுயன் மார்டின் டெல் போட்ரோ, பிரான்சின் கில்ஸ் சிமோனுடன் மோதினார். 4ஆவது இடத்திலுள்ள போட்ரோ எளிதில் வெல்வார் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், 53வது இடத்திலுள்ள சிமோன் கடும் நெருக்கடி கொடுத்தார்.

இதில் 4 மணி நேரம் 24 நிமிடம் போராடிய போட்ரோ 7-6, 7-6, 5-7, 7-6 என வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிருஷ்ணா சுட்டுப்படுகொலை! போதைப்பொருள் வியாபாரத்துடன் தொடர்புபடுத்தி பொலிஸார் சந்தேகம்

(கொழும்பு)

கொழும்பு மாநகர சபை உறுப்பினரும் நவோதய மக்கள் முன்னணியின் தலைவருமான கிருஷ்ணபிள்ளை கிருபானந்தனின் கொலை, போதைப்பொருள் வியாபாரத்துடன் தொடர்புடையதா? என்ற சந்தேகம் எழுந்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்தார்.



இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், கொழும்பில் 24 மணிநேரத்துக்குள் இரண்டு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றில் புறக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செட்டியார்தெருவில் பழக்கடையொன்றுக்குள் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் கொழும்பு மாநகர சபை உறுப்பினரான கிருஷ்ணா என்பவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த கிருஷ்ணா மீது கஞ்சா போதைப்பொருள் வியாபாரம் தொடர்பில் இரண்டு வழக்குகள் காணப்படுகின்றன. இதில் குற்றவாளியாக அடையாளப்படுத்தப்பட்ட இவர் தற்போது பிணையிலிருந்த நேரத்திலேயே இவ்வாறு துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி பலியாகியுள்ளார். இவரது மரணமானது போதைப்பொருள் வியாபாரத்தை மையப்படுத்தியே மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என சந்தேகம் எழுகின்றது.

எனினும் மேல்மாகாண சிரேஷ்ட பொலிஸ்மா அதிபரின் வழிகாட்டலின் கீழ் குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸாராலும், புறக்கோட்டை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் கீழான குழுவொன்றும் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கப்பலில் போதைப்பொருள் வைத்திருந்த இலங்கைப்பிரஜை மொரிஸியஸில் கைது

(கொழும்பு)

மொரிசியஸ் கப்பல் ஒன்றில் ஹெரோயின் போதைப்பொருளை வைத்திருந்த குற்றச்சாட்டின்பேரில் இலங்கையர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். ஹொங்கொங்கில் பதிவு செய்யப்பட்ட குறித்த கப்பல், மொரிஸியஸுக்கும் மடகஸ்காருக்கும் இடையில் சேவையில் ஈடுபட்டு வருகிறது.

இந்த கப்பலில் இந்தியா, இலங்கை உட்பட்ட நாடுகளின் பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர் . இந்த நிலையில் பொதி ஒன்றை சோதனையிட்ட மொரிஸியஸ் அதிகாரிகள் அதிலிருந்த ஹெரோயின் போதைப்பொருளை மீட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட போதைப்பொருள் இலங்கை ரூபாவின் பெறுமதியில் 63 மில்லியன் என தெரியவந்துள்ளது. இதனையடுத்து போதைப்பொருளை தம்வசம் வைத்திருந்த இலங்கைப்பணியாளர்கைது செய்யப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (இ-7)


சிவமயம்
ஓம் சரவணபவ! ஓம் நமசிவாய! ஓம் முருகா!



காரைநகர் களபூமி திக்கரை முருகன்
இன்று தேரில் ஆரோகணித்து அருட்காட்சி தரும்
வள்ளி, தெய்வானை சமேத
ஆறுமுகப் பெருமானை பக்தி பூர்வமாய் வழிபடுவோம்!

குமரா! புரமன் மகிழ் பாலா!
குகனே! கந்தா! சேனாதிபதியே!
சமரில் சக்திவேல் கரத்தில்
தாங்கி மயில் மீதூர்பவனே!

குமரி வள்ளிக்காதல! எம்
குறைகள் தீர்க்கும் வேலவனே
அமரில் தாரகன் தனை யழித்தாய்!
அடியன் என்னைக் காத்திடுக!

திக்கரை முருகப் பெருமானே
எம்மைக் காக்க வேண்டும்.

குமாரக் கடவுளே, பரமசிவன் மகனே, குகனே, கந்தப் பெருமானே! தேவர்களின் சேனைத் தலைவனே, வேலேந்தியவனே, மயில் வாகனனே, வள்ளிபதியே, அடியவர்களின் துயரைக் களைபவனே, பிரபுவே தேவரீர் எம்மை எப்போதும் காத்து அருள வேண்டும். இத்தகைய விசேட குணங்களால் உலகத்தையே காக்கும் திறமை குமாரக் கடவுளுக்கே உரித்தானதாகையால், நன்மையை விரும்பும் நல்லோர்களால் வழிபடத்தக்கவராகிய அருள்மிகு திக்கரை வள்ளி, தெய்வானை சமேத ஆறுமுகப் பெருமானை நாமும் வழிபட்டு பேரருள் பெற்று உய்வோமாக!


அன்பே சிவம், அன்பே முருகன், ஓம் சரவணபவ!



க.கு.க. சிவபாலன் (போசகர்)
ஈழத்துச் சிதம்பரம்
மாணிக்கவாசக மடாலயம்.

(சி-3201)


# 80 பயணிகளுடன் பயணித்த பேருந்தின் சக்கரம் திடீரென தனியாகப் பயணம்



(பதுளை)

பாடசாலை மாணவர்கள் உட்பட 80 பேரை ஏற்றிச்சென்ற பேருந்தின் சக்கரம் ஒன்று தனியாக பயணித்தமையால் பதற்ற நிலை ஏற்பட்டது.

பதுளை - மஹியங்கனை வீதியில் பயணித்த பேருந்தின் முன்பக்கச்சக்கரம் திடீரென கழன்று சென்றமையால், பயணிகள் மத்தியில் பதற்ற நிலை ஏற்பட்டது. எனினும் இதனால் ஏற்படவிருந்த பாரிய விபத்து தவிர்க்கப்பட்டுள்ளது. பயணித்துக்கொண்டிருந்த பேருந்தின் வலது பக்க சக்கரம் உட்பட பல பாகங்கள் ஒன்றாக உடைந்து விழுந்துள்ளன. பேருந்தில் ஏற்பட்ட கோளாறே இந்த சம்பவத்திற்கு காரணமாகியுள்ளது.

இந்த விபத்து ஏரிக்கு அருகில் அல்லது நீர் வீழ்ச்சிக்கு அருகில் நிகழ்ந்திருந்தால் பாரிய உயிர்ச்சேதம் ஏற்பட்டிருக்கும் எனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (இ-7)

## ‘ஞானச்சுடர்’ மலர் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு செல்வச் சந்நிதியான் ஆச்சிரம சைவ, கலை பண்பாட்டுப் பேரவையினால் வெளியிடப்பட்டு வரும் “ஞானச்சுடர்” 246 ஆவது மலர் வெளிவந்துள்ளது. (இ)

# மஹாநாம, திஸாநாயக்க மீண்டும் விளக்கமறியலில்

இலஞ்சம்பெற்றுக்கொண்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ஜனாதிபதி செயலகத்தின் முன்னாள் பிரதானி பேராசிரியர் ஐ.கே மஹாநாம மற்றும் அரச மரக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் பீ.திஸாநாயக்க ஆகியோரை மீண்டும் விளக்கமறியலில் வைக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அவர்களை நாளை மறுதினம் 13ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்க கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது. (இ-7)

# இராசி பலன்

**மீனம்:** புதிய நபர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு.

**மேடம்:** உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவமொன்று நடைபெறலாம், பகையொன்று நட்பாகலாம்.

**இடபம்:** பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தொலைபேசி வழியில் சுபதகவல்கள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு, வாக்கு மேன்மையுண்டு.

**மிதுனம்:** ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் செலவுகள் ஏற்படலாம், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம்.

**கும்பம்:** பிள்ளைகளின் கல்வி நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும், சுற்றத்தவர்களால் சந்தோசம் கிடைக்கும்.

**கடகம்:** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், மற்றவர்களால் ஏற்றம் பெறுவீர்கள், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும்.

**மகரம்:** சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், ஆரோக்கியம் சீராகும், புதிய பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு.

**சிம்மம்:** இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், கௌரவமான நாள்.

| | | | |
|---|---|---|---|
| | | சந் | சூரி |
| | இராசி பலன் | | ராகு, புத |
| கேது, செவ் | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>விசாகம், அனுசம்<br>பி.ப. 1.00 மணிக்கு | | சுக் |
| சனி | | குரு | |

11.07.2018
ஆனி 27, புதன்கிழமை
சூரிய உதயம் காலை 5.59 மணிக்கு
திரயோதசி பிற்பகல் 2.06 மணிவரை
மிருகசீரிடம் பின்னிரவு 11.23 மணிவரை
சுபநேரம் 4.29-5.59 மணிவரை
இராகுகாலம் 11.59-1.29 மணிவரை

வளவன்

**தனுசு:** நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள், எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி பெறுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**விருச்சிகம்:** உடல் நலனில் கவனம் எடுக்க வேண்டிய நாள், தேவையில்லாமல் புதிய விடயங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, முயற்சிகளில் சிறு தாமதங்கள் ஏற்பட வாய்ப்புண்டு.

**துலாம்:** வெளியூர்ப் பயணங்களால் ஆதாயம் ஏற்படும், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், தந்தைவழி உறவில் மனநிறைவான செய்தியொன்று வந்து சேரலாம்.

**கன்னி:** கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், புதிய திட்டங்கள் தீட்டி ஆதாயம் காண முற்படுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில்

# இணைப்புப் பாதையில் தடை ஏன்?

## வைத்திய அத்தியட்சகர் விளக்கம்



(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் இடம்பெறும் கிளினிக்கிற்கு (மருத்துவ ஆலோசனைக்கு) ஆட்டோக்கள் மற்றும் மோட்டார் சைக்கிளில் வரும் நோயாளர்கள் வைத்தியசாலையின் பின்பக்க வாயில் கதவின் ஊடாகவே அனுமதிக்கப்படுகின்றனர்.

மருத்துவ ஆலோசனைகளுக்கு நடந்து வருவோர் வழமை போல் வைத்தியசாலையின் முன் பகுதி ஊடாக அனுமதிக்கப்படுகின்றனர்.

வைத்தியசாலையின் முன் பக்கத்தினூடாக கிளினிக் செல்ல முடியாத வகையில் கம்பி போட்டு பாதை தடை செய்யப்பட்டிருப்பதாகவும், இதனால் ஆட்டோ சாரதிகள் வைத்தியசாலையை சுற்றி சென்று நோயாளர்களை வைத்தியசாலையின் பின் பகுதியில் இறக்குவதற்கு அதிக பணம் அறவிடுவதாகவும், ஒரு கிலோமீற்றர் தூரம் மேலதிகமாக சுற்றியே கிளினிக் இடத்தை சென்றடைய வேண்டியிருப்பதாகவும், இதனால் நோயாளர்கள் பல அசௌகரியங்களுக்கு உள்ளாவதாகவும் விசனம் வெளியிடப்பட்டது.

இது தொடர்பில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் அச்சுதனிடம் கேட்ட போது.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையானது ஏ-9 வீதிக்கும் -டச்சு வீதிக்கும் இடைப்பட்ட பாரிய நிலப்பரப்பில் அமைந்துள்ளது. இதன் காரணமாக ஏ-9 வீதியில் இருந்து டச்சு வீதிக்கு செல்பவர்களும் டச்சு வீதியில் இருந்து ஏ-9வீதிக்கு செல்பவர்களும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை வளாகத்தை குறுக்குப் பாதையாக பயன்படுத்துகின்றனர். இதன் காரணமாக வைத்தியசாலை வளாகத்திற்குள் போதைப்பொருள் பாவனை உள்ளிட்ட குற்றச் செயல்கள் இடம்பெறுகின்றன. அதனைக் கண்காணிப்பதற்கு எம்மிடம் போதிய பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இல்லை.

இதன் காரணமாகவே ஆதார வைத்தியசாலையில் உள்ள இணைப்பு பாதையில் திறந்து மூடும் வசதி கொண்டதான தடை ஒன்று இட்டுள்ளோம். அத்துடன். அந்தத் தடையுள்ள பகுதியில் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்.

கிளினிக் வருபவர்களில் விசேட தேவை உள்ளவர்கள் மற்றும் நடக்க இயலாதவர்கள் குறித்த தடைப் பகுதி ஊடாக ஆட்டோவில் செல்ல அனுமதிக்கப்படுகின்றனர். இதனை கம்பி போட்டு பாதை முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது என் பது உண்மைக்கு புறம்பான விடயம். ஆட்டோவில் வருபவர்கள் வைத்தியசாலையைச் சுற்றிச் சென்று பின்பக்க வாயிலில் இறங்குவதற்கு மேலதிகமாக 50மீற்றர் தூரமே சுற்றிச் செல்ல வேண்டியிருக்கும்.

இதன்காரணமாக ஆட்டோ கட்டணம் அதிகரிப்பதற்கு எந்தவொரு வாய்ப்பும் இல்லை. டச்சு வீதியால் கிளினிக் வரும்நோயாளர்கள் நேரடியாக வைத்தியசாலையின் பின்பக்க வாசல் வழியாக உள்நுழைய முடியும். ஏ-9 வீதியால் வாகனங்களில் வருபவர்கள் வைத்தியசாலைக்கு அருகாமையில் உள்ள பாதையூடாக வைத்தியசாலையின் பின் பக்கத்தை சென்றடைய முடியும். வைத்தியசாலையின் முன் பகுதி ஊடாக மருத்துவ ஆலோசனைக்கு வருபவர்கள் குறித்த பாதை ஊடாக அனுமதிக்கப்படுகின்றனர்.

இதன்காரணமாக நோயாளர்கள் எந்த விதத்திலும் அசௌகரியங்களை எதிர்கொள்ள வாய்ப்பில்லை. வைத்தியசாலையின் நன்மை கருதியே குறித்த பாதை தற்காலிகமாக திறந்து மூடும் வசதி கொண்டதாக தடை செய்யப்பட்டுள்ளதே தவிர நோயாளர்களை அசௌகரியத்திற்கு உள்ளாக்கும் நோக்கம் எமக்கு இல்லை. எமக்கு போதிய பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் கிடைக்கும் பட்சத்தில் நோயாளர்கள் நலன் கருதி இந்த பாதை தடை நீக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-30)

## மணிக்கோபுர கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம் ஸ்ரீ கந்த சுவாமி ஆலயத்திற்கு லண்டன்மாநகரிலிருந்து கொண்டு வரப்பட்ட ஆயிரம் கிலோ (1000kg) நிறையுடைய கண்டாமணி எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 11 மணி முதல் 11.55 மணி வரையுள்ள சுபமுகூர்த்தத்தில் பிரதிஷ்டையும் மணிக் கோபுர கும்பாபிஷேகமும் நடைபெறும். (இ

## தண்டவாளத்தில் தவறி விழுந்தவரின் காலில் காயம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி மிருசுவில் பகுதியில் கடந்த ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணியளவில் மோட்டார் சைக்கிளின் பின் இருக்கையில் இருந்து பயணித்தவர் மோட்டார் சைக்கிள் புகையிரத தண்டவாளத்தில் ஏறும் போது தடுக்கி விழுந்ததில் காலில் காயமடைந்துள்ளார்.

காயமடைந்தவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இச் சம்பவத்தில் மிருசுவிலைச் சேர்ந்த 67வயது மகாலிங்கம் என்பவரே காயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (இ-30)




## மூக்குக் கண்ணாடிகள் வழங்கல்



(சாவகச்சேரி)

சாவகச்சேரி -மதுவன் சனசமூக நிலையத்தில் இடம் பெற்ற பொலிஸ் நடமாடும் சேவையின் இறுதி நாளான கடந்த ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் 27 பயனாளிகளுக்கு மூக்குக் கண்ணாடிகள் வழங்கி வைக்கப்பட்டன. மூக்குக்கண்ணாடிகளை சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தலைவர் றெமின்டியஸ் வழங்கினார். (இ-30)

## ரூ.33 இலட்சம் நிதியொதுக்கீட்டில்

# நுணுவில் சின்னக்குளம் புனரமைப்பு ஆரம்பம்



(சாவகச்சேரி)

கட்டைவேலி நுணுவில் சின்னக்குளம் புனரமைப்பு பணிகளுக்காக 33 இலட்சம் ரூபாநிதி விவசாய பிரதி அமைச்சர் அங்கஜன் இராமநாதனால் வழங்கப்பட்டு நிர்மாணப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்த நுணுவில் சின்னக் குளத்தை பிரதேச மக்கள் விவசாய நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துவதோடு. நீராடுவதற்கான கட்டுப்படி அமைப்புக்கள் குறித்தும், கால்நடைகளுக்கான நீர்த் தேவைகளையும் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் சாய்வான குளக்கட்டு வசதிகளையும் புனரமைப்பின் போது ஏற்படுத்தி தருமாறு பிரதேச மக்கள் கோரிக்கை ஒன்றினை முன் வைத்திருந்தனர்.

குளப்புனரமைப்பு நடவடிக்கைகள் தொடர்பாக ஆராய சென்றிருந்த போது. அங்கஜனின் பிரத்தியேக செயலாளரும் கரவெட்டி பிரதேச சபை உறுப்பினருமான இராமநாதனிடம் பிரதேச மக்கள் இவ்வாறு சுட்டிக்காட்டியிருந்தனர். (இ-30)

## "வேண்டியதருளும் வேம்படிக் கந்தா" இசைப்பாடல் தொகுப்பு வெளியீடு

(சாவகச்சேரி)

சாவகச்சேரிமட்டுவில் அம்பலந்துறை அருள்மிகு வேம்படிக் கந்தசாமி திருக்கோவில் வேம்படிக் கந்தா புகழ்பாடும் "வேண்டியதருளும் வேம்படிக் கந்தா" இசைப்பாடல் தொகுப்பு வெளியீட்டு விழா எதிர்வரும் 16 ஆம் திகதி திங்கட்கிழமை இரவு 8 மணியளவில் ஆலய முன்றலில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கணக்கியல்துறைத் தலைவர் பேராசிரியர் பா.நிமலதாசன் தலைமையில் இடம்பெறும். இதில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் பல்கலைக்கழக தமிழ்த்துறைப் பேராசிரியர் கி.விசாகரூபன் கலந்து கொள்வார். இசைப்பாடல் தொகுப்பு வெளியீட்டுரையை நுவரெலியா ஸ்ரீ பாத தேசிய கல்வியியற்கல்லூரி விரிவுரையாளர் வரணியூர் சைவப்புலவர் சி.கா.கமலநாதன் வழங்குவார். (இ-8)

## "முகிலெனக்கு துகிலாகும்" கவிதை நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

கவிஞர் வடிவழகையனின் "முகிலெனக்கு துகிலாகும்" கவிதைநூல்வெளியீட்டுவிழா எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் 3.05 மணியளவில் நல்லூர் ஸ்ரீ துர்க்கா மணி மண்டபத்தில் யாழ்.பல்கலைக் கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீட பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பியின் தலைமையில் இடம்பெறும்.

இதில் ஆசியுரையினை கலாநிதி ஆறு. திருமுருகன், வரவேற்புரையினை சமூக சேவை உத்தியோகத்தர் எழுத்தாளருமான வே.தபேந்திரன், வாழ்த்துரையினை பலாலி ஆசிரியர் கலாசாலை ஓய்வு நிலை அதிபர் சோ.பத்மநாதன், வெளியீட்டுரையினை யாழ்.தமிழ்ச்சங்க செயலாளர் இ.சர்வேஸ்வரா, நயப்புரையினை பேராதனை பல்கலைக்கழக தமிழ்த்துறை பேராசிரியர் வ.மகேஸ்வரன், மதிப்பீட்டுரையினை செந்தமிழ் சொல்லருவி க.லலீசன், தோழமையுரையினை சமூக சேவை உத்தியோகத்தர் வரணியூர் வே.சிவராஜா ஆகியோர் நிகழ்த்துவர். (இ)

## பவளவிழாவும் பரிசளிப்பும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மானிப்பாய் சென்ற் ஆன்ஸ் றோ.க.த.க. பாடசாலையின் பவளவிழாவும் பரிசளிப்பு நிகழ்வும் நூல் வெளியீடும் கலைநிகழ்வுகளும் எதிர்வரும் சனிக்கிழமை முற்பகல் 9 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் அதிபர் தலைமையில் இடம்பெறும். (இ-8)



யாழ்.மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியின் பரிசில் நாள் நிகழ்வுகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது. பாடசாலை அதிபர் த.அம்பலவாணர் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் கலந்து கொண்டார். (படங்கள்:-சுபேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4,000 ஈழத் தமிழ் அகதிகளை கப்பலில் அனுப்புகிறது இந்தியா

## இலங்கை அரசுக்கு தகவல்–சுவாமி டுவிட்



(சென்னை)

தமிழ்நாட்டில் தங்கியுள்ள 4000 இலங்கைத் தமிழ் அகதிகளை கப்பல்மூலம் இலங்கைக்குத் திருப்பியனுப்ப நடவடிக்கை எடுத்துள்ளது. இதுபற்றி.இலங்கை அரசாங்கத்துக்கு இந்திய வெளிவிவகார அமைச்சு தகவல் அனுப்பியுள்ளது.

பா.ஜ.கவின் மாநிலங்களவை உறுப்பினரான சுப்பிரமணியன் சுவாமி இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் இதுபற்றிய பதிவு ஒன்றை இட்டுள்ளார்.

"இலங்கை அகதிகளை தாயகத்துக்கு திருப்பி அனுப்புவதற்கான நடவடிக்கையை ஆரம்பிக்குமாறு, கடிதம் மூலம் விடுத்த கோரிக்கையை ஏற்று, நடவடிக்கை எடுத்த இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஸ்மா சுவராஜ"க்கு எனது நன்றி. முதற்கட்டமாக 4000 அகதிகளை கப்பல்மூலம் அனுப்பி வைக்கவுள்ளதாக, இலங்கை அரசாங்கத்துக்கு இந்திய அரசாங்கம் அறிவித்துள்ளது.

இலங்கை அரசாங்கம் அவர்களை மீளக்குடியமர்த்த நடவடிக்கை எடுக்கும்" என்றும் சுவாமி டுவிட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகப் பாதுகாப்பு ஆலோசகர் கப்டன் அசோக் ராவ் கடந்த மாதம் 28 ஆம் திகதி தலைமன்னார் இறங்குதுறையின் நிலையைப் பார்வையிட்டிருந்தார்.

தலைமன்னாருக்கு கப்பல் மூலம், அகதிகளை அனுப்பி வைக்கும் நோக்கில், அவரது இந்த ஆய்வுப் பயணம் இடம்பெற்றிருக்கலாம் என்றும் கருதப்படுகின்றது: (இ-7)




# நாமலுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)

சட்டவிரோதமாகப் பெறப்பட்ட 30 மில்லியன் ரூபா நிதியைப் பயன்படுத்தி கவர்ஸ் கோப்பரேட் எனும் நிறுவனத்தில் முதலீடு செய்த குற்றச்சாட்டு தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட 6 பேருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு ஒத்தி வைக் கப்பட்டுள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நீதிபதி சம்பத் அபேகோன் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இதன்போது சாட்சியாளருக்கு சுகயீனம் ஏற்பட்டுள்ளதாக முறைப்பாட்டாளர் சார்பான சட்டத்தரணி நீதிமன்றத்திற்கு தெரிவித்ததையடுத்து. அடுத்த விசாரணையின் போது சாட்சியாளரை ஆஜராகுமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

சட்டவிரோதமாக பெறப்பட்ட 30 மில்லியன் ரூபா நிதியைப் பயன்படுத்தி கவர்ஸ் கோப்பரேட் எனும் நிறுவனத்தில் முதலீடு செய்தமை ஊடாக நிதி மோசடி சட்டத்தின் கீழ் குற்றம் சுமத்தப்பட்டு பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட 6 பேருக்கு எதிராக சட்டமா அதிபரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்குத. (இ-7)

# கேள்வி அறிவித்தல்-கமநல அபிவிருத்தித் திணைக்களம், முல்லைத்தீவு

தலைவர், மாவட்ட பெறுகைக்குழு / மாவட்ட உதவி ஆணையாளர், கமநல அபிவிருத்தித் திணைக்களம், முல்லைத்தீவு சார்பாக முல்லைத்தீவு மாவட்டத்தின் கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்கு கீழ் உள்ள குளங்கள், அணைக்கட்டு மற்றும் கால்வாய் வேலைக்காக தகைமையுடையோரிடம் இருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக் கேள்விகள் கோரப்படுகின்றன.

பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்ததாரர்களும் கேள்வி கோருவதற்கு தகுதியுடையவராவர்.

- நிர்மாணப்பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தால் இக்ராட் (ICTAD/CIDA) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்ததாரரை பதிவு செய்யும் திட்டத்தின் கீழ் உள்ள அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்ததாரர் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.
- இக்ராட் (ICTAD/CIDA) வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதியளவு ஒப்பந்தங்களை மேற்கொண்ட ஆற்றலைக் கொண்டிருக்க வேண்டும்.
- நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 04/2016 (i) இலக்க 16.03.2016 ஆம் திகதிய நிதிச் சுற்றறிக்கைக்கு அமைவாக வடக்கு மாகாணத்தைச் சார்ந்தவர்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும்.
- ஒப்பந்ததாரர் மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்கு உட்பட்டு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் இருக்கக் கூடாது.

1. விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடத்தப்படும்.
2. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் உள்ளக்கப்பட்டுள்ளது.
3. ஆர்வமுள்ள தகைமையுடைய விலைக்கேள்வியாளர்கள் கமநல அபிவிருத்தித் திணைக்களம், முல்லைத்தீவு எனும் முகவரியில் 10.07.2018 தொடக்கம் முற்பகல் 9.00 மணியிலிருந்து இருந்து மாலை 2.30 வரை விலைக் கேள்வி ஆவணங்களை பரிசோதனை செய்யலாம் என்பதுடன் மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம்.
4. ஆங்கிலமொழி மூலமான விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியினை முல்லைத்தீவு கமநல அபிவிருத்தித் திணைக்களத்தில் எழுத்துமூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 10.07.2018 முதல் 31.07.2018 வரை வேலைநாட்களில் காலை 9.00 மணியிலிருந்து மாலை 2.30 மணிவரையான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத தொகையான 1000.00 கட்டணமாக செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.
5. மூடி சீல் வைக்கப்பட்ட விலைக்கேள்விகள் யாவும் தலைவர், மாவட்ட பெறுகைக்குழு. கமநல அபிவிருத்தித் திணைக்களம், முல்லைத்தீவு என்ற முகவரிக்கு 01.08.2018 ஆம் திகதியன்று பி.ப ஒரு மணிக்கு அல்லது அதற்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பிவைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலையின் பெயர் மற்றும் கேள்வி இலக்கத்தினை தபால் உறையின் இடதுமேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விகள் யாவும் மேற்குறிப்பிட்ட முகவரியில் நேரடியாக வருகை தரவிரும்பும் விலைக்கேள்வியாளர்கள் அல்லது பிரதிநிதிகள் முன்னிலையில் 01.08.2018 ஆம் திகதி பி.ப 1.30 மணிக்கு திறக்கப்படும். கேள்விகளின் மூலப்பிரதி (Original) தனியாகவும் நகல் (copy) தனியாகவும் இரு உறைகளில் சமர்ப்பித்தல் வேண்டும்.
6. கேள்விகளை ஏற்றுக் கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைச் சபையின் இறுதித் தீர்மானத்திற்கு அமைவானதாகும்.
7. கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட கேள்வியானது (Bid) கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதியில் இருந்து 90 நாட்களுக்கு செல்லுபடியாகும் விதத்திலும் கேள்விப்பிணைபொறுப்பு (Bid Security) 01.11.2018 ம் திகதி வரை செல்லுபடியானதாகவும் இருத்தல் வேண்டும்.
8. VAT பதிவு பத்திரம் உள்ளவர்கள் Bid உடன் இணைக்கவும் இணைக்காத பட்சத்தில் VAT கொடுப்பனவு வழங்கப்படமாட்டாது.
9. கீழ் குறிப்பிடும் வேலைகளுக்கான உங்களுடைய வாகன தகவல், வங்கி கணக்கு அறிக்கை, கடந்த கால வேலை விபரங்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தரின் முழுவிபரங்களையும் சமர்ப்பிக்க வேண்டும்.

| இல | ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்த பெயர் | மதிப்பீட்டு தொகை (மில்லியன் வரி நீங்கலாக) | கேள்விப் பிணைத் தொகை செல்லுபடிக் காலம் | வேண்டப்படும் ICTAD தரம்/ பதிவு | கேள்விப் பிணைத் தொகை | கமநல சேவை நிலையம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | Mu/DAD/ Tender/2018/39-19 | கரம்பைக்குளம் | 3.33Mn | 01/11/2018 | C8 அல்லது அதற்கு மேல் | 35,000.00 | துணுக்காய் |
| 2 | Mu/DAD/ Tender/2018/39-20 | கொல்லன்குளம் | 4.16Mn | | | 43,000.00 | துணுக்காய் |
| 3 | Mu/DAD/ Tender/2018/39-21 | வேணாவில்குளம் | 2.01Mn | | | 25,000.00 | உடையார்கட்டு |
| 4 | Mu/DAD/ Tender/2018/39-22 | அம்மிவைத்தகுளம் | 4.07Mn | | | 41,000.00 | பாண்டியன்குளம் |
| 5 | Mu/DAD/ Tender/2018/39-23 | உழவன்ஏரிக்குளம் | 4.17Mn | | | 43,000.00 | பாண்டியன்குளம் |
| 6 | Mu/DAD/ Tender/2018/39-24 | பாலைக்கட்டுவான் குள கால்வாய் | 3.32Mn | | | 35,000.00 | முள்ளியவளை |
| 7 | Mu/DAD/ Tender/2018/39-25 | சொக்கன்குள கால்வாய் | 2.36Mn | | | 25,000.00 | துணுக்காய் |
| 8 | Mu/DAD/ Tender/2018/39-26 | வெளிக்கோணமடுக்குளம் | 4.16Mn | | | 43,000.00 | ஒட்டுசுட்டான் |
| 9 | Mu/DAD/ Tender/2018/39-27 | கண்காணியகுளம் | 4.16Mn | | | 27,000.00 | ஒட்டுசுட்டான் |
| 10 | Mu/DAD/ Tender/2018/39-28 | கோடாலிக்கல்லு கால்வாய் | 4.16Mn | | | 43,000.00 | ஒட்டுசுட்டான் |

**தலைவர், மாவட்ட பெறுகைக்குழு,**
**கமநல அபிவிருத்தித் திணைக்களம், முல்லைத்தீவு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணலுக்குப் பதிலாக கிரவல்

# மாற்றுத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நிர்மாணிக்கப்பட்ட வீடு கையளிக்கும் நிகழ்வு

### கிளிநொச்சியில் நேற்று நடைபெற்றது




(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் மாற்றீட்டுத் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி புதி தாக நிர்மாணிக்கப்பட்ட வீடு கையளிக்கும் நிகழ்வு நடைபெற்றுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் மணலுக்குப் பதிலாக கிரவல் மண்ணைப் பயன்படுத்தி மாற்றீட்டுத் தொழில்நுட்பத்தின் ஊடாக வீட்டுத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும்செயற்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

அந்தவகையில் கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட தருமபுரம் பகுதியில் மாற்றீட்டுத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அமைக்கப்பட்ட வீடு உரிய பயனாளியிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று முற்பகல் 10 மணிக்கு நடைபெற்றுள்ளது.

இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், கண்டாவளைப் பிரதேச செயலாளர் திருமதி ஜெயராணி பரமோதயன், கபிரெட் நிறுவனத்தின் தேசிய பணிப்பாளர் மற்றும் கிராம உத்தியோகத்தர்கள், பிரதேச உத்தியோகத்தகர்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இலங்கையில் மாற்றீட்டுத் தொழிற்நுட்பத்தைப் பயன்படுத்தி இரண்டாயிரத்து 315 வீடுகளை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த கபிரெட் நிறுவனம் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் 400 வீடுகள் தலா ஏழு இலட்சத்து 75 ஆயிரம் ரூபா செலவில் குறித்த வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)

## ஐ.தே.கட்சியின் அலுவலகத்தை

# போக்குவரத்து பிரதி அமைச்சர் கிளிநொச்சியில் திறந்து வைத்தார்



போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் பிரதி அமைச்சர் கிளிநொச்சிக்கு விஜயமொன்றை மேற்கொண்ட அசோக அபயசிங்க ஐக்கிய தேசிய கட்சியின் அலுவலகத்தை திறந்து வைத்தார். குறித்த நிகழ்வு நேற்று முற்பகல் 11.30 மணியளவில் இடம் பெற்றது.

கிளிநொச்சி உதயநகர் பகுதியில் குறித்த அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது. இதன் போது இன்றைய நாளின் (நேற்றைய)நினைவாக 200 தென்னங் கன்றுகளும் மக்களிற்கு பகிர்ந்தளிக்கப் பட்டன. கிளிநொச்சி மாவட்ட ஐ.தே.கட்சியின் அமைப்பாளர் டாக்டர் விஜயராஜன் தலைமையில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

இதேவேளை பிரதி அமைச்சர் கட்சி அலுவலக பெயர்ப்பலகையையும் திறந்து வைத்தார். (2)




# வீதி செப்பனிடும் பணியை தாமதமின்றி துரிதப்படுத்துங்கள்

## வவுனியா நகரசபைத் தலைவர் பணிப்பு

(பனிக்கன்குளம்)

வவுனியா மாவட்டத்தின் குருமன்காடு காளிகோவில் வீதியில் இருந்து செல்லும் பிரதான வீதி செப்பனிடுவதற்காக கடந்த ஒரு மாத காலமாக தோண்டப்பட்ட நிலையில் காணப்படுகின்றது. இதனை உடனடியாகத் திருத்தி பாதுகாப்பான பயணத்தை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பொது மக்கள் கோரியுள்ளனர். அதனையடுத்து வீதிப் பணியை உடன் துரிதப்படுத்துமாறு சம்பந்தப்பட்டவர்களுக்கு வவுனியா நகர சபைத் தலைவர் இ.கௌதமன் தெரிவித்துள்ளார்.

வவுனியா குருமன்காடு காளிகோவில் வீதியிலிருந்து செல்லும் பிரதான வீதியின் ஒரு குறிப்பிட்ட பகுதியில் கடந்த ஒருமாத காலத்திற்கு முன்னர் செப்பனிடுவதற்காக அப்பகுதி தோண்டப்பட்ட நிலையில் காணப்படுகின்றது. இன்று வரையில் அதை நிரவி பாதுகாப்பான பயணத்தை மேற்கொள்வதற்கு அனுமதிக்கவில்லை என பயணிகள் தெரிவித்துள்ளனர். இதனால் அவ் வீதியால் செல்லும் பாரிய கனரக வாகனங்கள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதுடன் இரவு-பகல் வேளைகளில் விபத்துக்களும் ஏற்படும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது. பாடசாலை மாணவர்கள், ஆடைத் தொழிற்சாலை வாகனங்கள், அரச திணைக்களங்களுக்குச் செல்லும் ஆசிரியர்கள், அதிபர்கள், அதிகாரிகள் பெரும் நெருக்கடி நிலையில் தமது பயணத்தை எதிர் கொண்டுள்ளனர். வவுனியா நகர சபையினரால் ஒப்பந்ததாரரிடம் வழங்கப்பட்டுள்ள இவ்வீதி திருத்தும் பணிகள் கடந்த ஒரு மாதகாலமாக திருத்தி முடிக்கப்படவில்லை என்றும் இதனை உடனடியாக திருத்தி பாதுகாப்பான பயணத்தை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பொது மக்கள் கோரியுள்ளார்கள். இவ்விடயம் தொடர்பாக நகர சபைதலைவரிடம் தொடர்பு கொண்டு வினவியபோது,

வவுனியா ணருமன்காடு காளிகோவில் வீதி பணிகள் இடை நடுவே நிறுத்தப்பட்டுள்ளதாக அண்மையில் எமக்கு முறைப்பாடு கிடைத்துள்ளது. இது தொடர்பாக தொழில்நுட்ப உத்தியோகத்தர். ஒப்பந்ததாரர் ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் பணிகளை உடன் துரிதப்படுத்துமாறும் வவுனியா நகரசபைத் தலைவர் இ. கௌதமன் தெரிவித்துள்ளார். (2-281)

# அமைச்சர் அசோக அபயசிங்க கிளிநொச்சி பேருந்துசாலைக்கு விஜயம்



போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் பிரதி அமைச்சர் அசோக அபயசிங்க நேற்றுக் காலை 8.30 மணியளவில் கிளிநொச்சி அரச பேருந்து சாலைக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

இவ்விஜயத்தின்போது அமைச்சர் அரச பேருந்து சேவைகள் மற்றும் பேருந்து சாலையில் நிலவுகின்ற பிரச்சினைகள் தொடர்பில் நேரில் பார்வையிட்டு ஊழியர்களுடன் கலந்துரையாடினார். (2)

# வடக்கு மாகாண மட்ட ஆங்கில தினப்போட்டி முடிவுகள்

(கிளிநொச்சி)

வடக்கு மாகாண மட்ட ஆங்கில தினப் போட்டி அண்மையில் நடைபெற்றது. இதில் கிளிநொச்சிகல்விவலயத்தில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் பெயர் விபரங்களும் பாடசாலைகளும் கிளிநொச்சி வலய உதவிக் கல்விப் பணிப்பாளரினால் (ஆங்கிலம்) அறி விக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய சொல்வதெ முதல் தரம்- 6-சிவகுமார் ஆர்வலன் (கிளி/ கிளிநொச்சி ம.வி) முதலாமிடம், கட்டுரை எழுதல்- மோகன் தாஸ் புகழினி (கிளி/ கிளி நொச்சி ம.வி)இரண்டாமிடம் , நாடகம்- ஆரம்பப் பிரிவு (கிளி/ கிளிநொச்சி ம.வி) இரண்டாமிடம், குழு உரையாடல் (கிளி/ புனித திரேசா பெண்கள் கல்லூரி)இரண்டாமிடம், உறுப்பெழுத்து- தரம்-10 விஜய குமார் சபாரிகா (கிளி/ கிளி நொச்சி இந்துக் கல்லூரி) மூன்றாமிடம், கவிதை- தரம்-5 நிசாந்தன் அபிசேகா (கிளி/ கிளிநொச்சி ம.வி)மூன்றாமிடம் , பேச்சு- தரம்-13 ஞான கரன் கிருத்திகா (கிளி/ வட்டக் கச்சி மத்திய கல்லூரி ) மூன்றாமிடம். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலைப்பாணி பெரிய குளத்தை புனரமைக்க மதிப்பீடுகள் தயாரிப்பு

## 6 மில்லியன் ரூபா தேவை-பாண்டியன்குளம் கமநல சேவை நிலையம்

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பாலைப்பாணி பெரியகுளதைப்புனரமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுமென பாண்டியன் குளம் கமநலசேவை நிலையத்தினால் தெரிவிக் கப்பட்டுள்ளது.

மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பாலைப்பாணி பெரியகுளத் தின் கீழ் நெற்செய்கை மேற் கொள்ளக்கூடிய 120 ஏக்க ருக்கு மேற்பட்ட வயல்நிலங் கள் காணப்படுகின்ற போதும் தற்போது எழுபது ஏக்கர் நிலப் பரப்பில் நெற்செய்கை மேற் கொள்ளப்படுகின்றது.

இந்தநிலையில் குறித்த குளம் பலதடவைகள் உடைப் பெடுத்த நிலையில் இப்பகுதி விவசாயிகளினால் புனர மைப்புச்செய்யப்படுகின்றது.

கடந்த காலங்களில் உடைப் பெடுத்துக்காணப்பட்ட குளத்தை 2012ஆம் ஆண்டு விவசாயி கள் புனரமைத்தபோதும் 2016 ஆம் ஆண்டில் மீண் டும் விவசாயிகளால் புனர மைக்கப்பட்டது.

இக்குளத்தைப் புனரமைத் துத்தருமாறு தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்து வருகின் றபோதும், இதுவரை குறித்த குளம் புனரமைத்துத்தரு மாறு இப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்து வருகின் றனர்.

இந்த விடயம் தொடர்பில் பாண்டியன்குளம் கமநல சேவை நிலையத்துடன் தொடர் புகொண்டு வினவியபோது, குறித்த குளத்தைப் புனரமைப்பதற்கான நடவடிக்கை கள் மேற்கொள்ளப்பட்டு அதற்கான மதிப்பீடுகளும் தயாரிக்கப்பட்டிருக்கின்றன.

இதனைப் புனரமைப்ப தற்கு 6.6 மில்லியன் ரூபா நிதி தேவை என்றும் தெரிவிக் கப்பட்டுள்ளது. (2-315)




# கமக்கார அமைப்புக்களை புனரமைக்க நடவடிக்கை

## பாண்டியன்குளம் கமநலசேவை நிலையம்

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத் தின் பாண்டியன்குளம் கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட கமக்கார அமைப்புக்கள் புனர மைக்கப்படவுள்ளதாக கமநல சேவை நிலையத்தினால் தெரி விக்கப்பட்டுள்ளது. பாண்டியன் குளம் கமநல சேவை நிலை யத்திற்குட்பட்ட கமக்கார அமை ப்புக்களின் புனரமைப்பு நடவடிக் கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

அந்த வகையில் பாண்டி யன்குளம் கமக்கார அமைப்பு மற்றும் கரும்புள்ளியான் கமக் கார அமைப்பு என்பன எதிர் வரும் 19ஆம் திகதி வியாழக் கிழமையும் மூன்று முறிப்பு கமக்கார அமைப்பு எதிர்வரும் 20ஆம் திகதி வெள்ளிக்கிழ மையும் பாலைப்பாணி மற்றும் வன்னிவிளாங்குளம் கமக்கார அமைப்புக்கள் எதிர்வரும் 24ஆம் திகதி செவ்வாய்க் கிழமையும் அம்பாள் புரம் ஒட்டறுத்தகுளம்கமக்கார அமைப் புக்கள் எதிர்வரும் 26 ஆம்திகதி வியாழக்கிழமையும் பாலிநகர் சிவபுரம்கமக்கார அமைப்புக்கள் எதிர் வரும் 31 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும் செல்வ புரம் கமக்கார அமைப்பு எதிர் வரும் ஓகஸ்ட் மாதம் 2 ஆம் திகதியும் புவரசங்குளம் பொன்ன கர் கமக்கார அமைப்பு மறுநாள் 3ஆம்திகதியும் கண்ணகி கமக் கார அமைப்பு 09ஆம்திகதியும், நட்டாங்கண்டல் கமக்கார அமைப்பு 10ஆம் திகதியும், சிறாட்டிகுளம் கமக்கார அமைப்பு அடுத்த மாதம் 14ம் திகதியும் கொல்லவிளாங்குளம கமக்கார அமைப்பு அடுத்த மாதம் 16ஆம் திகதியும் புனரமைப்பதற்கான காலஅட்டவணைகள் தயாரிக்கப் பட்டு அறிவித்தல்கள் விடுக்கப்பட்டி ருப்பதாகவும் அதன்படி கமக்கார அமைப்புக்களை புனரமைப் பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கமநலசேவை நிலை யத்தினால் தெரிவிக்கப்பட்டுள் ளது. (2-315)

# மல்லாவிப் பொதுச்சந்தையில் மூடப்பட்டுள்ள வர்த்தக நிலையங்களை வழங்க நடவடிக்கை

## துணுக்காய் பிரதேச சபை செயலாளர் தெரிவிப்பு



(கண்டாவளை)

முல்லைத்தீவு மல்லா விப்பொதுச்சந்தையில் புதி தாக நிர்மாணிக்கப்பட்டு மூடப்பட்ட நிலையில் காணப் படுகின்ற வர்த்தக நிலையங் கள் தற்போது வர்த்தகர்க ளுக்கு வழங்கப்பட்டு வருவ தாக துணுக்காய் பிரதேச சபையினுடைய செயலாளர் கே.தனபாலசிங்கம் தெரிவித் துள்ளார்.

துணுக்காய்பிரதேச சபைக் குட்பட்ட மல்லாவிப் பொதுச் சந்தை வளாகத்தில கடந்த 2013ஆம் ஆண்டு நெல்சிப் திட்டத்தின் கீழ் 194 இலட் சத்து 55 ஆயிரத்து 518 ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக் கப்பட்ட பொதுச்சந்தையின் நவீன கடைத்தொகுதி இது வரை வழங்கப்படாத நிலை யில் காணப்படுகின்றது.

இருந்தபோதும் இதுவரை அவற்றை வழங்க நவடிக்கை எடுக்கப்படவில்லை என்று பல்வேறு தரப்புக்களும் தொடர்ச்சியாக குற்றம் சாட்டி வருகின்றன.

இந்த விடய்ம தொடர்பில் பிரதேச செயலாளரைத் தொடர் புகொண்டு வினவியபோது.

முன்னர் இச்சந்தை வளா கத்தில் கடைகளை நடத்திய வர்த்தகர்களுக்கு இந்த கடை கள் வழங்கப்பட்டு வருகின் றன.

இரு மாடிகளைக் கொண்ட இக்கட்டடத்தொகுதியில் கீழ் தளத்தில் உள்ள எட்டுக் கடை கள் இதுவரை வழங்கப்பட் டுள்ளன.

ஏனைய கடைகளையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அவர் மேலும்தெரிவித்துள்ளார் (2-315).

# பாதுகாப்பற்ற கிணற்றை மூடுங்கள்



(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட் டத்தின் புதுக்குடியிருப்பு பிர தேச செயலர் பிரிவிற்குட்பட்ட விசுவமடு தொட்டியடி பிள்ளை யார் ஆலய வளாகத்தில் விபத்துக்கள் ஏற்படும் வகை யில் பாதுகாப்பற்ற வகையில் காணப்படுகின்ற ஆபத்தான கிணற்றை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச மக்கள் கோரி யுள்ளனர்.

விசுவமடு தொட்டியடி பிள்ளையார் ஆலய வளா கத்தில ஆரம்ப காலத்தில் அமைக்கப்பட்ட மண் கிணறு பயன்படுத்தப்படாத நிலை யில் தற்போது பாழடைந்து காணப்படுகின்றது.

இதனால் விபத்துக்கள் கூட ஏற்படும் நிலை காணப் படுகின்றது. குறித்த கிணற் றைச் சுற்றி பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்படாது காணப்படுகின்றது.

இதேவேளை விடுமுறை தினங்களில் ஏராளமான சிறுவர்கள் இப்பகுதியில் விளையாடுவதனால் விபத் துக்கள் ஏற்படும் அபாயநிலை காணப்படுகின்றது.

எனவே இக்கிணற்றை மூடுவதற்கு அல்லது பாது காப்பு வேலியை அமைப் பதற்கு சம்பந்தப்பட்ட தரப்புக் கள் நடவடிக்கை எடுக்க வேண் டும் என பிரதேச மக்கள் கோரி க்கை விடுத்துள்ளனா்.(2-315)

# முன்னெச்சரிக்கை விழிப்புணர்வும் ஒத்திகைப் பயிற்சியும் முல்லையில்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட செயலகம் புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலையு டன் இணைந்து இன்று புதன் கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் 11 மணிவரையில் விபத்துககான முன்னெச்ச ரிக்கை விழிப்புணர்வு ஒத்தி கைப் பயிற்சியை புதுக்குடியி ருப்பு சந்திப் பகுதியில் நடத்தவுள் ளதாக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் அறிவித் துள்ளார்.

இது தொடர்பில் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில்,

இது பாரியளவிலான விப த்தின்போது வைத்திய சாலை முன்னாயத்தம் மற்றும் அதன் பதிலுறுத்தல் செயற் பாடு தொடர்பான முன்னெச்சரிக்கை ஒத்திகை நிகழ்வாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலை யத்தின் வழி காட்டல் மற்றும் ஆலோசனைக்கமைய ஆதார வைத் தியசாலை மற்றும் மாவட்ட அனர்த்த முகாமைத் துவ இணைப்பலகு மற்றும் அனைத்து பங்குதாரர்களின் ஒத்துழைப்புடன் மேற்கொள் ளப்படுகின்றது. இது ஒரு ஒத்திகைச் செயற் பாடென பதால் எவரும் குழப்பமடையத் தேவையில்லை என அரச அதிபர் தெரிவித்துள்ளார். (2)

# விபத்தில் முதியவர் படுகாயம்

(பனிக்கன்குளம்)

வவுனியாவில் மோட்டார் சைக்கிளில் பயணித்த முதிய வர் ஒருவர் வீதியில் சென்ற மாட்டுடன் மோதி விபத்துக் குள்ளானதில் அவர் படுகாய மடைந்த நிலையில் வவு னியா பொது வைத்தியசாலை யின் விபத்துப்பிரிவில் சிகிச் சைக்காக அனுமதிக்கப் பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று காலை 7.15 மணியளவில் இடம் பெற்றுள்ளது. இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவரு வதாவது, வவுனியா முதலாம் குறுக்குத்தெரு சூசைப்பிள் ளையார் குளம் பகுதியில் மோட்டார் சைக்கிளில் பய ணித்த முதியவர் வீதியில் குறுக்காகச் சென்ற மாட்டுடன் மோதி படுகாயமடைந்துள்ளார்.

இவ் விபத்தில் மகேஸ் வரன் (வயது-71) என்ற முதி யவரே படுகாயம் அடைந்த வராவார்.

இவ்விபத்து தொடர்பான [illegible] வருகின்றார்கள். (2-281)

# முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக வேலை தேடும் பட்டதாரிகள் கவனயீர்ப்பு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவில் வேலை தேடும் பட்டதாரிகள் மாவட்ட செயலகத்திற்கு முன்பாக நேற்று முன்தினம் கவன யீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

பட்டதாரிகள் வெளியே றிய கால அடிப்படையில் நியமனத்தை வழங்குமாறு கோரி மகஜர் ஒன்றையும் மாவட்ட அரசாங்க அதிபரி டம் கையளித்துள்ளனர்.

முல்லைத்தீவில் வழங் கப்படவிருக்கும் நியமன த்தை காலம் தாழ்த்தாது எந்தவித அரசியல் தலை யீடும் இன்றி புள்ளி அடிப் படையில் நேர்முகத் தேர்வை மேற்கொள்ளாமல் பட்டதாரி கள் வெளியேறிய காலத்தின் அடிப்படையில் வைத்து நிய மனங் களை வழங்குமாறும் அவர்கள் கோரிக்கை விடுத் துள்ளனர்.

மேலும் போரினால் பாதிப் புக்குள்ளாகிய பட்டதாரிகள் தமது பட்டப்படிப்பினை அதே





ஆண்டில் பூர்த்தி செய்யாமல் காலதாமதமாக பூர்த்திசெயது இருப்பதால் நீதி நியாய அடிப் படையில் எம்மாவட்டத்தில் உள்ள வெற்றிடங்களுக்கு பட்டதாரிகள் வெளியேறிய கால அடிப்படையில் நிய மனத்தை வழங்குமாறும் அவர்கள் கோரிக்கை விடுத துள்ளனர். (2-281)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### விடுதலைப் புலிகள் மீள் உருவாக்கம்; அரசியலமைப்பின் படி

# விஜயகலாவுக்கு எதிராக வழக்கு தொடர முடியாது



## முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா சுட்டிக்காட்டு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளை ஆதரித்து முன்னாள் இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் உரையாற்றியமைக்கு எதிராக அரசியலமைப்பின் படி வழக்கு தொடர முடியாது என்று முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேசிய ஒற்றுமைக்கான சட்டத்தரணிகள் சங்கத்தின் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அரசியலமைப்பின் படி விஜயகலாவுக்கு எதிராக வழக்கு தொடர முடியாது. விஜயகலா மகேஸ்வரனின் இந்தக் கருத்துக்கு பின்னால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தூண்டல் இருக்கலாம்.

விஜயகலாவின் கூற்று பிரிவினைவாதம் தொடர்பாக வழங்கிய சத்தியப்பிரமாணத்திற்கு எதிரானதாகும். அதனால் சம்பந்தப்பட்ட நபருக்கெதிராக மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்ய முடியும் என அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் விஜயகலா மகேஸ்வரன் ஐக்கிய தேசியக் கட்சியின் இராஜாங்க அமைச்சராக இருந்தவர். அவரே இந்த உரையை ஆற்றியிருக்கின்ற நிலையில் அவரது தனிப்பட்ட நோக்கத்திற்கு இதனை மேற்கொண்டிருப்பார் என்று நான் நினைக்கவில்லை.


விஜயகலா மகேஸ்வரன் எதனைக்கூறினாலும்யாருமே தத்தமது சிந்தனையை மாற்றிக்கொள்ள மாட்டார்கள். அவருக்கு பெரிதான அரசியல் அனுபவம் இல்லை. அவர் ஏன் இதனைக் கூறினார் என்பதே பிரச்சினை.

அவர் இராஜினாமா செய்துவிட்டார். இதுபோன்று திலக் மாரப்பன, விஜேதாஸ ஆகியோரும் இராஜினாமா செய்து மீண்டும் பதவிகளை பெற்றுக்கொண்டதுபோல விஜயகலாவும் மீண்டும் வரலாம்.

அரசியலமைப்பின் 6 ஆவது திருத்தத்திற்கு முரணான கருத்தை வெளியிட்ட போதிலும் அவருக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்யமுடியாது.

அதற்குப் பதிலாக அவர் விரைந்து அமைச்சுப் பதவியிலிருந்து இராஜினாமா செய்துவிட்டார். மக்களை திசைதிருப்பும் செயலாகவே இதனை பார்க்கின்றோம் என்றும் முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார். (இ-7)

# தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் வாகனத்திலிருந்து தூக்கி வீசப்பட்ட பெண்



(கொழும்பு)

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் இடம்பெற்ற கோர விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அதிவேக நெடுஞ்சாலையின் குருந்துகஹ ஹெதெக்ம மற்றும் பத்தேகம வெளியேறும் இடத்தில் நேற்று முன்தினம் மாலை இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

குறித்த வாகனம் நெடுஞ்சாலையில் புரண்டு சென்றுள்ளதாக நேரில் பார்த்தவர்கள் தெரிவித்துள்ளனர்.


இந்த சந்தர்ப்பத்தில் வாகனத்தில் இருந்த பெண் தூக்கி வீசப்பட்டுள்ளார். இதனால் படுகாயமடைந்த அவர் உயிரிழந்துள்ளார்.

சாரதி மற்றும் மற்றொரு பெண் படுகாயமடைந்து எல்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

உயிரிழந்த பெண் தேசிய இளைஞர் சேவை சபையின் மஹரகம பயிற்சி நிலையத்தில் நடன ஆலோசகராக செயற்பட்டுள்ளார். பாதுக்க வெரகல பிரதேசத்தை சேர்ந்த நதீஷா பெரேரா (வயது-40) என்ற இரண்டு பிள்ளைகளின் தாயே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

விபத்து இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் வாகனத்தில் பயணித்தவர்கள் பாதுகாப்பு பட்டியை அணிந்திருக்கவில்லை என தெரிய வந்துள்ளது. (இ-7)

# கார் கவிழ்ந்து விபத்து



(கொழும்பு)

கண்டி - அருப்பொல பிரதான வீதியில் நேற்று முன்தினம் அதிகாலை பயணித்த காரொன்று வீதியை விட்டும் விலகி, அருகிலுள்ள பாரிய பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளானது. இருப்பினும் வாகனச் சாரதி உயிர் தப்பியுள்ளார். விபத்துக்குள்ளான வாகனத்தை மீட்கும் பணியில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (இ)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை




# ஊமத்தை

Botanical Name - Datura meral
Family Name - Solanaceae
English name- Thorn Apple
Sinhala Name - Attana

கெட்டியான குறுஞ்செடி. ஒரு மீற்றர் உயரம் வளரக் கூடியது. மிக நுண்ணிய தூவிகள் கொண்டவை. இலைகள் பெரியவை. மடல் முழுமையாகவோ அல்லது விளிம்புகள் பிளவுபட்டோ பற்களுடனே இருக்கும்.

மலர்கள் பெரியவை. செங்குத்தாக காணப்படும். வெண்மை, ஊதா, வர்ணங்களுடனும் புனல் வடிவ அல்லி குழலுடன் இருக்கும். கனிகள் வெடிகனி வகையானது. கோண வடிவில் அல்லது முட்டை வடிவில் காணப்படும்.

முட்களால் கனி மூடப்பட்டது. 4 பிரிவாக உடைய



கூடியது. விதைகள் அழுத்தப்பட்டவை. மிக நுண்ணிய புடைப்புகளுடன் காணப்படும். கருஞ்சிவப்பு வண்ணம் கொண்டவை.

பரம்பலும் இனவிருத்தியும்

யாழ்.மாவட்டத்தில் தரிசு நிலங்கள், வீதி ஓரங்களில் காணப்படும். விதைகள் மூலம் இனவிருத்தி செய்யலாம். கரு ஊமத்தை, வெண் ஊமத்தை, மரு ஊமத்தை, பொன் ஊமத்தை என பல இனங்கள் உண்டு. வெண் ஊமத்தை பரம்பல் அதிகம். கரு ஊமத்தை பருத்தித்துறையில் அதிகம் காணப்படும்.

மருத்துவக் குணங்கள்

ஊமத்தம் மூலிகையின் விதைகளைசாப்பிடக்கூடாது. விதைகள் நஞ்சியல் பகுதியாகும். வைத்திய ஆலோசனையை பெற்றே பயன்படுத்த வேண்டும். ஆனால் வெளிப்பூச்சு மருந்தாகவும், மேல்பற்று மருந்தாகவும் பயன்படும்.

ஊமத்தை இலையை நல்லெண்ணெய் விட்டு வதக்கி இளஞ்சூட்டுடன் வீக்கமுள்ள இடங்கள், வாத வகைகள், கைகால் மூட்டுக்களில் வீக்கமுள்ள இடங்கள், தாய்ப்பால் கட்டிக் கொண்டதால் வலி ஆகிய இடங்களில் ஒற்றடம் கொடுக்கத் தணியும்.

நாய் கடித்த புண்களுக்கு ஊமத்தம் இலைகளை நீர்விடாமல் அரைத்து நல்லெண்ணெயில் வதக்கி கட்டி வர அவை ஆறும்.

இலைகளை இடித்து பிழிந்த சாறு 500 மில்லி எடுத்து 500 மில்லி தேங்காய் எண்ணெய் கலந்து காய்ச்ச வேண்டும். சாறு சுண்டியபின் எண்ணெய் முறியாத பதத்தில் காய்ச்சி இறக்க வேண்டும். இதனை புண், ஆறாத நாட்பட்ட புண் என்பனவற்றிற்கு பயன்படுத்தலாம்.

ஊமத்தை இலை, பூ, விதை 3 ஐயும் 200 கிராம் வீதம் எடுத்து வாய் அகன்ற மண் பாத்திரத்தில் 125 மில்லி பசுப்பால் விட்டு அதன் வாயில் ஒரு மெல்லிய துணி கட்டி அதன் மேல் ஒரு சட்டி மூடி அடுப்பில் வைத்து வேக எடுக்க வேண்டும். பின்பு வெயிலில் நன்றாக காய வைத்து இடித்து தூள் செய்து புட்டியில் அடைக்க வேண்டும். இதனை ஆஸ்மா நோயாளிகள் மூச்சுக் கஷ்டம் அதிகரிக்கும் போது காய்ந்த ஊமத்தை இலையை சுருட்டி அதனுள் பொடியைபோட்டு சுருட்டுப் போல் இழுக்க மூச்சுக் கஷ்டம் தீரும்.

இலை, அரிசிமா எடுத்து நீர் விட்டு களி போல வேக வைத்து என்பு மூட்டு வீக்கம், வலிதரும் கட்டி, வெளி மூலத்திற்கு போடலாம்.

கரு ஊமத்தை இலைச் சாறு 400 மில்லி சாறு எடுத்து 800 மில்லி தேங்காய் எண்ணெய் சேர்த்து காய்ச்சி இரசம் சுண்டும் வேளை ஓமத்தூள் , 30g கூட்டி



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

சாறு சுண்டும் பதத்தில் வடிகட்டி அதில் கற்பூரம் 30 கிராம் பொடித்து கரைத்து பூசி வெந்நீர் விட்டு உருவுகுத்தல், குடைதல் தீரும்.

அதன் வேரை சிறு சிறு துண்டாக்கி கழுவி, உலர்த்தி, பொடித்து வெந்நீர் விட்டு அரைத்து பற்கொதியுள்ள இடத்தில் பூச பல்வலி தீரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதாளக் குழுக்களின் பின்னணியில் அரசு

# நாட்டில் தற்போது பயங்கரமான நிலை!

## கூட்டு எதிரணி எம்.பி.செஹான் அச்சம்



(கொழும்பு)

நாட்டில் தற்போது தலை தூக்கியுள்ள பாதாளக்குழுக்களின் பின்னணியில் நல்லாட்சி அரசாங்கமே உள்ளது என கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினரான செஹான் சேமசிங்க குற்றஞ்சாட்டினார்.

இலங்கையில் ஆயுதக் குழுக்கள் மற்றும் பாதாளக் குழுக்களின் செயற்பாடுகள் மீண்டும் அதிகரித்துள்ள நிலையிலேயே அவர் இவ்வாறு குற்றம் சுமத்தினார். இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

நாட்டில் தற்போது பயங்கரமான நிலைமை ஏற்பட்டுள்ளது. மக்கள் நிம்மதியாக வாழும் சூழல் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த பாதாளக் குழுவினரின் பின்னணியில் நல்லாட்சி அரசாங்கத்தின் அரசியல்வாதிகள் தான் உள்ளனர்.

இவர்களை கட்டுப்படுத்த வேண்டும் என்று எந்தவொரு அமைச்சரோ அல்லது உறுப்பினர்களோ இதுவரை தெரிவிக்கவில்லை. இதிலிருந்தே இதன் பின்னணியில் யார் உள்ளனர் என்பது தெளிவாகத் தெரிகின்றது.

இது மக்களின் ஆணையை முற்றிலுமாக மீறும் ஒரு செயற்பாடாகும். மறுபுறத்தில் இராஜாங்க அமைச்சர் ஒருவர் பயங்கரவாதிகளை மீள கொண்டுவர வேண்டும் என்று கூறியுள்ளார். ஆனால், இது தொடர்பில் ஜனாதிபதியும் பிரதமரும் எந்தவொரு கருத்துக்களையும் வெளியிடவில்லை.

இது ஒட்டுமொத்த நாட்டின் பாதுகாப்பையும் கேள்விக்குறியாக்கியுள்ள ஒரு விடயமாகும். இதனால் தான் மக்கள் தேர்தல் ஒன்று வர வேண்டும் என எதிர்பார்க்கிறார்கள் எனவும் செஹான் சேமசிங்க மேலும் தெரிவித்தார். (இ-7)

## விஜயகலா நாட்டைவிட்டு வெளியேற முன் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்

### கம்மன்பிலவின் கட்சி வலியுறுத்து

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி.விஜயகலா மகேஸ்வரன் நாட்டைவிட்டு வெளியேறுவதற்கு முன்னர், அவருக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என பிவித்துறு ஹெல உறுமய வலியுறுத்தியுள்ளது.

பிவித்துறு ஹெல உறுமய கட்சியின் பிரசார செயலாளர் துஷார திசாநாயக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா வெளிநாடு செல்வதற்கு திட்டமிட்டு வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.



இந்நிலையில், அவருக்கு எதிரான விசாரணைகளை தீவிரப்படுத்தி உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்துகின்றோம். அவர் வெளிநாடு சென்றால் விசாரணைகள் தடைப்படும்.

அதுமாத்திரமின்றி, விஜயகலாவின் உறுப்புரிமையை ஐக்கிய தேசியக்கட்சி இரத்துச் செய்ய வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதேவேளை, சட்ட அமுலாக்க அதிகாரிகள் விஜயகலா மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும் என அக்கட்சியின் தலைவர் உதய கம்மன்பில எம்.பி. வலியுறுத்தியுள்ளார். (இ-7)





பிரதி விவசாய அமைச்சர் அங்கஜன் இராமநாதனின் பிறந்த நாளை முன்னிட்டு நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை கைதடி முதியோர் இல்லத்திலுள்ள முதியவர்களுக்கு அங்கஜனின் இளைஞர் அமைப்பினரால் சிற்றுண்டிகள் வழங்கப்பட்டன. இந் நிகழ்வில் சுதந்திரக்கட்சியின் யாழ். மாவட்ட இளைஞர் முன்னணி அமைப்பாளர் செ.கஜந்தன் கலந்து கொண்டார். (படங்கள்:-சுபேசன்)

## அரசிலிருந்து விலகிய சு.க. அதிருப்திக் குழுவினரின் தொகுதி அமைப்பாளர் பதவி பறிபோகும் வாய்ப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்கு அரசாங்கத்திலிருந்து வெளியேறிய 16 பேரும் ஒத்துழைப்பு வழங்கவில்லையாயின், தொகுதி அமைப்பாளர் பதவியில் அவர்களை தொடர்ந்தும் வைத்திருப்பதா? இல்லையா? என விரைவில் தீர்மானம் எடுக்கப்படும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் ரோஹண லக்ஷ்மன் பியதாஸ அறிவித்துள்ளார்.



கட்சியைப் பலவீனப்படுத்த எவருக்கும் இடமளிக்கப் போவதில்லை. கட்சியின் சகல தொகுதி அமைப்பாளர்களுக்கும் கட்சியின் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை விரைவுபடுத்துமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

16 பேர் கொண்ட குழுவிலுள்ள தயாசிறி ஜெயசேகரவும் ஏனைய சிலரும் கட்சியின் மறுசீரமைப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக தொலைபேசியில் தொடர்பு கொண்டு அறிவித்தல் விடுத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## தனது வம்சத்தை தொடர்ந்தும் ஜனாதிபதியாக்க மகிந்த முயற்சி

(ஏறாவூர்)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது வம்சத்தினை தொடர்ந்தும் ஜனாதிபதி ஆசனத்தில் அமர்த்துவதற்கான செயற்பாட்டினை முன்னெடுத்தார்.

இருப்பினும் அந்த முயற்சி சர்வதேசத்தின் உதவியுடன் மாற்றப்பட்டது என இலங்கை தமிழரசுக்கட்சி செயலாளரும் கிழக்கு மாகாண முன்னாள் விவசாய அமைச்சருமான கிருஸ்ணபிள்ளை துரைராசசிங்கம் தெரிவித்தார்.



மட்டக்களப்பு மாவட்டம் மாயவட்டைத் தெற்குக் கண்டத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற சிறுபோகச் செய்கை அறுவடை நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அரசியல் உரிமை மாதிரி அபிவிருத்தி உரிமையும் சிறுபான்மை மக்களுக்குத் தேவை. அதற்காகத்தான் இணக்க அரசியலில் ஈடுபட்டு வருகிறோம்.

ஆனால் தற்போது அரசியலில் குழப்பகரமான நிலைமை தோன்றியுள்ளது. அபசகுணமான நிலைமைகள் தோன்றினாலும் உலக அரசியலில் பல விடயங்கள் மாற்றியமைக்கப்படும்.

மேலும், கடந்த அரசாங்கம் 18 ஆவது திருத்தச்சட்டத்தைக் கொண்டு வந்து முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது வம்சத்தினை தொடர் ஜனாதிபதியாக வருவதற்கான செயற்பாட்டினை முன்னெடுத்தார். ஆனால் தேர்தல் வந்தபோது சர்வதேசத்தின் உதவியுடன் அந்த முடிவு மாற்றப்பட்டது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## இந்தியாவிலிருந்து இலங்கைக்கு தபால் மூலம் ஹெரோயின் கடத்தல்

### கொழும்பில் இருவர் கைது

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து தபால் மூலம் இலங்கைக்கு ஹெரோயின் கடத்தி வந்த சம்பவத்தோடு தொடர்புடைய இருவர் சுங்கப் பிரிவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை கொழும்பு மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்தில் வைத்து பொதி செய்யப்பட்ட 227 கிராம் ஹெரோயின் கண்டுபிடிக்கப்பட்டது.

ஹெரோயின் கடத்தல் சிறைச்சாலையிலிருந்து மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளதாக சுங்க ஊடகப் பேச்சாளர் சுனில் ஜயரத்ன தெரிவித்தார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இனியும் தாமதம் வேண்டாம் குற்றவாளிகளைத் தூக்கிலிடுக

## நிர்பயாவின் பெற்றோர் வலியுறுத்து




(டில்லி)

டில்லி மாணவி நிர்பயா வழக்கின் மேன் முறையீட்டு மனு தள்ளுபடி செய்யப்பட்டதை அடுத்து அவரது தந்தை செய்தியாளர்களை சந்தித்தார்.

மரண தண்டனையை எதிர்த்து டில்லி நிர்பயா வழக்கு குற்றவாளிகள் 4 பேர்தொடர்ந்த மனுவை தள்ளுபடி செய்துள்ள உச்ச நீதிமன்றம், அவர்களின் மரண தண்டனையை நேற்று முன் தினம் உறுதி செய்தது. இந்நிலையில் உச்ச நீதி மன்றம் வாசலில் நிருபர்களுக்கு பேட்டியளித்த நிர்பயாவின் தந்தை "இந்த வழக்கில் உச்ச நீதிமன்றம் முன்னர் அளித்த தீர்ப்பில் மறு ஆய்வு என்ற பெயரில் கால தாமதம் ஏற்படுத்தப்பட்டது.

இதனால், பெண்களுக்கு எதிரான அச்சுறுத்தல் மேலும் அதிகமாகி உள்ளது. தற்போது மேன்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டு, மரண தண்டனையும் உறுதி செய்யப்பட்டது. இந்நிலையில், காலம் தாழ்த்தாமல், குற்றவாளிகளை விரைவாக தூக்கிலிட வேண்டும்" என வலியுறுத்தியுள்ளார்.

இதேபோல், உச்ச நீதிமன்றம் நேற்றைய தீர்ப்பை வரவேற்றுள்ள நிர்பயாவின் தாய் ஆஷாதேவி, நீதிமன்றத்தின் மீது நாங்கள் வைத்துள்ள நம்பிக்கை காப்பாற்றப்பட்டு விட்டதாக தெரிவித்துள்ளார். நீதி தாமதமாக வழங்கப்பட்டுள்ளதாகவும், விரைவாக தூக்குத்தண்டனையை நிறைவேற்றி ஏனைய பெண்கள் மற்றும் குழந்தைகளை காக்க வேண்டும் எனவும் மேலும் தெரிவித்தார். (7-8)

# ஜப்பானில் தொட... உயிரிழப்பு 140 ...

(டோக்கியோ)

ஜப்பான் நாட்டில் பெய்து வரும் தொடர் மழை மற்றும் வெள்ளத்தில் சிக்கி பலியானவர்களின் எண்ணிக்கை 140 ஆக அதிகரித்துள்ளது.

ஜப்பான் நாட்டில் தற்போது பலத்த மழை பெய்து வருகிறது. ஜப்பானில் உள்ள ஹிரோஷிமா, கியாட்டோ, ஒக்காயாமா, எஹிமே உள்ளிட்ட மாகாணங்களில் கடந்த சில தினங்களாக கன மழை பெய்து வருகிறது.

மழையினால் தாழ்வான பகுதிகளில் வெள்ளப் பெரு



க்கு ஏற்பட்டுள்ளது. ஆறுகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. கார்கள், பேருந்துகள்

உள்ளிட்ட வாக... கிடக்கின்றன.

தாழ்வான ...

# ஜெயலலிதா மரணத்தில் எந்த மர்மமும் இல்லை

## பழ.நெடுமாறன் தெரிவிப்பு

(தஞ்சாவூர்)

மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதா இறப்பில் எந்த மர்மமும் இல்லை என்று தஞ்சையில் உலகத் தமிழர் பேரமைப்பு தலைவர் பழ. நெடுமாறன் தெரிவித்தார்.

"2016 டிசெம்பர் 5இன் சந்தேகங்கள்" என்ற நூல் அறிமுக விழா தஞ்சையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. விழாவுக்கு உலகத் தமிழர் பேரமைப்பு தலைவர் பழ.நெடுமாறன் தலைமை தாங்கினார். இதைத் தொடர்ந்து அவர் நிருபர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது தெரிவித்ததாவது,

தமிழக அரசு நம் நாட்டில் இயற்கை வளங்களை அழிக்கும் திட்டத்தை எதிர்த்து யார் குரல் கொடுத்தாலும் அல்லது போராடினாலும் அவர்களை ஒடுக்குவதற்கு முயற்சி செய்வது வன்மையாக கண்டிக்கத்தக்கது.

தூத்துக்குடி ஸ்டெர்லைட் எதிர்ப்பு போராட்டம், சென்னை - சேலம் 8 வழிச்சாலை திட்ட எதிர்ப்பு, மீதேன் எதிர்ப்பு, எரிவாயு எதிர்ப்பு போராட்டம் என எந்த போராட்டமாக இருந்தாலும் அவை மக்களால் உருவாக்கப்படுகின்றன. இதற்காக குரல் கொடுக்கிற கட்சிகளையோ அல்லது அமைப்புகளையோ ஒடுக்கு வதற்கு முயற்சி செய்வது ஒருபோதும் வெற்றி பெறாது. அவ்வாறு ஒடுக்க நினைத்தால் மிகப் பெரிய அளவில் மக்கள் போராட்டம் வெடிக் கும் என்பதற்கு தூத்துக்குடி போராட்டம் எடுத்துக்காட்டு என்பதை அரசு தெரிந்து கொள்ள வேண்டும்.

மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதா வைத்திய சாலையில் இருந்த போது, டில்லியில் இருந்து எய் ம்ஸ் வைத்தியர்கள், சிங்கப்பூர், லண்டனில் இருந்து என பெரிய வைத்தியர்கள் கூட்டமே வந்து அவரது உடலை பரிசோதித்தது. அப்போது தேவையான சிகிச்சையை அவர்கள் அளித்தனர். இதில் எந்த மர்மமும் இல்லை.

இது பற்றி விரிவான தகவல் டிசெம்பர் 5இன் சந்தேகங்கள் என்ற நூலில், ஆசிரியர் விரிவாக கூறியுள்ளார். லோக் ஆயுக்தா சட்டம் நீண்ட காலத்துக்கு முன்பே தமிழகத்தில் அமுல்படுத்தியிருக்க வேண்டும். ஆனால் இந்த சட்டம் தற்போது தாமதமாக கொண்டு வரப்பட்டுள்ளது. இப்போதாவது இந்த லோக் ஆயுக்தா சட்டத்தை சரியான முறையில் செயற்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்தார். (7-8)

# கொரிய தீபகற்பத்தில் சமாதானம் வேண்டும்

## தென்கொரிய ஜனாதிபதி விருப்பம்

(டில்லி)

கொரிய தீபகற்பத்தில் சமாதானம் ஏற்பட்டால், புதிய வர்த்தக வாய்ப்புக்கள் உருவாக்கப்படும் என, இந்தியாவிற்கான தனது விஜயத்தின் போது தென்கொரிய ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

டில்லியில் நேற்று முன் தினம் இடம்பெற்ற தொழில் அதிபர்களுடனான சந்திப்பின் போது, தென்கொரிய ஜனாதிபதி மூன் - ஜே - இன் மேற்படி தெரிவித்தார்.

இந்தியாவிற்கு நான்கு நாட்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள மூன் - ஜே - இன், இந்தியா மற்றும்தென்கொரியா இணைந்து செயற்பட்டால், நான்காவது தொழிற்றுறை புரட்சியை உருவாக்க முடியும் என தெரிவித்த அவர்,

மேலும் இரு நாடுகளுக்கு மிடையிலான சமாதானத்தையும், மக்கள் சார்ந்த புதிய கொள்கைகளையும் உருவாக்க, தென்கொரியா இந்தியாவுடனான உறவை அதிகப்படுத்த விரும்புவதாகவும் தெரிவித்தார்.

கடந்த 1973 ஆம் ஆண்டு தென்கொரியா இந்தியாவுடனான உறவை ஆரம்பித்தது. இந்நிலையில் பிரதமர் மோடி கடந்த 2015 ஆம் ஆண்டு மே மாதம், தென்கொரியாவின் தலைநகர் சியோலிற்கு விஜயம் செய்திருந்தார்.

அப்போது சிறப்பு மூலோபாய கூட்டு என்னும் திட்டத்தின் கீழ், தென்கொரியா மற்றும் இந்தியாவிற்கிடையிலான உறவுப் பாலத்தை ஏற்படுத்தி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (7-8)

# அமெரிக்க உச்ச ... பிரெட் காவாநாங் ...

(வோஷிங்டன்)

அமெரிக்க உச்ச நீதிமன்றத்தின் நீதிபதியாக பிரெட் காவாநாங்கை (Brett Kavanaugh), ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பரிந்துரை செய்துள்ளார்.

1990 ஆம் ஆண்டு முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டன் தொடர்பான ஒரு வழக்கில் ... உதவியவர் எ...

உச்ச நீதிம... பரிந்துரை செ... களை பரிந்து... வித்த நிலையி... ழமை 53 வயத... பரிந்துரை செய்...

ட்ரம்பின் ச...

# ட்ரம்பின் பரிந்... எதிராக ஆர்...

(வோஷிங்டன்)

அமெரிக்க உச்ச நீதிமன்றத்தின் நீதிபதியாக பிரெட் காவாநாங், ட்ரம்பினால் பரிந்துரை செய்யப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து வோஷிங்டன் டிசியில் உள்ள நீதிமன்ற கட்டடத்திற்கு முன்பு நேற்று முன்தினம் திங்கட் கிழமை ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.


இதேவேளை இரண்டு



தசாப்தங்களாக ... பிரெட் ஈடுபட்டு ...

இதன் பி...

# சிறுமி பாலியல் படுகொலை வழக்கில் குற்றவாளியின் தூக்குத் தண்டனையை உறுதி செய்த உயர் நீதிமன்றம்



(சென்னை)

சென்னையில் 6 வயது சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்து கொலை செய்த வழக்கில், குற்றவாளி தஷ்வந்துக்கு வழங்கப்பட்ட தூக்குத் தண்டனையை சென்னை உயர் நீதிமன்றம் உறுதி செய்துள்ளது.

சென்னை குன்றத்தூரைச் சேர்ந்த 6 வயது சிறுமி, கடந்த 2017 பெப்ரவரி மாதம் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு எரித்துக் கொலை செய்யப்பட்டார். இந்த வழக்கில், ஐடி பொறியாலாளர் தஷ்வந்த் என்பவர் கைது செய்யப்பட்டார். சிறையிலிருந்த அவர் பிணையில் வெளி வந்து தனது தாயைக் கொலை செய்துவிட்டு மும்பை தப்பி ஓடினார்.

பின்னர், தனிப்படை பொலிஸார் மும்பை சென்று அவரை பிடித்து புழல் சிறையில் அடைத்தனர். சிறுமி பாலியல் வன்கொடுமை வழக்கில் அவருக்கு கடந்த பெப்ரவரி 19 ஆம் திகதி செங்கல்பட்டு மகளிர் நீதிமன்றம் தூக்குத்தண்டனை விதித்து தீர்ப்பு வழங்கியது. மேலும், 31 வருடங்கள் கடுங்காவல் தண்டனையும், குழந்தைகள் பாலியல் தடுப்புச் சட்டத்தின்கீழ் 15 வருட சிறைத் தண்டனையும் வழங்கப்பட்டது.

இந்த மரண தண்டனையை எதிர்த்து தஷ்வந்த் சென்னை உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்திருந்தார். அவரது மேன்முறையீட்டு மனு மீது நீதிபதிகள் ராமதிலகம் மற்றும் விமலா நேற்று தீர்ப்பு வழங்கினர். அவரது மேன்முறையீட்டு மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்ட நீதிபதிகள், செங்கல்பட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை உறுதி செய்தனர். (7-8)

# 600 மக்கள்- 3... சீனாவில் ஒரு...

(பீஜிங்)

30 இலட்சம் பாம்புகளுக்கு இடையில் சுமார் 600 மக்கள் மட்டுமே வாழும் கிராமம் ஒன்று சீனாவில் உள்ளது.

சீனாவின் கிழக்குப் பகுதியில் உள்ள செஜியாங் மாகாணத்தின் கடைக்கோடியில் இருக்கும் குக்கிராமம் சிசிகியாவ். சுமார் 600 மக்கள் மட்டுமே வாழும் இந்த கிராமத்தில் உள்ளவர்களில் பெரும்பாலானவர்கள் தங்களது உடல்களின் பல பகுதிகளில் பாம்புக்கடி அடையா

ளங்களுடன்தா... இவர்களுக்கு ஏ...

சீனர்களின் ... கறிக்கு முதலி... பாதிக்கப்பட்ட ... ஆண்டுகளுக்கு... அதிகமாக இரு... மன்றி, இங்குள்... விட பாம்புகளி...

பசிக்கு உ... புகள் இங்குள்ள... ளித்தரும் அமு... இதனால், பிறப... கிராமத்தை 'பா... லத்தில் அழைக்...

இரைச்சியா...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## நாடரும் அவலம்; 40 ஆக உயர்வு



ள்ளிட்ட வாகனங்கள் தண்ணீருக்குள் மூழ்கி
டக்கின்றன.

தாழ்வான பகுதிகளில் வசித்து வந்த 50 இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் வெளியேற்றப்பட்டனர். அவர்கள் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் மழை வெள்ளத்தில் மூழ்கியும், நிலச்சரிவில் சிக்கியும் பலியானோர் எண்ணிக்கை 140 ஆக அதிகரித்துள்ளது என அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், காணாமல் போன 20-க்கும் மேற்பட்டோரை தேடும் பணிகளில் பேரிடர் மீட்புப் படையினர் ஈடுபட்டு வருகின்றனர். (7-8)

## வடகொரியா-அமெரிக்கா இடையேயான அணு ஆயுத ஒப்பந்தத்தில் சீனா ஆதிக்கம்

### – ட்ரம்ப் குற்றச்சாட்டு –




(வோஷிங்டன்)

வடகொரியாவுடன் செய்து கொண்ட அணு ஆயுத ஒப்பந்தத்தில் தங்களால் வர்த்தக தடைக்கு உள்ளான சீனா குறுக்கே நிற்பதாக ட்ரம்ப் குற்றம் சாட்டியுள்ளார்.

சிங்கப்பூரில் அண்மையில் அமெரிக்கா - வடகொரியா இடையில் கையொப்பமான அணு ஆயுத ஒழிப்பு ஒப்பந்தத்தை பெரும்பாலான உலக நாடுகள் வரவேற்றுள்ளன. ஐக்கிய நாடுகள் சபையும் மகிழ்ச்சி தெரிவித்தது. வடகொரியா இந்த ஒப்பந்தத்தை ஒழுங்காக நிறைவேற்றினால் அந்நாட்டின் மீதான பொருளாதாரத் தடைகள் படிப்படியாக விலக்கிக்கொள்ளப்படும் என ட்ரம்ப் அறிவித்தார்.

இதற்கிடையில், ட்ரம்புடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தை மீறிய வகையில் வடகொரியா இரகசியமாக அணு ஆயுத உற்பத்திக்கு தயாராகி வருவதாக தெரிய வந்தது. வடகொரியாவின் யாங்பியான் பகுதியில் உள்ள யுரேனியம் செறிவூட்டும் நிலையத்தில் பணிகள் நடைபெற்று வருவதாக அண்மையில் எடுக்கப்பட்ட செயற்கைக் கோள் படங்கள் மூலம் தெரிய வந்துள்ளதாக தென்கொரியாவை சேர்ந்த இணையச் செய்தி நிறுவனம் அண்மையில் குறிப்பிட்டிருந்தது.

அண்மையில பியாங்யாங் நகரில் வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன்-னின் வலதுகர மாக விளங்கி வரும் உதவியாளர் கிம் யோங்சோல் மற்றும் அந்நாட்டின் உயரதிகாரிகளுடன் தொடர்ந்து இரு நாட்கள் பேச்சுவார்த்தை நடத்திய அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மைக் போம்பியோ, அங்கிருந்து நேற்று முன்தினம் ஜப்பான் நாட்டுக்கு புறப்பட்டு சென்றார்.

அவர் புறப்பட்டு சென்ற பின்னர் வடகொரியா நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சகம் சார்பில் நேற்று மாலை வெளியிட்ட செய்திக்குறிப்பில், 'இருநாட்களாக நடைபெற்ற இந்த உயர்மட்ட பேச்சுவார்த்தையின்போது அமெரிக்காவின் சார்பில் முன்வைக்கப்பட்ட நிர்ப்பந்தங்களும், நிபந்தனைகளும், கடைப்பிடித்த பாணியும் மிகவும் வருத்தம் அளிக்கும் மனப்போக்குடன் அமைந்திருந்தது' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

"கொரியா தீபகற்பத்தை அணு ஆயுதங்களற்ற பகுதியாக மாற்ற வேண்டுமானால் அதற்கான திட்டமிட்ட அணுகுமுறைகளை இருதரப்பினரும் ஒரே நேரத்தில் கையாள்வதுதான் வேகமான வழியாக அமையும்' என அந்நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சக செய்தி தொடர்பாளர் குறிப்பிட்டிருந்தார்.

இருப்பினும், அணு ஆயுத ஒழிப்பு ஒப்பந்தத்தை வடகொரியா மதித்து நடந்து கொள்ளும். அதிலுள்ள ஷரத்துகளை நிறைவேற்றும் என இன்னும் நம்புவதாக டொனால்ட் ட்ரம்ப் நேற்று தெரிவித்தார். இது தொடர்பாக தனது டுவிட்டர் பக்கத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் நாங்கள் கையொப்பமிட்ட ஒப்பந்தத்தை மதித்து கௌரவிப்பார் என்பதில் எனக்கு நம்பிக்கை உள்ளது.

மேலும், குறிப்பாக எங்கள் கைகுலுக்கலை அவர் மறக்க மாட்டார். அதே வேளையில், இந்த ஒப்பந்தத்தின் மீது அமெரிக்காவால் வர்த்தக தடை விதிக்கப்பட்டுள்ள சீனா ஆதிக்கம் செலுத்தும் என கருதுகிறேன் என குறிப்பிட்டுள்ளார். (7-8)

## உச்ச நீதிமன்ற நீதிபதியாக காவாநாங்க் ட்ரம்பால் பரிந்துரை

ரு வழக்கில் பிரெட் விசாரணைகளை நடத்த
தவியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

உச்ச நீதிமன்ற நீதிபதிகளாக தன்னால்
ரிந்துரை செய்யப்படவுள்ளவர்களின் பெயர்
ளை பரிந்துரை செய்யப்போவதாக ட்ரம்ப் அறி
த்த நிலையில் நேற்று முன்தினம் திங்கட்கி
மை 53 வயதான பிரெட் காவாநாங்கை ட்ரம்ப்
ரிந்துரை செய்துள்ளார்.

ட்ரம்பின் சர்ச்சைக்குரிய திட்டங்களுக்கு அனுமதி வழங்கிய உச்ச நீதிமன்ற நீதிபதி அந்தனி கென்னடி எதிர்வரும் 27 ஆம் திகதியுடன் ஓய்வு பெற வுள்ளதாக அறிவித்துள்ளார். இந்நிலையில், புதியவரை தேடும் நடவடிக்கையில் ட்ரம்ப் தீவிரமாக ஈடுபட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (7-8)

## பரிந்துரைக்கு ஆர்ப்பாட்டம்




சாப்தங்களாக பல சர்ச்சைக்குரிய வழக்குக ளில்
ரெட் ஈடுபட்டு வந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இதன் பின்னணியில் மக்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதுமட்டுமன்றி 1990 ஆம் ஆண்டு முன்னாள் அமெரிக்க நீதிபதி பில் கிளின்டன் தொடர்பான ஒரு வழக்கில் பிரெட் விசாரணைகளை நடத்த உதவியவர் என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது.

அமெரிக்க உச்ச நீதிமன்றத்தின் நீதிபதியாக பிரெட் காவாநாங்கை, ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பரிந்துரை செய்தமை குறிப்பிடத்தக்கது. (7-8)

## தென்கொரியா மீண்டும் தனி அணிவகுப்பு



(சியோல்)

தென்கொரியா தனது வருடாந்த அரசஅணிவகுப்பினை, தனது நாட்டின் பாரம்பரியத்திற்கேற்ப இம்முறை தனித்து நடத்த தீர்மானித்துள்ளது. இது வரை காலமும் அமெரிக்காவுடன்இணைந்து தனது வருடாந்த போர் அணிவகுப்பை நடத்தி வந்த நிலையில், இனிவரும் கால த்தில் தனித்து நடத்துவதென நேற்று செவ்வாய்க்கிழமை அறிவித்துள்ளது.

வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன்னிற்கும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பிற்கும் இடையிலான வரலாற்று முக்கியத்துவம் மிக்க சந்திப்பு கடந்த ஜூன் மாதம் 12ஆம் திகதி சிங்கப்பூரில் இடம்பெற்றதையடுத்து, அமெரிக்காவுடன் இணைந்து மேற்கொள்ளும் கூட்டு போர்ப்பயிற்சி நடவடிக்கையை இடைநிறுத்துவதாக இரு நாடுகளும் குறிப்பிட்டிருந்தன. இந்நிலையில், இனிவரும் காலத்தில் போர் நடவடிக்கைகளை எதிர்கொள்வதற்கு மட்டுமன்றி இயற்கை அனர்த்தங்களின் போது பாதுகாப்புச் செயன்முறைகளில் ஈடுபடுவது போன்ற செயற்பாடுகளையும் கருத்திற்கொண்டே தமது நாட்டின் வருடாந்த பயிற்சி அணிவகுப்பு அமையுமென தென்கொரிய உட்கட்டமைப்பு மற்றும் பாதுகாப்பு அமைச்சர் கிம் பூகியும் தெரிவித்துள்ளார். (7-8)

## ள்- 30 லட்சம் பாம்புகள் ஒரு விநோத கிராமம்

ங்களுடன்தான் வாழ்ந்து வருகின்றனர்.
வர்களுக்கு ஏன் இந்த நிலை?

சீனர்களின் அசைவ உணவில் பாம்புக்
றிக்கு முதலிடம் உண்டு. மிகவும் வறட்சியால்
திக்கப்பட்ட இந்தக் கிராமத்தில் சுமார் 50
ண்டுகளுக்கு முன்னர் பாம்புகள் நடமாட்டம்
திகமாக இருந்துள்ளது. நிலப்பரப்பில் மட்டு
ன்றி, இங்குள்ள நீர்நிலைகளிலும் மீன் களை
ட பாம்புகளின் ஆதிக்கம்தான் அதிகம்.

பசிக்கு உணவாக பயன்படுத்தப்பட்ட பாம்
கள் இங்குள்ள மக்களுக்கு செல்வத்தை அள்
ளித்தரும் அமுதசுரபியாக பிற்காலத்தில் மாறின.
தனால், பிறபகுதிகளில் உள்ள மக்கள் இந்த
ராமத்தை 'பாம்பு கிராமம்' என்றே பிற்கா
த்தில் அழைக்க தொடங்கி விட்டனர்.

இறைச்சியாக மட்டுமன்றி, பல்வேறு கொடிய நோய்களை தீர்க்கும் அருமருந்தாகவும் பாம்புகள் பயன்படுவதால் பாம்புப் பண்ணைகளும், பாம்பு வர்த்தகமும் இங்கு நாளடைவில் பல்கிப் பெருகின. குறிப்பாக, கொடிய நச்சுத் தன்மை உள்ள பாம்புகளில் இருந்து எடுக்கப்படும் விஷம், அதிகமான விலைக்கு வெளிநாட்டு மருந்து உற்பத்தி நிறுவனங்களால் கொள்முதல் செய்யப்படுவதால், இங்கு வீட்டுக்குவீடு பெரியதும், சிறியதுமாக பாம்பு வளர்ப்பு தொழில் குடிசைத்தொழிலாகவே மாறிப்போனது. (7-8)

## எதியோப்பியா - எரித்திரியா நாடுகள் சமாதான உடன்படிக்கையில் கைச்சாத்து

எதியோப்பிய மற்றும் எரித்திரியா நாடுகளுக்கிடையிலான போர் நிலைமை முடிவுக்கு வந்து விட்டதென இரு நாட்டுத் தலைவர்களும் அறிவித்துள்ள நிலையில், இருநாட்டுத் தலைவர்களும் இது தொடர்பான ஒப்பந்தமொன்றிலும் கையெழுத்திட்டுள்ளனர்.

எரித்திரிய தலைநகர் அஸ்மராவில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற இரு நாட்டுத் தலைவர்களுக்கு இடையிலான சந்திப்பின் பின்னரே, இது அறிவிக்கப்பட்டுள்ளது.

1998 தொடக்கம் 2000 ஆம் ஆண்டு வரையான எல்லை முரண்பாட்டை முடிவுக்கு கொண்டுவந்த போதிலும் சமாதான உடன்படிக்கை முழுமையாக செயற்படுத்தப்படவில்லை. அத்தோடு, போர் தொடங்கியதிலிருந்து அயல் நாடுகளிடையே பதற்றம் காணப்பட்டது. அதே நேரம், இரு நாடுகளுக்கிடையிலான இராஜதந்திர மற்றும் வர்த்தக ரீதியான உறவுகளை மீளக் கட்டியெழுப்புவதற்கும் இரு நாடுகளும் இணக்கம் தெரிவித்துள்ளன.

எல்லை முரண்பாட்டின் பின்னர் இரண்டாகப் பிரிந்த உறவுகளுக்கு தற்போது முதல் தடவையாக தொலைபேசி வாயிலாகத் தொடர்புகளை மேற்கொள்ளக் கூடியதாகவுள்ளது. 2 தசாப்த காலத்தின் பின்னரான எரித்திரிய ஜனாதிபதி இசையாஸ் அவெவேர்கிக் கும் (Isaias Afewerki) எதியோப்பிய பிரதமர் அபி அஹ்மட்டுக்கும்(Abiy Ahmed) இடையிலான சந்திப்பு ஒரு பதிவை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனா, ரஷ்யாவுடனான உறவுகள் சீர்படுத்த முடியாதளவுக்கு சேதம்

## அரசு மீது பீரிஸ் குற்றச்சாட்டு

(கொழும்பு)

ரஷ்யா மற்றும் சீனாவுடனான இலங்கையின் உறவுகளை மைத்திரி- ரணில் அரசாங்கம் சீர்படுத்த முடியாதளவுக்கு சேதப்படுத்தியுள்ளது என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் குற்றம்சாட்டியுள்ளார். பத்தரமுல்லவிலுள்ள தமது கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாமல் ராஜபக்ஷவுடன் தொடர்புடைய ரஷ்யாவின் இரகசிய நடவடிக்கை தொடர்பாக இலங்கை அரசாங்கம் அறிந்திருந்தது என்று முன்னாள் வெளிவிவகார அமைச்சரான மங்கள சமரவீர அண்மையில் கூறியிருந்தார்.

இதுகுறித்து எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த பீரிஸ் 'அரசாங்கத்துக்கு எதிரான சிறப்பு பரப்புரை நடவடிக்கையை முன்னெடுப்பதற்கு நாமல் ராஜபக்ஷவுக்கு, ரஷ்யா உதவியதாக இப்போது, குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது.

2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவுக்கு சீனா நிதி அளித்தது என்ற குற்றச்சாட்டுக்கும் ரஷ்யா மீதான குற்றச்சாட்டுக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது.



ஐ.நா. பாதுகாப்புச் சபை உறுப்பு நாடுகளான சீனா மற்றும் ரஷ்யாவுடனான உறவுகளை இலங்கை அரசாங்கம் சீர்குலைத்திருப்பதாக தோன்றுகிறது.

ஏனைய நாடுகள் பல்வேறு தீர்மானங்களை எமக்கு எதிராக கொண்டு வந்த போது, இந்த நாடுகள் எப்போதும் அனைத்துலக அரங்கில் இலங்கையுடன் நின்றவை.

சீனாவும் ரஷ்யாவும் உள்நாட்டு அரசியலில் தலையீடு செய்யவில்லை. தற்போதைய குழப்பத்துக்கு இலங்கை அரசாங்கம் தான் பொறுப்பு." என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# அரச பணியாளர்களில் 17 வீதமானோர் சாதாரண தரம் சித்தியடையவில்லை

## புள்ளிவிபரவியல் திணைக்கள ஆய்வில் தகவல்

(கொழும்பு)

அரசாங்கப் பணியாளர்களாக உள்ளவர்களில் 17 வீதமானோர், க.பொ.த. சாதாரண பரீட்சையில் சித்தியடையவில்லை என்று, அரசாங்க சனத் தொகை மற்றும் புள்ளி விபரவியல் திணைக்களம் மேற்கொண்ட ஆய்வில் தெரியவந்துள்ளது.

அரச பணியாளர்களில் ஆண்களில் 12.2 வீதமானோரும் பெண்களில், 4.8 வீதமானோரும் க.பொ.த. சாதாரண தேர்வில் சித்தியடையவில்லை.

பொதுச்சேவையினர் என்ற வகைக்குள் பொதுவாக, அரசாங்கத்தினால் நிர்வகிக்கப்படும், கல்வி, சுகாதாரம், தேசிய பாதுகாப்பு, இராணுவம், பொலிஸ், உட்கட்டமைப்பு (வீதிகள், பாலங்கள், சுரங்கங்கள், நீர்விநியோகம், நில அளவை, மின் விநியோகம், தொலைத்தொடர்பு உள்ளிட்ட) துறைகளில் பணியாற்றுவோர் உள்ளடக்கப்படுவார்கள்.

2016 நவம்பர் 17 ஆம் திகதி நிலவரப்படி, மேற்படி அரச துறைகளில் 1,109, 475 பணியாளர்கள் பணியாற்றுகின்றனர். இவர்களில் 55.1 வீதமானோர் ஆண்கள். 44.9 வீதமானோர் பெண்கள்.

இராணுவம், கடற்படை, விமானப்படை ஆகியவற்றைச் சேர்ந்தவர்கள் இந்த எண்ணிக்கையில் உள்ளடக்கப்படவில்லை.

இந்த ஆய்வுகளின்படி, 35 வீதமானோர் க.பொ.த. உயர்தரத்தில் தேர்ச்சி பெற்றுள்ளனர். 26.1 வீதமானோர் பட்டம் பெற்றவர்களாக அல்லது உயர் கல்வி பெற்றவர்களாக உள்ளனர்.

பட்டம் அல்லது உயர் கல்வி பெற்றவர்களில் பெண்களே அதிகமாக உள்ளனர். பெண்களில் 36.7 வீதமானோரும் ஆண்களில், 17.6 வீதமானோருமே பட்டம் அல்லது உயர் கல்வி பெற்றுள்ளனர்.

அரச மற்றும் அரை அரச துறைகளில் 290,378 பட்டதாரிகள் பணியாற்று கின்றனர். இவர்களில், 2,014 பேர், இளநிலைப் பட்டத்துக்கு மேல் கல்வி கற்றவர்களாக உள்ளனர்.

அரச பணியில் உள்ள பட்டதாரிகளில் 54 வீதமானோர் கலைப் பட்டதாரிகளாவர் முகாமைத்துவ மற்றும் வணிக பட்டதாரிகள் 14.3 வீதத்தினராகவும் விஞ்ஞானமாணி பட்டதாரிகள் 10.4 வீதத்தினராகவும் உள்ளனர்.

நாட்டின் மொத்த சனத்தொகையில் 5 வீதத்தினர் அரச மற்றும் அரை அரச பணியாளர்களாகவுளளனர். மொத்த வேலைப்படையில் இது 14 சதவீதம் என்றும் அரச சனத்தொகை மற்றும் புள்ளிவிபரவியல்திணைக்களத்தின் ஆய்வுகளில் தெரியவந்துள்ளது.(இ-7)

# காணாமல் போனோர் பணியக வெற்றி அரசியல் விருப்பிலேயே தங்கியுள்ளது



## சாலிய பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

காணாம்ல் போனோர் பணியகத்தின் வெற்றி அரசியல் விருப்பிலேயே (political will) தங்கியுள்ளது என்று, அந்தப் பணியகத்தின் தலைவர் சாலிய பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நாடாளுமன்றச் செய்தியாளர்களுக்காக ஒழுங்கமைக்கப்பட்ட பயிற்சிப் பட்டறையில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

"காணாமல் போனோருக்கான பணியகம், 12 பிராந்தியப் பணியகங்களை திறக்கவுள்ளது. இவற்றில் ஐந்து வடக்கிலும் மூன்று கிழக்கிலும் அமைக்கப்படும்.

விசாரணைகளைத் துரிதப்படுத்துவதற்கே பிராந்தியப் பணியகங்கள் அமைக்கப்படுகின்றன.

இலங்கையில் காணாமல் போன அல்லது காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான முழுமையான தரவுகள் கிடையாது. இந்த எண்ணிக்கை தெற்காசியாவிலேயே மிக அதிகமான தாக இருக்கக் கூடும்.

காணாமல்போனவர்களை நினைவில் வைத்துக் கொள்வதற்கான உரிமை இருக்க வேண்டும் என்று நாங்கள் நம்புகிறோம். எதிர்காலத்தில் எங்கள் பணியகம் மூலம் இதற்கான நடவடிக்கைகளை எடுப்போம்.

காணாமல் போனவர்கள் தொடர்பான 13,000 ஆவணங்களை, முன்னைய தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சில் இருந்து பெற்றுக் கொண்டுள்ளோம்.

இப்போது நாங்கள் விசாரணைகளைத் தொடங்கியுள்ளோம். ஆனால், காணாமல் போனோரின் நிலையைக் கண்டறிவது ஒரு நீண்டகாலச் செயற்பாடாகும்" என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## நம் மகிழ்ச்சியை நிர்ணயிக்கிறவர்கள்

"என் வாழ்வும் தாழ்வும் உன்னோடு தான் என்கிற வசனத்திற்கு மிகப் பொருத்தமானவர்கள் இவர்களே". இவர்கள் குடும்ப உறுப்பினர்களாகவும் வேலை செய்யுமிடத்தில் மேலதிகாரிகளாகவும் தொழில் செய்யுமிடத்தில் பங்குதாரர்களாகவும் சமயங்களில் முக்கிய பொறுப்பு வகிக்கும் ஊழியர்களாகவும் கூட அமைந்துவிடுவது ண்டு.

நன்கு வடிகட்டித் தேர்ந்தெடுத்தால் நமக்கு இப்படிப்பட்டவர்கள் பத்துப் பேர்களுக்கு மேல் தேறமாட்டார்கள். இவர்களிடம் நாம் மிகவும் கவனமாகவும் எச்சரிக்கை உணர்வுடனும் நடந்து கொள்ள வேண்டும். இவர்களைச் சீண்டிப் பார்ப்பதும் வெறுப்பேற்றி விடுவதும் சங்கடப்படுத்துவதும் சோதனைக்குள்ளாக்குவதும் ஆபத்து. வேறுவகையில் சொன்னால் இவர்களுக்குச் செய்யப்படும் எதுவும் நமக்கு நாமே செய்து கொள்வதாகும். மகிழ்ச்சியும் சரி துன்பமும் சரி.

ஊரே திரண்டு நம்மை எதிர்த்தா லும் இவர்களின் அரவணைப்பு மட் டும் நமக்கு இருந்து விட்டால் போதும் ஊர் முழுக்க நம்மை ஆதரித்தாலும் இவர்களை மட்டும் எதிர்த்துக் கொண்டால் வம்புதான்.

நம்மில் பலர் விபரம் புரியாமல் மற்றவர்களுக்கு முக்கியத்துவம் கொடுத் தபடி இவர்களைப் புறக்கணித்து வரு கிறோம். இவர்களை நோகடித்து மற் றவர்களை சிரிக்க வைக்கிறோம்.

மற்றவர்களுக்கு மணிக்கணக்கில் நேரம் ஒதுக்கிவிட்டு இவர்களுக்கு எனச் சில நிமிடங்களையே ஒதுக்குகிறோம். இவற்றின் விளைவுகள் உடனுக்குடன் தெரியாது. இவற்றின் பாதிப்பு மெல்லத் தான் தெரியவரும்.

நம் மகிழ்ச்சியை நிர்ணயிப்பவர்கள் இவர்களே என்பதற்காக இவர்களின் கோரிக்கைகள் அனைத்தையும் நாம் நிறைவேற்ற வேண்டும் என்றோ, இவர்கள் செய்யும் தவறுகள் அனைத்தி ற்கும் துணைபோக வேண்டும் என்றோ எவ் விதக் கட்டாயமும் இல்லை.

இவர்களை எங்கே கடிவாளம் போட்டு நிறுத்த வேண்டுமோ அங்கே நிறுத்தலாம். தவறில்லை. ஆனால், அவர்களுக்கு நம் செயல் புரியவைக்கப்பட வேண்டும். ஏற்க வைக்கவும் வேண்டும்.

இனி எவருமே நமக்கு வி.ஐ.பிக்கள் அல்லர். இவர்கள் மட்டுமே நம் வி.ஐ.பி.க்கள்.

இவர்கள் மகிழ்ச்சிக்கு நீங்கள் உத்தரவாதம் தந்தால் உங்கள் மகிழ்ச்சிக்கு நான் உத்தரவாதம் தரத் தயாராக இருக்கின்றேன்.

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள்

தமிழ்மொழி
நேரம் : ஒரு மணித்தியாலம்

01. பின்வரும் பாடலை வாசித்து விடை எழுதுக.

*காந்தித்தாத்தா நம் தாத்தா*
*கருணைமிக்க பெருந்தாத்தா*
*சாந்தமூர்த்தி என்றென்றும்*
*சத்தியமூர்த்தி நம் தாத்தா*

*காலை மாலை எப்பொழுதும்*
*கடவுள் நினைவே கொண்டவராம்*
*வேலை இன்றிச் சிறுபொழுதும்*
*வீணாய்ப் போக்க மாட்டாராம்*

***சத்தியம் பேசுதல் அவர் கொள்கை***
***தருமம் காத்தல் அவர் கொள்கை***
***இத்தலமக்கள் யாவர்க்கும்***
***இன்ப சுதந்திரம் அவர் கொள்கை***

1. இப் பாடலை பாடியவர் யார்? ..................
2. எப்பொழுதும் கடவுள் நினைவு கொண்டவர் யார்? ..................
3. "வாய்மை" என்பதன் ஒத்த சொல்லை எழுதுக? ..................
4. பாடலிலுள்ள இணைமொழியை எழுதுக? ..................
5. அதர்மம் என்பதன் எதிர்ச்சொல்லை எழுதுக? ..................
6. இப் பாடலில் இடம்பெறும் உயர்திணைப் பன்மைச் சொல்லை எழுதுக? ..................
7. காந்தியின் கொள்கைகள் இரண்டு எழுதுக? ..................
8. அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டு வாழ்தல் என்பதைக் குறிக்கப் பாடலில் பயன்படுத்தப்பட்ட சொல்லை எழுதுக? ..................

**02. பின்வரும் சொற்களில் வேறுபட்ட சொல்லின் கீழ்க் கோடிடுக.**

1. காடு, வனம், கானகம், வானரம்
2. சுத்தம், தூய்மை, புனிதம், அசுத்தம்
3. சினம், கோபம், சீற்றம்
4. சம்பளம், வேதனம், சீதனம், ஊதியம்

**03. பின்வரும் சொற்களை உரிய இடத்தில் தெரிந்து எழுதுக.**

1. கூண்டுக் .................. பறந்தது. (கிளி, கிழி)
2. துணியைக் .................. த்து எறிந்தான். (கிளி, கிழி)
3. உணவு உண்ட பின் சிறிது தூரம் .................. வது உம்புக்கு நல்லது. (உலவு, உளவு, உழவு)
4. .................. மப்பும் மந்தாரமுமாய் இருண்டு காணப் பட்டது. (வானம், வாணம்)

**04. பின்வரும் வாக்கியங்களில் வரும் எதிர்பாற் சொற்களை வைத்து வாக் கியத்தை மீண்டும் எழுதுக.**

1. அரசன் அரண்மனைக்குச் சென்றான்.
..................
2. அவள் சிறந்த ஓட்ட வீராங்கனை
..................
3. எனது தம்பி ஓவியம் வரைவான்
..................

**05. ஒலிப்புப் பாடலடிகளை வைத்து இடைவெளியை நிரப்புக.**

1. ஆட்டும் நாய் ..................
.................. காலை
திரையின் பேர் ..................
.................. நூலை

2. வீசும் ..................
.................. சந்து
வெற்றிக்கு ..................
.................. சிந்து

**06. பின்வரும் வாக்கியங்களை வினா வாக்கியங்களாக மாற்றுக.**

1. காந்தியடிகள் சத்திய சோதனை என்ற நூலை எழுதினார்.
..................
2. உண்மை உயர்வை அளிக்கும்.
..................
3. வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான்.
..................

**07. சரியான சொல்லைத் தெரிந்து வெற்றிடங்களில் எழுதுக.**

(அவன், நான், எனது, நீ, அவர்கள்)

1. ஐயா, உங்களுடன் .................. கதைக்க வேண்டும்.
2. .................. போய்க் கணக்குப் பிள்ளையிடம் கேட்டுவா
3. .................. தனது பிழையை அறிந்து கொண்டான்
4. நீங்கள் .................. வேலையில் பிழைகாண் கிறீர்கள்.
5. .................. இருவரும் இணைபிரியாத நண்பர்கள்.

**08. பின்வரும் சொற்களை ஆறுவகைச் சொற்களுக்கேற்ப பிரித்து உரிய இடங்களில் எழுதுக.**

(கொழும்பு, கண், சதுரம், பொரித்தல், இலக்குமி, திங்கள்)

| பொருட் பெயர் | இடப் பெயர் | காலப் பெயர் | சினைப் பெயர் | குணப் பெயர் | தொழிற் பெயர் |
|---|---|---|---|---|---|
| | | | | | |

**09. பின்வரும் வாக்கியங்களில் முடிக்கும் சொல்லை சரியாகக் கண்டு பிடித்து எழுதுக.**

1. அவன் பந்து .................. (விளையாடினான் / விளையாடியது)
2. சந்தையில் பொருட்கள் நிறைந்து .................. (காணப்பட்டது/காணப் பட்டன)
3. ஔவையாரால் ஆத்திசூடி .................. (இயற்றப்பட்டது/இயற்றப்பட்டன)
4. குருவிகள் எல்லாம் பறந்து .................. (சென்றது / சென்றன)

**10. பின்வரும் தொடர்களுக்கான கருத்தை எழுதுக.**

1. கண்ணாயிருத்தல் ..................
2. ஆறப்போடல் ..................
3. புண்படுத்தல் ..................
4. விட்டுக் கொடுத்தல் ..................

**11. பின்வரும் சொற்களில் சரியாக எழுப்பட்ட சொல்லின் கீழ் கீறுக.**

1. சுதந்திரம், சுதத்திரம், சுதந்த்திரம்
2. கைராட்ண்ம், கைராட்டினம், கைராட்டிணம்
3. நாநூறு, நானூறு, நாணூறு
4. கிருமினாசினி, கிருமிநாசினி, கிருமிநாசிணி

**12. பின்வரும் தொடர்மொழிக்கு ஒரு மொழியை எழுதுக.**

1. ஒரே பாடசாலையில் ஒன்றாகப் படித்தவர் ..................
2. தாய், தந்தையரை இழந்தவன் ..................
3. அகரவரிசைப்படி சொற்களுக்குப் பொருள் கூறுவது ..................
4. வீண் செலவு செய்பவன் ..................

**13. ஒருமை வாக்கியத்தைப் பன்மை வாக்கியமாக மாற்றுக.**

1. அணில் அழகாக இருக்கும். ..................
2. மரம் அசைந்து ஆடியது. ..................
3. பூ மலர்ந்தது. ..................

**14. பழமொழிகளின் கருத்தை எழுதுக.**

1. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு.
..................
2. அன்பான சிநேகிதனை ஆபத்தில் அறியலாம்.
..................
3. ஆனைக்கு ஒரு காலம் பூனைக்கு ஒரு காலம்.
..................
4. உப்பிட்டவரை உள்ளளவும் நினை.
..................

**15. ஒழுங்குபடுத்தி எழுதுக.**

1. வழக்கறிஞர் / சிறிது / இந்தியாவில் / காலம் / தொழிலில் / ஈடுபட்டார்
..................
2. இந்து / இலங்கை / நித்திலம் / சமுத்திரத்தின் / அழைக்கப்படுகின்றது என
..................
3. இருவருக்கும் / வேலை / ஒருவர் / செல்வந்தர் / வழங்கினார்
..................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


16. சேர்த்தெழுதுக.
 1. முள் + செடி ........................
 2. மூன்று + நூறு ........................

17. பிரித்தெழுதுக.
 1. வடமாகாணம் ........................
 2. முன்னூறு ........................

18. விடுகதைக்கான விடைகளை எழுதுக.
 1. தன்னிடம் சேருபவனை தன்னைப் போலவே மாற்றுவான் அவன் யார்? ........................
 2. நிற்காமல் ஓடுபவனைத் துரத்திப்பிடிக்க ஆளில்லை அவன் யார்? ........................

19. விடை தருக.
 1. நாய் குரைக்கும் என்பது போல கரடி ........................
 2. கோழி குஞ்சு என்பது போல நெல் ........................
 3. மானின் ஆண் கலை போல பெண் ........................
 4. தமிழ் நெடுங்கணக்கில் உள்ள மெய் எழுத்துக்கள் எத்தனை? ........................
 5. முக்கனிகள் எவை? ........................

20. நீங்கள் நல்ல உறக்கத்தில் இருக்கிறீர்கள். அவ்வேளையில் நிகழும் நிகழ்வுகளை கீழேயுள்ள வரிப்படங்கள் காட்டுகின்றன.
இந்த வரிப்படங்களை பயன்படுத்தி நிகழ்காலத்தில் மூன்று வாக்கியங்கள் எழுதுக.



1. ........................
........................
2. ........................
........................
3. ........................
........................

# 1000 நாட்களை சிறையில் கழித்துள்ள கிழக்கு முன்னாள் முதலமைச்சர் பிள்ளையான்



(ஏறாவூர்)

விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இருந்தபோது சூட்டப்பட்ட பிள்ளையான் எனும் இயக்கப் பெயரால் அழைக்கப்படும் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை தொடர்புடைய குற்றச்சாட்டின் பேரில் கைதாகி தற்போது 1000 நாட்களைச் சிறையில் கழித்துள்ளதாக தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் எனும் அவரது கட்சி உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

இன்று புதன்கிழமையுடன் (11.07.2018) ஆயிரம் நாட்களைத் தொடர்ச்சியான விளக்கமறியல் நீடிப்பின் போது அவர் கழித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைக்காக கொழும்பிலுள்ள குற்றப்புலனாய்வுப் பிரிவுக்கு சென்றிருந்தபோதே கடந்த 2015ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 11ஆம் திகதி கைது செய்யப்பட்ட சிவநேசதுரை சந்திரகாந்தன் மீதான விளக்கமறியில் நீதிமன்றத்தினால் தொடர்ந்தும் நீடிக்கப்பட்டு வருகின்ற நிலையில் இந்த 1000 நாட்களை அவர் சிறையில் கழித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் முன்னாள் தேசிய அமைப்பாளரான பிரதீப் மாஸ்டர் எனப்படும் எட்வின் சில்வா கிருஸ்ணானந்தராஜா, முன்னாள் உறுப்பினரான கஜன் மாமா எனப்படும் கனகநாயகம் மற்றும் இராணுவ புலனாய்வு பிரிவில் கடமையாற்றியதாக கூறப்படும் எம். கலீல் ஆகியோரும் குற்றப் புலனாய்வுத் துறையினரால் ஏனைய சந்தேக நபர்களாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான ஜோசப் பரராஜசிங்கம், 2005ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 25ஆம் திகதியன்று மட்டக்களப்பு புனித மரியாள் தேவாலயத்தில் நத்தார் நள்ளிரவு ஆராதனையில்கலந்து கொண்டிருந்தபோது தேவாலயத்திற்குள்ளேயே வைத்து அடையாளந்தெரியாத துப்பாக்கிதாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இச்சம்பவத்தில் அவரது மனைவி உட்பட சிலர் காயமடைந்தனர்.

கிழக்கில் விடுதலைப்புலிகள் அமைப்பில் பிளவு ஏற்பட்டிருந்த காலகட்டத்தில் இந்தப் படுகொலை சம்பவம் நடந்திருந்தது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் செல்வாக்கு மிக்கவராக கருதப்பட்ட சிவநேசதுரை சந்திரகாந்தன் கிழக்கு மாகாணசபைக்கான முதலாவது தேர்தலில் போட்டியிட்டு 2008 இல் முதலமைச்சராக தெரிவாகி 2012 வரை அந்தப் பதவியில் இருந்தார்.

2012 கிழக்கு மாகாண சபை தேர்தலில் இவர் மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் கிழக்கு மாகாணசபைக்கு தெரிவாகியிருந்த போதிலும் மாகாண அமைச்சரவையில் இடம்பெறவில்லை.

இந்தப் பின்னணியில், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆலோசகர்களில் ஒருவராக பிள்ளையான் நியமனம் பெற்றிருந்தார்.

கிழக்கில் விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து பிரிந்த கருணா எனப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் தலைமையிலான அணியினரால் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பு ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

பின்னர் அந்த அமைப்புக்குள் ஏற்பட்ட முரண்பாடுகளைத் தொடர்ந்து கருணா அம்மான் ஒரு சாராருடன் விலகி அப்போது மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்ததோடு. அக்கட்சியின் பிரதித் தலைவராகவும் நியமிக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மாணிக்கவாசகர் குருபூசையும் திருவாசக முற்றோதலும்

(யாழ்ப்பாணம்)

மாணிக்கவாசகர் குருபூசையை முன்னிட்டு சரவணை பள்ளம்புலம் அருள்மிகு முருகமூர்த்தி திருக்கோவிலில் எதிர்வரும் 16ஆம் திகதி திங்கட்கிழமை காலை 7 மணிக்கு ஆலய மண்டபத்தில் திருவாசக முற்றோதலும் தொடர்ந்து ஆலய நால்வர் மணிமண்டபத்தில் மாணிக்கவாசகர் சுவாமிகளின் குருபூசையும் இடம்பெறும். (இ

# கப்பம் பெற்ற அஜித் கைது

(கொழும்பு)

கைது செய்யப்பட்ட கெஸல்வத்த தினுக்கவின் பிரதான உதவியாளராக கருதப்படும் அஜித் என்பவர், கொழும்பு பிரதான பேருந்து தரிப்பிடங்களில் கப்பம் பெற்று வந்தவர் எனத் தெரியவந்துள்ளது.

கெஸல்வத்த தினுக்க தற்போது டுபாயில் தலை மறைவாக உள்ளதாக சந்தேகிக்கப்படுகிறது. அவரது பிரதான உதவியாளராக கருதப்படும் அஜித் என்பவர், குணசிங்கபுரவில் உள்ள அவரது வீட்டில் வைத்து பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டார்.

சந்தேகத்திற்குரியவர் குணசிங்கபுர, பஸ்டியன் மாவத்தை மற்றும் மத்திய பேருந்து தரிப்பிடங்களில் கப்பம் பெற்று வந்தவர் என ஆரம்பக்கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. இதுதவிர, மனிதக் கொலை தொடர்பில் அவருக்கு எதிராக குற்றச்சாட்டு ஒன்று இருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

# சுவிஸில் விடுதலைப்புலிகளுக்காக மீண்டும் நிதி திரட்டும் உறுப்பினர்கள்

(கொழும்பு)

சுவிட்ஸர்லாந்தில் விடுதலைப் புலிகளின் செயற்பாட்டாளர்கள் மீண்டும் நிதி திரட்ட ஆரம்பித்துள்ளதாக சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சுவிட்ஸர்லாந்தில் லுசன் - பேர்ன், சூரிச், ஷொப்னசன் பாசல், ஆராவ் ஆகிய பிராந்தியங்களில் உள்ள புலிகளின் உறுப்பினர்கள் இவ்வாறு நிதி திரட்டும் பணியில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சுவிஸ் நீதிமன்றம் விடுதலைப் புலிகள் அமைப்பு பயங்கரவாத அமைப்பு அல்ல என வழங்கிய தீர்ப்பை அடுத்தே அங்கு மீண்டும் அந்த அமைப்புக்கான நிதி சேகரிப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அந்த அமைப்பின் சுவிஸ் தலைவர் அப்துல்லா ஜெயபாலன் குறிப்பிட்டுள்ளதாகவும் சிங்கள ஊடகத்தில் குறிப்பிட்டுள்ளது.

மேலும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரனின் விடுதலைப் புலிகள் தொடர்பான கருத்து தெற்கில் பாரிய அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்தது.

இந்த நிலையில், இவர் கடந்த சில நாட்களுக்கு முன்னர் பதவியை இராஜினாமா செய்திருந்தார்.

இந்நிலையில், சிங்கள ஊடகம் ஒன்று இவ்வாறு தகவல் வெளியிட்டுள்ளமை மீண்டும் தெற்கு அரசியலை கொதி நிலைப் படுத்தியுள்ளது. (இ-7)

# தேசிய வளங்களைப் பாதுகாக்க புதிய அரசியல் திட்டம் அறிமுகம்

## மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டின் தேசிய வளங்களை பாதுகாப்பதற்காக புதிய அரசியல் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தவுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இதற்காக அனைவரும் இணைந்து புதிய அரசியல் கட்சியொன்றையும் ஆரம்பித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

பதுளையில் இடம்பெற்ற "ஜனபல பவுர" நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசாங்கத்தினால் நாட்டில் உள்ள அனைத்து தேசிய வளங்களும் வெளிநாட்டுடைமை ஆக்கப்பட்டு வருவதாகவும் அவர் இதன்போது தெரிவித்துள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலப்புத் தேர்தலுக்கு கையுயர்த்திவிட்டு என்னைத் துரோகியாகக் காட்ட முயற்சி

## முஸ்லிம் அரசியல்வாதிகள் மீது பைஸர் பாய்ச்சல்



(கொழும்பு)

கலப்புத் தேர்தல் முறையில் தொகுதிகள் பிரிக்கப்படுகின்ற போது முஸ்லிம்களுக்கு அநீதி ஏற்படலாம் என்பதை நான் ஏற்றுக்கொள்கின்றேன்.

அதற்காக மோசடிகளுக்குத் துணைபோகக் கூடிய பழைய முறைக்குச் செல்வதை எக்காரணம் கொண்டும் அனுமதிக்க முடியாதெனத் தெரிவித்த உள்ளூராட்சி மாகாண சபைகள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் பைஸர் முஸ்தபா, கலப்புத் தேர்தலுக்கு அன்று கையுயர்த்திய முஸ்லிம் தலைவர்கள் இன்று சமூகத்தின் மத்தியில் என்னைத் துரோகியாகக் காட்ட முற்படுவதாகவும் தெரிவித்தார்.

முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள் தேசியக் கட்சி வாகனங்களின் மிதி பலகையில் பயணித்து வெற்றி பெற முடியாது என்பதால் தான் எதிர்க்கத் தொடங்கியுள்ளனர். அவர்கள் போட்ட கணக்கு பிழைத்துவிட்டதால்தான் இன்று எதிர்த்துக் கூச்சலிட்டு வருவதாகவும் அமைச்சர் பைஸர் முஸ்தபா சுட்டிக்காட்டினார்.

விளையாட்டுத்துறை அமைச்சில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் மாகாணசபைத் தேர்தலும் அதனால் உருவாகியுள்ள சர்ச்சைகள் தொடர்பாகவும் விளக்கமளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

புதிய முறையில்தான் மாகாண சபைகளுக்கான தேர்தல் நடத்தப்படும். இவ்வருடம் இறுதிக்குள் அதனை நடத்தத்திட்டமிடப்பட்டுள்ளது. அது குறித்து அடுத்த சில வாரங்களுக்குள் இறுதி முடிவெடுக்கப்படவிருப்பதாகக் குறிப்பிட்ட அமைச்சர் இது குறித்து மேலும் விளக்கமளிக்கையில்.

புதிய கலப்புத் தேர்தல் முறையால் எந்தவொரு இனத்திற்கும் எந்தவொரு கட்சிக்கும் அநீதி ஏற்படப்போவதில்லை. முஸ்லிம்களுக்கான பிரதிநிதித்துவம் குறையும் என்ற குற்றச்சாட்டை ஏற்றுக்கொள்ள முடியாது. தேசியக் கட்சிகளின் வாகன மிதிபலகையில் பயணிக்க நாட்டம் கொள்பவர்களே அச்சம் கொண்டுள்ளனர். முஸ்லிம் கட்சிகள் தனித்துப், போட்டியிட்டால் வாக்கு வீதத்துக்கேற்ப உரிய பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக் கொள்ள முடியும்.

வெட்கமின்றி அன்று கையுயர்த்தி 50/50 கேட்டுவிட்டு இன்று அது வேண்டாம், பழைய முறையே வேண்டுமெனக் கோருவதை என்னவென்று கூறுவது?. என்னால் முட்டாள்தனமாக அரசியல் செய்ய முடியாது. எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டதையே இன்று உருவாக்கியிருக்கின்றோம். தொகுதி பிரிக்கப்படும் போது முஸ்லிம்களுக்கு சில இடங்களில் அநீதி நிகழலாம். அதை மறுக்கவில்லை. இதற்கு ஒரேவழி கட்சித் தலைவர்கள் மட்டத்திலான கூட்டத்தைக்கூட்டி பாராளுமன்றத்தின் மூலம் மாற்று வழியொன்றைக் காண முடியும். அதைவிடுத்து பழைய முறையில் நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

இந்த இடத்தில் முக்கிய விடயமொன்றைச் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன். எல்லை நிர்ணயக் குழுக் கூட்டங்கள் நடைபெற்ற காலப் பகுதியில் பிரதான முஸ்லிம் கட்சிகளின் தலைவர்களான ரவூப் ஹக்கீம், றிசாத் பதியுதீன் இருவரும் 70 சதவீதமான அமர்வுகளுக்கு வருகைதரவில்லை. முக்கியமான விடயங்களில் அசண்டையீனமாக இருந்துவிட்டு கூச்சல் போடுவது நியாயமானதா என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

மோசடி மிக்க பழைய முறைமைக்குச் சென்றால் அது மக்களுக்குச் செய்யக் கூடிய பெரும் துரோகமாகும். அத்துடன் பழைய முறைமை மீண்டும் இனவாதத்தின் பக்கம்நாடு செல்லும்நிலையை உருவாகும் என்பதை மறந்துவிடக் கூடாது. சகல கட்சிகளும் ஒன்றிணைந்தால் எல்லைநிர்ணய ஏற்பாடுகளில் காணப்படுகின்ற குறைகளை ஒரு மாதத்துக்குள் நிவர்த்தி செய்துகொள்ள முடியும்.

சிலர் அரசியலுக்காக சமூகத்தை விற்கும் செயலில் இறங்கியுள்ளனர். இவர்கள் மக்களுக்காகப் பேசுகிறார்களா? தமது சுயநல அரசியலுக்காக நாடகமாடுகிறார்களா? எனக் கேட்க விரும்புகின்றேன். எம்மீது குற்றம் சுமத்துவதையும் விமர்சிப்பதையும் விடுத்து மாற்று நடவடிக்கைக்குரிய ஆலோசனைகளை முன்வைக்க வேண்டும்.


தங்களால் தனித்துப் போட்டியிட்டு ஒரு இடத்தைக் கூட வெற்றிகொள்ள முடியாது என்பதற்காக தேசியக்கட்சிகளில் தங்கி தமது அரசியல் பிழைப்பை நடத்த முனைகின்றனர். பெரும்பான்மையான முஸ்லிம்கள் தேசியக் கட்சிகளையே ஆதரிக்கின்றனர். அவர்களின் வாக்குகளால் பின்கதவு வழியாகவும் முயற்சியையே இவர்கள் செய்யப் பார்க்கின்றனர்.

பணத்தைக் காட்டி அரசியல் செய்ய இடமளிக்க முடியாது. இந்தப்புதிய முறையால் முஸ்லிம் பிரதிநிதித்துவம் ஒருபோதும் குறையாது. ஆனால் முஸ்லிம்களை பகடைக்காய்களாக்கி அரசியல் நடத்தும் சிறுபான்மையினக் கட்சிகளுக்கு தோல்வி ஏற்படும் என்பதால் அச்சம் கொண்டே எதிர்ப்புக்குரல் எழுப்புகின்றனர். அந்த எதிர்ப்பை காரணமாக வைத்து பழைய முறைக்கு இடமளிக்க முடியாது எனவும் அமைச்சர் பைஸர் முஸ்தபா மேலும் தெரிவித்தார். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1459

### ராகுலன்

நல்ல குறிக்கோளை அடைவதற்காகத் தொடர்ந்து முயலும் மனிதனின் செயற்பாடே பிற்காலத்தில் அனைவரும் படிக்கும் வரலாறாக மாறுகிறது
-கார்ல் மார்க்ஸ்-



### சில்பா

உன்னிடம் சண்டை போடும் இந்த இதயத்தை விட்டுவிடாதே...! என்னைவிட உன்னை யாரும் நேசித்துவிட முடியாது



### சிவா

வெற்றி என்பது உன் நிழல் போல... நீ அதைத் தேடிப்போகவேண்டியதில்லை. நீ வெளிச்சத்தை நோக்கி நடக்கும் போது உன்னுடன் வரும்



### லீசா

மனிதன் வாழ்ந்தால் மட்டும் போதாது மனிதாபிமானத்துடன் வாழ வேண்டும்




### அஸ்வந்த்

உனது கண்கள் சரியாக இருந்தால் இந்த உலகத்தை உனக்குப் பிடிக்கும். உனது நாக்கு சரியாக இருந்தால் இந்த உலகத்துக்கு உன்னை பிடிக்கும்



### காவ்யா

போதும் பொழுதே என்னை ரசித்துக்கொண்டு போ திரும்பவரமாட்டேன் உனக்காக...
-இப்படிக்கு வாழ்க்கை-



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகர்ப்புறங்களை இணைக்கும் நோக்கில் 2 அதிவேக நெடுஞ்சாலைகள் விஸ்தரிப்பு

## சிங்கப்பூர் மாநாட்டில் பிரதமர் ரணில் தெரிவிப்பு



(சிங்கப்பூர்சிற்றி)

134 கிலோ மீற்றர் நீளமான மத்திய அதிவேக நெடுஞ்சாலை மற்றும் அம்பாந்தோட்டை வரையில் 241 கிலோ மீற்றர் நீளமான தெற்கு அதிவேக நெடுஞ்சாலை விஸ்தரிப்பு ஆகியவற்றின் ஊடாக நகரப் புறங்களுக்கான வழிகள் இரண்டு திறக்கப்படவிருப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சிங்கப்பூரில் தெரிவித்தார்.

மேல்மாகாண பெருநகரத் திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்படும் இந்த இரு வழிகளும் 9 மில்லியன் மக்களை இணைக்கும். தெற்கிற்கான பாதையானது 500 ஏக்கர் நிலப்பரப்பில் சூழலுக்கு நட்பான மூன்று பாரிய சுற்றுலா விடுதிகளுடன் அமைக்கப்படவுள்ளது என்றும் தெரிவித்தார்.

சிங்கப்பூரில் ஆரம்பமான உலக நகரங்கள் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கையின் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் மேலும் விளக்கமளித்த அவர், கொழும்பு மற்றும் தலைநகரான ஸ்ரீஜெயவர்தனபுர போன்ற பெருநகரங்களை இணைக்கும் வகையில் பாரிய உட்கட்டமைப்புத் திட்டங்கள் முன்னெடுக்கப் பட்டுள்ளன. டைல் ரயில்கள், உயர்த்தப்பட்ட நெடுஞ்சாலைகள், உயர்த்தப்பட்ட ரயில் பாதைகள், பழைய நீர்இணைப்புக்களை புனரமைத்தல், மூன்று எல்.என்.ஜி. மின்னுற்பத்தி நிலையங்கள் உள்ளிட்டவை இதில் அடங்குகின்றன. சரக்கு பரிமாற்றத்துக்கான நகரம், விமானப் போக்குவரத்துக்கான நகரம், இயற்கை காடுகள் கொண்ட நகரம் போன்றவற்றையும் இவை கொண்டிருக்கும். இந்து சமுத்திரத்தில் கேந்திர முக்கியத்துவமான அமைவிடத்தை உறுதிப் படுத்தி, உலக பொருளாதார வளர்ச்சிக்கு கணிசமான பங்களிப்பைச் செலுத்துவதே இலங்கையின் நீண்டகால நோக்கமாகும் என்றார்.

கழிவுநீர் சுத்திகரிப்பு, திண்மக்கழிவு முகாமைத்துவம், சுற்றுச்சூழல் தொகுதி, ஆற்றங்கரை பாதுகாப்பு வலயம் என்பவை குறித்தும் அதிக கவனம் செலுத்தியுள்ளோம். கொழும்பு மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகங்களை அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. கடற்பரப்பை நிரப்பி அமைக்கப்படும் கொழும்பு துறைமுகத் திட்டம் கரையோர நிதி நிலையமாக செயற்படும். விசேடமான நான்கு பொருளாதார வலயங்கள் தொழிற்துறைக்கான உட்கட்டமைப்புக்களை வழங்கும். இதற்கான திட்டங்கள் பெருநகர அமைச்சின் ஊடாக ஆரம்பகட்டத்தில் உள்ளன.

"எதிர்காலத்தில் வாழக்கூடிய மற்றும் நிலையான நகரங்கள் : சவால்கள்" என்ற தலைப்பில் பிரதமர் உரையாற்றினார். நகரமயமாக்கல் என்பது மாற்றுப் போக்கை உடையதாக இருப்பதுடன், பொருளாதார வளர்ச்சிக்கு உந்துசக்தியாகவிருக்கிறது. மக்களையும் தொழில் துறையையும் ஒன்றிணைத்து, பாரிய நகரங்கள் தொழில்மயமாக்கல் மற்றும் நவீனமயமாக்கல் என்பவற்றின் மையங்களாகியுள்ளன. இதனால் பாரிய பொருளாதார நன்மைகளை அடைய முடியும்.

உற்பத்தியை மேம்படுத்தல் மற்றும் வேலைவாய்ப்பு அதிகரிப்பு என்பவற்றுக்கு நிறுவனங்களும் தொழிலாளர்களும் இணைந்து செயற்பட வேண்டும். பாரிய நகரங்கள் ஒரு படி முன்னேறிச் சென்றுள்ளன. இவை சர்வதேச சந்தைகளையும் வர்த்தகங்கள் மற்றும் பணியாட்கள் என சகல தரப்பையும் இணைத்து வினைத்திறன் மிக்க மையங்களாக மாறியுள்ளன. இதனால் செல்வங்களை உருவாக்கும் இடங்களாக நகரங்கள் மாறியுள்ளன. கிராமங்களில் இல்லாத வசதிகளின் ஊடாக நகரங்களை நோக்கி மக்கள் ஈர்க்கப்படுகின்றனர் எனவும் பிரதமர் தனதுரையில் தெரிவித்தார்.

ஆசியாவின் பாரிய நகரங்களில் காணப்படும் சந்தர்ப்பங்கள் மற்றும் சவால்கள் குறித்து சுட்டிக்காட்டிய பிரதமர், பீஜிங், டியான்ஜின், கினுவாங்தா ஆகிய நகரங்களுக்கான வழிகள் 100 மில்லியனுக்கும் அதிகமான சனத்தொகையை இணைக்கிறது.

இந்தப் பாரிய நகரங்களின் மையங்கள் பீஜிங்கிலிருந்து பாங்கொக், அங்கிருந்து ஜகார்த்தா, அங்கிருந்து மும்பை என எதிர்காலத்தில் விரிவடைந்து செல்லும். ஆசியாவில் உள்ள நகரங்கள் விரைவில் வளர்ந்து வருகின்றன. சிங்கப்பூர், டோக்கியோ மற்றும் கொபே ஆகிய மூன்று நகரங்களே உலகின் முதல் 50 நகரங்கள் பட்டியலில் உள்ளடங்கியுள்ளன. மேர்க்கர் வாழ்க்கைத்தர சுட்டியில் இலங்கை உயர்ந்த புள்ளிகளைப் பெற்று தெற்காசியாவில் முன்னணி நகரமாக கொழும்பு விளங்குகின்றது.

231 நகரங்களில் 137 ஆவது இடத்தில் உள்ளது. நாம் எதிர்கொள்ளும் சவால் என்னவெனில், தலைவர்கள் இந்த நகரங்களை வாழ்வதற்கு ஏற்றமாதிரியான நகரங்களாக மாற்ற வேண்டும் என்பதே.

உலகின் நிலைபேறான அபிவிருத்தி என்பது எமது வெற்றி அல்லது தோல்வியிலேயே தங்கியுள்ளது. திறமையான பெருநகர சுற்றாடல் முகாமைத்துவத்தைக் கொண்ட நக்ரத்துக்கு சிறந்த உதாரணமாக சிங்கப்பூர் விளங்குகிறது. சிங்கப்பூர் மக்களுக்கு தரமான வாழ்க்கைச் சூழலை உறுதிப்படுத்துகிறது என்று மேலும் தெரிவித்தார். (இ-7)

# லசந்த விக்கிரமதுங்கவின் கொலை வழக்கு ஒத்தி வைப்பு



(கொழும்பு)

சிரேஷ்ட ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க கொலை செய்யப்பட்டமை தொடர்பான வழக்கு எதிர்வரும் 16 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இவரின் கொலை தொடர்பான வழக்கு நேற்று முன்தினம் திங்கட்கிழமை கல்கிஸை நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே பதில் நீதவான் ரத்னா கமகே இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

இதன்போது லசந்த விக்கிரமதுங்க கொலை தொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்ட பல்வேறு விசாரணைகளின் அறிக்கைகள் மன்றில் முன்வைக்கப்பட்டன. பிரதிவாதிகள் தரப்பு சட்டத்தரணிகள் குறித்த அறிக்கைகளின் பிரதிகளை வழங்குமாறு மன்றில் கோரிக்கை விடுத்தனர்.

இதற்கிணங்க நீதிமன்றம் இதற்கான அனுமதியை வழங்கியதுடன் வழக்கை எதிர்வரும் 16 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்து உத்தரவிட்டது.

லசந்த விக்கிரமதுங்க கொலை தொடர்பான விசாரணைகள் குறித்த தகவல்களை வெளியிடாமை தொடர்பான குற்றச்சாட்டில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரசன்ன நாணயக்கார மற்றும் கல்கிஸை பொலிஸ் நிலையத்தின் உப பொலிஸ் இன்ஸ்பெக்டர் திஸ்ஸ சுகதபால உள்ளிட்டோர் எதிர்வரும் 16 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மாணவனைத் தாக்கிய முன்னாள் அதிபருக்கு மூன்றாண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை!

(கொழும்பு)

மாணவனை கடுமையாகத் தாக்கிய குற்றச்சாட்டின் பேரில், பொல்பிதிகம தேசிய பாடசாலையின் முன்னாள் அதிபருக்கு குருநாகல் மேல் நீதிமன்ற நீதவான் மேனகா விஜேசுந்தர நேற்று முன்தினம் 3 வருட கால கடூழிய சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

மொரகொல்லாகம பகுதியைச் சேர்ந்த 60 வயதுடைய, ஓய்வுபெற்ற அதிபரான ராஜகருண முதியன்சலாகே ஜயவர்தன பண்டார என்பவருக்கே இவ்வாறு கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

மேலும், 10,000 ரூபாய் அபராதமாகச் செலுத்த வேண்டும் எனவும் பாதிக்கப்பட்ட மாணவனுக்கு ஒரு இலட்சம் ரூபாய் நட்டஈடு வழங்க வேண்டும் எனவும் நீதவான் உத்தரவிட்டுள்ளார். (இ-7)

# ஆறுமாதக் குழந்தை அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதி; வைத்தியசாலையில் ஹெரோயின் பாவித்த இளம் தாய்

(கொழும்பு)

ஆறு மாதக் குழந்தையை அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதித்திருந்த நிலையில், வைத்தியசாலையில் இளம் தாய் ஒருவர் போதையில் தள்ளாடியுள்ளார்.

பொரலஸ்கமுவ பிரதேசத்தை சேர்ந்த 27 வயதுப் பெண்ணின் 6 மாத குழந்தை நிமோனியா காய்ச்சலால் பாதிக்கப்பட்டமையினால் கொழும்பு வைத்தியசாலையில்அனுமதிக்கப்பட்டார். பின்னர் அங்கிருந்து கராப்பிட்டிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டது. அங்கு குழந்தை ஆபத்தான நிலையில் இருந்தமையினால் அதி தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

குழந்தை தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் குழந்தையின் தாயார் வைத்தியசாலையின் மேல் மாடியிலுள்ள தாய்மார்களுக்கான அறையில் தங்கியிருந்துள்ளார். இந்தப் பெண்ணின் கணவர் வெளிநாட்டில் இருந்தமையினால் குழந்தை தாயுடன் வைத்தியசாலைக்கு அழைத்து வரப்பட்டுள்ளார்.

இதேவேளை, குழந்தை அதி தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வந்துள்ளது. இதன்போது இந்த பெண்ணின் செயற்பாடு வைத்தியசாலையில் இருந்த ஏனைய தாய்மார்களுக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டிருந்த நிலையில் வைத்தியசாலையின் கழிப்பறையில் வைத்து ஹெரோயின்போதைப்பொருள் பயன்படுத்தும் போது அவர் சிக்கியுள்ள நிலையில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய வைத்தியசாலை பொலிஸாரினால் அந்தப் பெண் கைது செய்யப்பட்டுள்ளார். காலி தலைமை பொலிஸார் ஊடாக பெண் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார்.

பின்னர் குற்றவாளியாகிய பெண்ணை கடுமையாக எச்சரித்த நீதிபதி 5000 ரூபாய் அபராதம் விதித்து விடுவித்துள்ளார். (இ-7)

# எஸ்.கே.கிருஷ்ணா எவ்வாறு படுகொலை செய்யப்பட்டார்?

## நேரில் கண்டவர் தகவல்

(கொழும்பு)

நவோதய மக்கள் முன்னணியின் தலைவரும் கொழும்பு மாநகர சபையின் உறுப்பினருமான எஸ்.கே. கிருஷ்ணா எவ்வாறு கொலை செய்யப் பட்டார் என்ற தகவல்கள் வெளிவந்துள்ளன.

செட்டியார்தெருவிலுள்ள அவரது கடைக்கு முன்னால் நின்றுகொண்டிருந்த கிருஷ்ணா காலை 7.20 மணியளவில் இனந்தெரியாத நபரின் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தார்.

நவோதய மக்கள் முன்னணியின் உறுப்பினரான காலஞ்சென்ற வேலணை வேணியனின் இறுதிக்கிரியைகளுக்கான ஏற்பாடுகளை செய்வதற்காக அவருடைய விற்பனை நிலையத்திற்கு சென்றிருந்தார்.

இதன்போதே குறித்த அனர்த்தம் நிகழ்ந்தது. இது தொடர்பில் சம்பவத்தை நேரில் பார்த்தவரும் நவோதய இளைஞர் அமைப்பின் பொதுச் செயலாளருமான சந்திரன் இளைய தம்பி தகவல் வெளியிட்டுள்ளார்.

"அவருடைய வர்த்தக நிலையத்தை திறந்து சமய வழிபாடுகளில் ஈடுபட்டிருந்தார். அப்போது இனம்தெரியாத நபர் மோட்டார் சைக்கிளில் கடைக்கு வந்தார்.

வந்து வியாபார ரீதியாக பேசுவதைப் போல் உரையாடி எமது தலைவர் எஸ்.கே.கிருஷ்ணாவை துப்பாக்கியால் சுட்டார்.

இதில் எமது தலைவருக்கு இதயத்திலும் நெஞ்சின் இரு பக்கமும் மற்றும் தலையிலும் துப்பாக்கியால் சுடப்பட்டது. 3 அல்லது 4 தோட்டாக்கள் அவருடைய உடலில் பாய்ந்ததை நாம் கண்டோம்.

இந்த வீதியிலுள்ள கண்காணிப்புக் கமராவை பரிசோதித்துப் பாருங்கள், கடையில் பொருத்தப்பட்டிருந்த கமராவை பரிசோதித்துப் பாருங்கள், வந்தது யார் என்று கண்டு பிடியுங்கள், பொலிஸார் உரிய விசாரணை நடத்தி குற்றவாளியை கண்டு பிடியுங்கள் என தெரிவித்தார். (இ-7)

# 16 பேர் அணியிலிருந்து தயாசிறி விலகவில்லை

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜெயசேகர தொடர்ந்தும் 16 பேர் அடங்கிய குழுவில் அங்கம் வகிப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் தாம் உள்ளிட்ட 16 பேர் அடங்கிய குழு, தொடர்ந்தும் ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற குழு கூட்டத்தில் பங்கேற்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அண்மையில் இடம்பெற்ற ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற குழு கூட்டத்தில் எஸ்.பி. திஸாநாயக்க மற்றும் தயாசிறி ஜெயசேகர ஆகியோர் பங்கேற்கவில்லை. இந்தநிலையில், கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு நேற்று கருத்துத் தெரிவித்த எஸ்.பி.திஸாநாயக்க 16 பேர் அடங்கிய நாடாளுமன்ற குழு முன்னைய நிலைப்பாட்டிலேயே தற்போதும் இருப்பதாக கூறியுள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக சனத்தொகை தினம் இன்று

இலங்கையின் சனத்தொகையின் சமகால மாற்றங்களும் சமூக பொருளாதார விளைவுகளும் ஒரு நாட்டின் சமூக பொருளாதார மற்றும் அர சியல் கலாசார விடயங்களில் தாக்கம் செலுத்தும் ஒன்றாக சனத்தொகை விளங்குகின்றது. எமது நாட்டின் இயற்கை வளங்களை மனித பயன்பாட்டிற்காக மாற்றியமைக்கும் மிக முக்கிய வளமான மனித வளத்தினையும் இச் சனத்தொகையே கொண்டிருக்கின்றது. இலங்கையின் குடித்தொகை அளவானது முதலாவது குடிக்கணிப்பு இடம்பெற்ற 1871 ஆம் ஆண்டுகளில் 2.400 மில்லியன்களாக மட்டுமே காணப்பட்டதுடன் 2011 ஆம் ஆண்டு இறுதிக் குடிக்கணிப்பின் போது 20. 26 மில்லியன்களாகவும் தற்போது 2017 ஆம் ஆண்டு மத்திய வங்கி அறிக்கைப்படி 21.444 மில்லியன்களாகக் காணப்படுகின்றது. இலங்கையின் குடித்தொகை அளவுகளுடன் அதன் வளர்ச்சிப் போக்கை நோக்கும் போது அது படிப்படியாகக் குறைவடைந்து செல்லும் போக்கைக் கொண்டே காணப்படுகின்றது. 1953 ஆம் ஆண்டு இலங்கையின் குடித்தொகை வளர்ச்சி வீதம் 1953ஆம் ஆண்டு 2.8 வீதமாக ஒரு உயர் அளவாக் காணப்பட்ட போதும் அதற்குப் பின்வந்த காலங்களில் குடித்தொகை வளர்ச்சி குறைவடைந்தே சென்றுள்ளது. 2001 ஆம் ஆண்டு 1.2 வீதமாக இருந்த குடித்தொகை வளர்ச்சி வீதம் 2016 ஆம் ஆண்டு 1.1 வீதமாகவும் குறைவடைந்து செல்கின்றது. இலங்கையின் குடித் தொகை வளர்ச்சி வீதம் குறைவடைந்து செல்வதுடன் பல்வேறு குடித்தொகைக் காரணிகள் செல்வாக்குச் செலுத்தி வருகின்றன. பிறப்பு வீதத்தில் ஏற்பட்டுவரும் வீழ்ச்சி நிலை மற்றும் இலங்கையிலிருந்து வெளிநாடு நோக்கிய குடிப்பெயர்வு (தேறிய குடிப்பெயர்வு) என்பன இவ்வாறான குடித்தொகை வளர்ச்சி குறைவடைந்து செல்வதற்கு நேரடியாக பங்காற்றுகின்றது.

இலங்கையின் குடித்தொகையில் ஏற்பட்டு வரும் முக்கிய மாற்றமாக குடித்தொகை வயதமைப்பில் ஏற்பட்டு வரும் மாற்றம் இனங்காணப்படுகின்றது. இம் மாற்றம் இலங்கையின் சனத்தொகையின் வயதுப் பிரிவினரின் முக்கிய மூன்று பிரிவினரிடையே ஏற்பட்டு வருகின்றது. 0 - 14 வயதுப் பிரிவு (இளவயதுப் பிரிவு ), 15- 59 வயதுப் பிரிவு ( ஊழியப் படை), 60 வயதிற்கு மேல் (முதியோர் பிரிவு). இவ் வயதுப்பிரிவினரை அடிப்படையாகக் கொண்டே நாட்டின் பாடசாலைக் கல்வி மற்றும் உயர் கல்வி நடவடிக்கைகள் வேலை வாய்ப்புகள், முதியோர் தொடர்பான நலத்தேவைகள் மற்றும் எதிர்காலக் குடித்தொகை எதிர்வு கூறல்கள் என்பன மேற்கொள்ளப்படுகின்றன. கீழுள்ள அட்டவணை இலங்கையின் குடித்தொகை வயதமைப்பில் ஏற்பட்டு வரும் மாற்றங்களின் போக்கினைக் காட்டுகின்றது.

குடித்தொகை வயது மாற்றம் அட்டவணை -10 -14 வயதுப் பிரிவு, 1946 ஆம் ஆண்டு, 1981 ஆம் ஆண்டு, 2001 ஆம் ஆண்டு, 2011 ஆம் ஆண்டு, 2021 ஆம் ஆண்டு எதிர்வுகூறப்பட்ட, 2041 ஆம்ஆண்டு எதிர்வு கூறப்பட்ட 0- 14 வயது 37.2, 35.2, 24.8, 25.8, 18.9, 16.7, 15- 59 வயதுப் பிரிவு 57.4, 65.2, 64.6, 62.0, 63.2, 57.9 அட்டவணையின்படி இலங்கையின் 0-14 வயதுப் பிரிவை உடைய இள வயதுக் குடித்தொகையில் தொடர்ச்சியாக வீழ்ச்சி ஏற்பட்டு வருகின்றது. இவ்வீழ்ச்சிக்கான காரணங்களாக கருவளவாக்கத்தில் ஏற்பட்டுவரும் விரைவான வீழ்ச்சியுடன் முதியோர் குடித்தொகையில் ஏற்பட்டு வரும் அதிகரிப்பும் காரணமாக அமைகின்றது.

இலங்கையின் சமூக அமைப்பில் ஏற்பட்டுவரும் மாற்றம் காரணமாக குடும்பம் ஒன்றின் சராசரி உறுப்பினர்களின் எண்ணிக்கை சுருங்கி வருகின்றது. 2008 ஆம்ஆண்டு 4.1 ஆக இருந்த குடும்பங்களின் சராசரி உறுப்பினர் எண்ணிக்கை 2017 ஆம் ஆண்டு மத்திய வங்கி அறிக்கைப்படி 3. 1 ஆகக் குறைவடைந்து வருவதானது சிறிய குடும்பம் ஒன்றினை விரும்பும் தன்மையைக் கொண்டிருப்பது பிறப்பு வீதம் குறைவடைந்து செல்வதற்குக் காரணமாகின்றது. அத்துடன் பெண்களின் கல்வி மட்டம் மற்றும் சராசரித் திருமண வயது என்பவற்றில் ஏற்படும் அதிகரிப்பு கருவளவாக்கத்தின் வீழ்ச்சிநிலைக்குக் காரணமாகவும் அமைந்துள்ளது. இவ்வாறு இளவயதுப்பிரிவில் ஏற்பட்டு வரும் வீழ்ச்சி காரணமாக எதிர்காலத்தில் நாட்டின் வளம்மிக்க ஊழியப்படை குறைவடையும் நிலை காணப்படும்.

இளைய வயதுடைய குடித்தொகையில் ஏற்படும் வீழ்ச்சியால் ஆரம்பப் பிரிவில் பாடசாலைகளில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சிநிலை ஏற்பட்டு வருகின்றது. தற்போது இலங்கையில் உள்ள சில ஆரம்பப் பாடசாலைகளில் மாணவர்கள் சேர்வு வீதம் குறைவாக இருப்பதனால் பாடசாலைகள் மூடப்படும் நிலைமைகள் ஏற்பட்டும் வருகின்றன. குறிப்பாக வட-கிழக்கு உள்ளிட்ட தமிழ் சமூகத்தினரிடையில் இளவயதுப் பிரிவில், ஏற்பட்டுவரும் வீழ்ச்சி நிலை பல்வேறு அரசியல் சமூகப் பாதிப்புக்களை எதிர்காலத்தில் ஏற்படுத்தும்.

இனரீதியான குடித்தொகையில் தமிழர்கள் மூன்றாம் நிலைக்குத் தள்ளப்படும் நிலை ஏற்படும். 60 வயதிற்கு மேல் 5.4, 6.6, 10.6, 12.2, 17.9, 25.4. எனினும் இளையோரின் அளவில் ஏற்படும் வீழ்ச்சி காரணமாக குறைந்த அளவான, குடும்ப எண்ணிக்கை கொண்ட குடும்பங்கள் தோற்றம் பெறுவதால் அதிக முதலீட்டினைப் பாடசாலைப் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைக்காக மேற்கொள்ளும் நிலை காணப்படும். கருவளவாக்கத்தில் ஏற்படும் வீழ்ச்சி காரணமாக நீண்ட காலம் பணியாற்றக்கூடிய பெண் ஊழியப்படை ஒன்று தோற்றம் பெறும் வாய்ப்பு உருவாகும்.

15- 59 வயதுப் பிரிவு (15- 59) வயதிற்கு இடைப்பட்டவர்களையுடைய அளவானது இலங்கையின் வயதுப்பிரிவில் ஆரம்பத்தில் குறைவாகக் காணப்பட்டு பின்னர் ஓர் அதிகரிப்பைக் காட்டினாலும் எதிர் காலத்தில் இவ்வயதுப் பிரிவினரும் குறைவடைந்து செல்லும் நிலை காணப்படுவதனை அட்டவணை காட்டுகின்றது. எனினும் ஏனைய வயதுப்பிரிவினரை விட ஓர் உயர் வீதத்தினைக் கொண்ட பிரிவாக (15- 59) வயதிற்கு இடைப்பட்டோர் காணப்படுகின்றனர்.

இப் பிரிவினர் நாட்டின் ஊழியப்படைப் பங்கேற்பைக் கொண்டவர்களாகக் காணப்படுவதுடன் அவர்களில் 15 -19 வயதுக்குட்பட்ட பருவ வயதுப் பிரிவினரும் (Adults) அடங்குகின்றனர். இவர்கள் இப்பிரிவில் 20 வீதத்திற்கு வகை கூறுபவர்களாகக் காணப்படுகின்றனர். இவ்வாறு 15- 59 வயதுக்கு இடைப்பட்டவர்களின் எண்ணிக்கை உயர்வாக இருப்பதனாலும் நாட்டின் ஊழியப்படை அதிகமாகக் காணப்படுவதாலும் போதியளவான தொழில்வாய்ப்புக்களை வழங்காதவிடத்து வேலையில்லாப் பிரச்சினைகள் அதிகரிக்கும். எனினும் இவ் ஊழியப்படை சரியான முறையில் பயிற்றுவிக்கப்பட்டால் வயதமைப்பில் ஏற்படும் மாற்றத்திற்கு ஏற்ப அதிக பொருளாதார நன்மையை இலங்கை பெற்றுக் கொள்ளும் எனவும் கருதப்படுகின்றது.

> இன்று ஜுலை 11 ஆம் திகதி உலக சனத்தொகை தினமாகும். இதனை முன்னிட்டு இக்கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது

இவ் வயதுப்பிரிவில் கட்டிளமைப்பிரிவினரும் (15 -19 வயது) உள்ளடக்கப்படுவதால் இவர்களுக்கான முறையான உயர்கல்வி வாய்ப்புக்களை வழங்குவது எதிர்கால ஊழியப்படையை வளமுள்ள தாக்கும். இதற்கு அமைய தற்போது இலங்கையில் உயர்தரப்பிரிவில் தொழில்நுட்பப் பிரிவின் உருவாக்கம், 13 வருடம் வரையிலான தொழில் முறைக் கல்வித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை, கட்டாயக் கல்வி வயதின் எல்லை 16 வயதாக அதிகரிக்கப்பட்டமை என்பன முன்னேற்பாடான திட்டங்களாகக் கொள்ள முடியும். இலங்கையின் குடித்தொகையில் கட்டிளமைப்பருவத்தினரின் அளவு ஒரு உயர்வான கட்டத்தினை தற்போது கொண்டிருப்பதால் பாலியல் தொடர்பான பிரச்சினைகள் மற்றும் தற்கால தகவல் தொழில்நுட்பத்தின் விருத்தி ஊடான சீர்கேடுகள் என்பவற்றினைக் கையாளக்கூடிய பொறிமுறைகளை பாடசாலைகள் மற்றும் பெற்றோர் கொண்டிருத்தல் மிகவும் அவசியமாகும்.

60 வயதிற்கு மேற்பட்ட பிரிவு இலங்கையின் குடித்தொகை வயதமைப்பில் ஏற்பட்டுவரும் மிகப் பிரதான மற்றமாக 60 வயதுக்கு மேற்பட்டவர்களின் குடித்தொகை அளவு அதிகரித்து வருவதாகும். இலங்கையின் மொத்தச் சனத்தொகையில் சுமார் 2.6 மில்லியன் சனத்தொகையைக் கொண்டுள்ள முதியோர் குடித்தெகையானது தொடர்ச்சியாக அதிகரிப்பதற்கு இறப்பு வீதத்தில் ஏற்பட்டுவரும் வீழ்ச்சியுடன் ஆயுட்காலத்தில் ஏற்பட்டு வரும் அதிகரிப்பும் காரணமாக அமைகின்றது. இலங்கையின் குடித்தொகையின் தற்போதைய ஆயுட்காலமானது 2017 மத்திய வங்கி அறிக்கைப்படி 75 வயதாகக் காணப்படுகின்றது.

இது 2025 ஆம் ஆண்டுகளில் ஆண்களின் ஆயுட்காலம் 74 வயதாகவும் பெண்களின் ஆயுட்காலம் 78 வயதாகவும் அதிகரிக்கும் என எதிர்வு கூறப்படுகின்றது. இவ்வாறான பின்னணிக்கு சுகாதார சௌக்கிய வசதிகள் மற்றும் நலனோம்புகைகளில் ஏற்படும் அதிகரிப்பு மற்றும் ஊட்டமான உணவு நடைமுறைகள் மற்றும் உடற்பயிற்சி, பொருத்தமான உணவுப் பழக்கவழக்கம் என்பன காரணங்களாக அமைகின்றன.

அத்துடன் இளவயதுக் குடித்தொகையில் ஏற்பட்டுவரும் வீழ்ச்சியும் முதியோர் குடித்தொகை வீதத்தின் அளவு அதிகரிப்பதற்குக் காரணமாகவும் அமைகின்றது. இவ்வாறு முதியோர் குடித்தொகை அதிகரிக்கும் பண்பானது இலங்கை ஒரு அபிவிருத்தி அடைந்த நாடொன்றின் குடித்தொகைப் போக்கைக் கொண்டதாக காணப்படுவதாக குடிப்புள்ளியியலாளர்கள் கருதுகின்றனர்.

60 வயதிற்கு மேற்பட்ட முதியோர் குடித்தொகை அதிகரிப்பதனால் முதியோர் குடித் தொகையில் ஏற்பட்டுவரும் தொடர்ச்சியான அதிகரிப்புக்குக் காரணமாக, இலங்கையில் தங்கிவாழ்வோர் குடித்தொகையில் முதியோரின் பங்கு உயர்வாகக் காணப்படும்.

முதியோருக்கான நலச் சேவைகள் மற்றும் ஓய்வூதியக் கொடுப்பனவுகளுக்காக அரசு, அதிக நிதியினைச் செலவிட நேரும்.


ஏற்கனவே முதியோருக்கான கொடுப்பனவுகள் மற்றும் முதியோர் சேமிப்புக்கான வங்கி வட்டி வீதத்தினையும் அரசு அதிகரித்துள்ளது.

இலங்கையில் முதியோரின் ஆயுட்கால அதிகரிப்புக்குக் காரணமாக ஓய்வு பெறும் வயதெல்லை அதிகரிப்பதால் தொழிலற்ற பிரிவினருக்கு வேலைவாய்ப்பை வழங்குவதில் பிரச்சினை காணப்படும். ஏற்கனவே 55 வயதாக இருந்த ஓய்வு பெறும் வயதெல்லை தற்போது 60 வயதாக அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் இது 65 வயதாக அதிகரிக்கும் நோக்கங்களும் காணப்படுகின்றன.

இலங்கையின் குடும்ப அமைப்பில் தற்போது தனிக் குடும்பங்களின் எண்ணிக்கை, அதிகரித்து வருவதால் பிள்ளைகள் தமது வயது முதிர்ந்த பெற்றோரைப் பராமரிப்பதில் பிரச்சினைகளையும் ஏற்படுத்தும். எவ்வாறெனினும் இவ்வாறாக அதிகரிக்கும் முதியோர் குடித்தொகை காரணமாக நாட்டின் பொருளாதார, சமூக நல அபிவிருத்தியில் அவர்களின் பங்களிப்பினைப் பெற்றுக் கொள்வதற்கான திட்டங்களையும் குடிப்புள்ளியியலாளர்கள் உணர்கின்றனர். அதிகரிக்கும் முதியோர் குடித்தொகையினரிடம் உள்ள சேமிப்புக்களை நாட்டின் அபிவிருத்தி மற்றும் முதலீட்டுத் தேவைகளுக்காகப் பயன்படுத்துதல் வேண்டும். ஆயுள் எதிர்பார்க்கையில் ஏற்படும் அதிகரிப்புக்குக் காரணமாக எதிர்காலத்தில் மனிதவளத்தின் நன்மை கருதி நீண்ட காலத்திற்குப் பணியாற்றும் ஊழியப்படை ஒன்றினைக் கொண்டதாக வயது முதிர்ந்த குடித்தொகை ஊக்குவிக்கப்பட வேண்டும்.

இலங்கையின் பாடசாலைக் கல்வி நடவடிக்கையில் குறித்த சில பாடங்களுக்கான ஆசிரியர் பற்றாக்குறைக்கு ஓய்வுபெற்ற ஆசிரியர்களின் சேவை பெற்றுக் கொள்ளப்படுவது இதற்கான முன் உதாரணமாகும். முதியோரிடம் உள்ள வாழ்க்கை அனுபவங்கள் மற்றும் பண்பாடுகள் என்பவற்றினை இளைய தலைமுறையினருக்கு பெற்றுக்கொடுக்கும் முறைகளை ஏற்படுத்தல். இலங்கையின் வாக்காளர்களில் கணிசமான எண்ணிக்கையினராக முதியோர் தொடர்ந்தும் அதிகரித்து வருவதால் அரசியல் பங்களிப்பில் அதிக தாக்கத்தினை இவர்கள் கொண்டிருப்பர். இலங்கையின் குடித்தொகையில் ஏற்பட்டுவரும் இம்மாற்றங்கள் இனரீதியான, பால்அடிப்படையிலான குடித்தொகையிலும் மாற்றங்களைக் காண்பித்து வருகின்றது.

இலங்கையின் இனரீதியான குடித்தொகையில் தமிழர்களின் விகிதாசாரம் அதிக வீழ்ச்சியை காண்பித்து வருவது தமிழர்களின் அரசியல் மற்றும் இனரீதியான 'குடித்தொகை பரம்பல்கள் என்பவற்றில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தும். இலங்கையின் மாகாண ரீதியிலான குடித்தொகையில் மிகக்குறைவான குடித்தொகை கொண்ட மாகாணமாக வடமாகாணம் காணப்படுகின்றது. அதேபோன்று மிகக் குறைவான குடியடர்த்தி கொண்ட மாவட்டமாக முல்லைத்தீவு மாவட்டம் காணப்படுகின்றது என்பதனையும் கவனத்தில் கொள்வது முக்கியமானதாகும்.



அருளம்பலம் பாலசந்திரமூர்த்தி
விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# குகைக்குள் சிக்கியிருக்கும் 12 சிறுவர்கள்; மெய்சிலிர்க்க வைக்கும் மீட்புப் பணி


நடந்து வரும் காற்பந்து உலகக் கோப்பையில் விளையாடும் அணிகளுக்கு நிகராக உலகத்தின் அனைத்து மக்களும் அவதானித்துக் கொண்டிருக்கும் இன்னொரு நிகழ்வுதான் காற்பந்து விளையாட போய் விபரீதத்தை தேடிக்கொண்ட தாய்லாந்தின் குகைக்குள் சிக்கியிருக்கும் 12 சிறுவர்களையும் ஒரு பயிற்றுவிப்பாளரையும் கொண்ட ஒரு அணி. பயிற்சிக்காக போனவர்கள் குகையை கண்டதும் விளையாட்டாக தங்களது பெயரை குகையின் சுவரில் பதிக்கப்போனபோது ஏற்பட்ட சடுதியான மழையின் காரணமாக குகைக்குள் ஏற்பட்ட வெள்ளத்தில் இருந்து தப்பிப் பிழைக்க தொடர்ந்தும் பின்னோக்கி சென்றவர்கள் இறுதியாக கிட்டத்தட்ட மூன்று கிலோ மீற்றர் நீளமான குகையின் அடிவாரத்தில் சிக்கிக் கொண்டார்கள்.

கடுமையானதும் சிக்கல் நிறைந்த இந்த குகையில் சிக்கியிருக்கும் இந்த சிறுவர்களை மீட்பதற்காக உயிரை துச்சமென கருதி மீட்பு பணியாளர்கள் செய்யும் போராட்டம் மெய்சிலிர்க்க வைக்கிறது.

ஏனெனில் சிறுவர்கள் தற்போது ஒதுங்கியிருப்பது 800 மீற்றர் உயரமான ஒரு மலையின் அடிவாரம் என்பதால் தரையை துளைத்து இந்த சிறுவர்களை மீட்கமுடியாது.

வெள்ளம் காரணமாக நீரால்








முழுவதுமாக நிரம்பியிருக்கும் குகையின் மிக ஒடுங்கிய பாதை ஊடாக நீந்தி சுழியோடி சென்று அவர்கள் இருக்கும் இடத்தை அடைந்து பின்னர் சிறுவர்களை. மிகக்கவனமாக மீண்டும் அதே கடினமான பாதையூடாக நீந்தி மீளக்கொண்டு வருவதே இவர்களை மீட்பதற்கு இருக்கும் ஒரே வழி.

இது சொல்வதைபோல மிகவும் இலகுவான ஒன்றல்ல. காரணம குகையின் விட்டம் சில இடங்களில் ஒருவர் மட்டுமே போகும் அளவுக்கு மிகவும் ஒடுங்கலானது

ஒரு குறிப்பிட்ட இடத்தில் குகை தலைகீழான "V" வடிவத்தில் கூர் கோணமாக இருப்பதால் அந்த குறிப்பிட்ட இடத்தில் செங்குத்தாக நீருக்குள் சுழியோடி தனியே ஏறி இறங்குவதே சவாலானது. இதற்கிடையில் இந்த சிறுவர்களையும் தாங்கிக்கொண்டு சுழியோடுவது மிகவும் கடினமானதாகும்.

சிக்கியிருக்கும் எந்தவொரு சிறுவர்களுக்கும் நீந்த தெரியாது. அதுவும் சுழியோட்டம் அறவே முடியாது. ஆகவே முற்று முழுதாக மீட்பு பணியாளர்களின் உதவியுடனேயே நீருக்குள் இரண்டரை கிலோ மீற்றர்கள் அவர்கள் பயணிக்க வேண்டியிருக்கிறது. ஆகக் குறைந்தது இந்த சிறுவர்களின் உடல்நிலை மீட்பு பணியாளர்களுக்கு ஒத்துழைக்கவாவது வேண்டும். ஆனால் பல நாட்களாக உணவு இன்றி சக்தி இழந்திருக்கும் இந்த சிறுவர்களின் உடல் ஒத்துழைப்பு இன்றியே மீட்புப் பணியாளர்கள்




இவர்களை மீட்க வேண்டும்.

மிகவும் ஒடுங்கலான, ஆழமான, நீரோட்டம் கூடிய பாதை என்பதால், குகையின் கற்கள் இடிந்து போகவோ அல்லது இடைவ்ழியில் ஒட்சிசன் இல்லாமல் போகும் அபாயங்கள் அதிகம் இருக்கிறது.

மெதுமெதுவாக குகை வாசலில் இருந்து ஒருமுறை நீந்தி சுழியோடி சென்று அதே இடத்தை மீள அடைவதற்கு மீட்புப் பணியாளர்களுக்கு கிட்டத்தட்ட பத்து மணித்தியாலங்கள் தேவைப்படுகின்றன.

இவ்வாறான சவால்களையும் ஆபத்துக்களையும் எதிர்கொண்டு உலகம் முழுவதும் இருக்கும் சிறந்த சுழியோடிகள் கிட்டத்தட்ட நூறு பேர் எந்தவித பிரதிபலன்களையும் எதிர்பார்க்காமல் இரவு பகலாக சிறுவர்களை மீட்பதற்கு போராடிக் கொண்டிருக்கிறார்கள். இதற்கிடையில் இந்த சுழியோடி மீட்புக் குழுவின் மிகவும் திறமையான ஒருவர் இடைவெளியில் ஒட்சிசன் இல்லாமல் உயிர்துறந்திருக்கிறார். ஆனாலும் சளைக்காமல் எப்படியாவது இந்த சிறுவர்களை காப்பாற்றியே ஆகுவோம்என்ற உறுதியில்ஏனைய மீட்பாளர்கள் இதுவரை எட்டு சிறுவர்களை குகையில் இருந்து மீட்டிருக்கிறார்கள்.

மனிதாபிமானத்திற் கான இந்த மீட்புப் பணியும், இந்த மீட்புப் பணியாளர்களும் வரலாற்றில் இடம்பிடிக்க போகிறார்கள் என்பது மட்டும் உறுதியானது.

## 2018.07 11 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

❖1346 - லக்சம்பேர்க்கின் நான்காம் சார்ல்ஸ் புனித ரோமப் பேரரசன் ஆனான்.

❖1576 - மார்ட்டின் புரோபிஷர் கிரீன்லாந்தைக் கண்டார்.

❖1735 -புளூட்டோ சூரியனுக்குக் கிட்டவாக ஒன்பதாம் இடத்தில் இருந்து எட்டாம் இடத்துக்கு இந்நாளில் வந்ததாக கணித கணக்கீடுகள் தெரிவித்தன. இது பின்னர் 1979 இல் மீண்டும் நிகழ்ந்தது.

❖1750 - நோவா ஸ்கோசியாவின் ஹாலிஃபாக்ஸ் நகரத்தின் பெரும் பகுதி தீயில் அழிந்தது.

❖1776 - கப்டன் ஜேம்ஸ் குக் தனது மூன்றாவது கடற் பயணத்தை ஆரம்பித்தான்.

❖1796 - மிச்சிகனின் தலைநகர் டிட்ராயிட் நகரை பிரித்தானியாவிடம் இருந்து ஐக்கிய அமெரிக்கா "ஜே உடன்படிக்கை"யின் படி பெற்றுக் கொண்டது.

❖1811 - வளிமங்களின் மூலக்கூறுகள் பற்றிய தமது குறிப்புகளை இத்தாலிய அறிவியலாளர் அவகாதரோ வெளியிட்டார்.

❖1859 - இரு நகரங்களின் கதை என்ற நாவலை சார்ல்ஸ் டிக்கன்ஸ் வெளியிட்டார்.

❖1864 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: கூட்டமைப்புப் படையினர் வோஷிங்டன் டிசியைத் தாக்க முயற்சித்தனர்.

❖1882 - பிரித்தானிய மத்தியதரைக் கடற்படையினர் எகிப்தின் அலெக்சாண்டிரியா நகர் மீது குண்டுத் தாக்குதலை ஆரம்பித்தனர்.

❖1921 - மங்கோலியா சீனாவிடமிருந்து விடுதலை பெற்றது.

❖ 1936-நியூயோர்க் நகரில் டிறைபரோ பாலம் திறக்கப்பட்டது.

❖1943 - போலந்தில் வொல்ஹீனியா என்ற இடத்தில் நாசி ஜேர்மனியரினால் ஆயிரத்துக்கும் அதிகமான போலந்து மக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

❖ 1973-பிறேசில் போயிங் விமானம் பாரிசில் விபத்துக்குள்ளாகியதில் 134 பேரில் 123 பேர் கொல்லப்பட்டனர்.

❖1978 - ஸ்பெயினில் எரிவாயுவை ஏற்றிச் சென்ற பாரவூர்தி ஒன்று தீப்பிடித்ததில் 216 உல்லாசப் பயணிகள் உயிரிழந்தனர்.

❖1979 - ஸ்கைலாப் விண்வெளி நிலையம் பூமிக்குத் திரும்பியது.

❖1987 - உலக மக்கள் தொகை 5 பில்லியனைத் தாண்டியது.

❖1990 -கொக்காவில் இராணுவ முகாம் விடுதலைப் புலிகளினால் தகர்க்கப்பட்டது.

❖1991 - ஹஜ் பயணிகளை ஏற்றிச் சென்ற டிசி-8 விமானம் சவுதி அரேபியாவில் விபத்துக் குள்ளாகியதில் 261 பேர் கொல்லப்பட்டனர்.

❖2006-மும்பை ரயில் குண்டுவெடிப்புகள்: மும்பையில் இடம்பெற்ற தொடர் குண்டுவெடிப்புகளில் 200 பேர் கொல்லப்பட்டனர்.

### பிறப்புகள்

❖1857- சி. சங்கரன் நாயர், இந்திய அரசியல்வாதி (இ. 1934)

❖1920- வி.ஆர்.நெடுஞ்செழியன், தமிழக அரசியல்வாதி (இ. 2000)

❖1921 - பா. ராமச்சந்திரன், தமிழக அரசியல்வாதி (இ. 2001)

❖ 1925 - குன்றக்குடி அடிகள், தமிழக சமய, இலக்கியவாதி (இ. 1995)

❖1925 - கா. மீனாட்சிசுந்தரம், தமிழகத் தமிழறிஞர் (இ. 2015)

❖ 1951 - சிறீதரன் ஜெகநாதன், இலங்கைத் துடுப்பாட்டக்காரர் (இ. 1996)

❖1966 -பாலா, தமிழ் திரைப்பட இயக்குநர்

### இறப்புகள்

❖1882- பீட்டர் பெர்சிவல், பிரித்தானிய நற்செய்தி அறிவிப்பாளர், யாழ்ப்பாணத்தில் பணியாற்றியவர் (பி. 1803)

❖1909-சைமன் நியூகோம்பு, கனடிய-அமெரிக்க வானியலாளர், கணிதவியலாளர் (பி. 1835)

### சிறப்பு நாள்

❖உலக மக்கள் தொகை நாள்

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 50 | 40 | 40 | 80 | 70 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 90 | 90 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 500 | 450 | 450 | 500 | 500 | 400 |
| தக்காளி | 200 | 260 | 240 | 240 | 200 | 240 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 35 | 50 | 40 | 40 |
| கோவா | 180 | 160 | 80 | 180 | 200 | 160 |
| கரட் | 160 | 280 | 180 | 240 | 280 | 240 |
| பூசணி | 50 | 40 | 20 | 40 | 40 | 30 |
| புடோல் | 100 | 120 | 80 | 100 | 100 | 60 |
| வாழைக்காய் | 100 | 100 | 70 | 80 | 80 | 70 |
| சின்ன வெங்காயம் | 140 | 200 | 100 | 140 | 200 | 130 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 90 | 100 | 120 | 105 |
| பாகற்காய் | 250 | 400 | 250 | 280 | 250 | 280 |
| வெண்டிக்காய் | 100 | 120 | 70 | 100 | 120 | 90 |
| கருணைக் கிழங்கு | 140 | 100 | 70 | 100 | 120 | 140 |
| பயற்றங்காய் | 120 | 100 | 60 | 180 | 80 | 80 |
| லீக்ஸ் | 200 | 280 | 200 | 200 | 240 | 180 |
| பீற்றூட் | 160 | 160 | 80 | 160 | 200 | 100 |
| கறிமிளகாய் | 250 | 450 | 80 | – | 300 | 260 |
| முருங்கைக்காய் | 250 | 200 | 270 | 300 | 250 | 300 |
| போஞ்சி | 250 | 300 | – | 280 | 300 | 200 |
| கத்தரிதம்புள்ள | 50 | 20 | 30 | – | 60 | 60 |
| கீரை - 1பிடி | 40 | 10 | 20 | 20 | 30 | 15 |
| தேசிக்காய் | 50 | 30 | 60 | 80 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 30-60 | 25-50 | 50 | 40-60 | 60 |
| இராசவள்ளி | 150 | 200 | 130 | 120 | 200 | 160 |
| வெங்காயப்பூ | 200 | – | 200 | 280 | 280 | 200 |
| முள்ளங்கி | 80 | – | 35 | 100 | 120 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 10 | 40 | 30 | 30 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 20 | 20 | 50 |
| ஈரப்பலா | 60 | 40 | 110 | 60 | 80 | 50 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறருக்கு நன்மை செய்யாவிட்டாலும்
தீமை செய்யாதிருங்கள்.

~ பாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## புதுப்புதுப் பிரச்சினைகளை உருவாக்கி உபத்திரவம் தராதீர்கள்

ஒரு பெரிய கோட்டை சிறிய கோடாக மாற்றுவ தென்றால், அதற்குப் பக்கத்தில் இன்னொரு பெரிய கோட்டைக் கீறுதல் என்பது ஒரு வகை யான முறை.

இத்தகைய முறைகள் அரசியலில் சர்வ சாதாரணம் எனலாம். அதிலும் இலங்கை அரசியலில் இதற்குப் பஞ்சமே இல்லை.

தமிழ் மக்கள் தமது பிரச்சினைக்குத் தீர்வு தாருங்கள் என்று கேட்க, அவர்கள் கேட்கின்ற தீர்வை வழங்காமல், தீர்வு கேட்கின்ற மக் களை வேறு வேறு பிரச்சினைகளுக்குத் திசை திருப்பி விடுகின்ற முயற்சியில் இலங்கை ஆட்சியாளர்கள் தொடர்ந்தும் செயற்பட்டு வரு கின்றனர்.

இதில் நல்லாட்சி இன்னும் உச்சம் என்று கூறுமளவிலேயே நிலைமை உள்ளது.

இராணுவத்துக்கென காணி அபகரிப்பது, சட்டவிரோத சிங்களக் குடியேற்றங்களை நிறுவுவது, நயினாதீவுக் கடலில் 60 அடி புத்தர் சிலை நிறுவப் போவதாக அறிவிப்பது, வடம ராட்சிக் கடற்பரப்பில் கடல் அட்டை பிடிப்பதற்கு சிங்கள மீனவர்களை அங்கு குடியமர்த்து வது, விகாரைகளை ஆங்காங்கே அமைக்க முற்படுவது, யாழ்.பல்கலைக்கழகத்தில் கண்டி நடனத்தை அரங்கேற்றத் திட்டமிடுவது எனப் பிரச்சினைகளைப் புதிது புதிதாக உருவாக்கி, அதன்மீது தமிழ் மக்களின் கவனத்தைத் திசை திருப்பி; இனப்பிரச்சினைக்கான தீர்வில் இருந்து இலாபகமாகத் தப்பித்துக் கொள்வது என்ற இராஜதந்திரத்தில் நல்லாட்சி மிகத் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

இதன் ஓர் அங்கமாக யாழ்ப்பாணக் கோட் டைக்குள் இராணுவத்தை இருத்துவது என்ற இன்னொரு பிரச்சினை கிளப்பி விடப்படுகிறது.

யாழ்ப்பாணக் கோட்டையின் தற்போதைய நிர்வாகம் தொல்பொருள் திணைக்களத்துக் குட்பட்டுள்ளது.

"தொல்லியல்" என்ற அடிப்படையில் யாழ்ப் பாணக் கோட்டையின் நிர்வாகம் தொல் பொருள் திணைக்களத்துக்குட்பட்டிருந்தாலும் உண்மையில், யாழ்ப்பாணக் கோட்டையின் முழு நிர்வாகமும் வடக்கு மாகாண சபைக்குட் பட்டு, யாழ்ப்பாண மாநகர சபையின் நிர்வாகத் துக்குள் கொண்டுவரப்பட்டிருக்க வேண்டும்.

இதுபற்றி பல தடவைகள் இவ்விடத்தில் நாம் பிரஸ்தாபித்திருந்தோம்.

எனினும் இது விடயத்தில் எங்களில் எவ ரும் கவனம் செலுத்தவில்லை.

யாழ்ப்பாணக் கோட்டை யாழ்ப்பாண மாநகர சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்டிருந்தால், பொதுமக்கள் கோட்டையைப் பார்ப்பதற்கென ஒரு சிறு கட்டணத்தை விதிப்பதன் மூலம் கிடைக் கின்ற வருமானம் யாழ்ப்பாண மாநகரத்தைத் தூய்மையாக வைத்திருப்பதற்குப் போதுமான தாக இருந்திருக்கும். ஆனால் இவை சாத்திய மாகவில்லை.

பரவாயில்லை என்றால், இப்போது படையி னரைக் கோட்டையில் குடியமர்த்த கடும் பிரயத் தனம் நடக்கிறது எனும்போது எப்படியெல்லாம் சிங்களப் பேரினவாதிகளும் அவர்களின் இன வாதத் தீக்கு எண்ணெய் ஊற்றும் சிங்களப் புத்திஜீவிகளும் செயற்படுகின்றனர் என்பதை இனியாவது நம்மவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்தப் புரிதல் அரசுடன் ஒரு இறுக்கமான போக்கைக் காட்டுவதாக இருப்பது அவசியம்.

# முதலமைச்சர் எதிர் டெனீஸ்வரன்
# அமைச்சு விவகாரம் குறித்து ஆராய எதிர்வரும் 16-ம் திகதி சிறப்பு அமர்வு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண போக்கு வரத்து, மீன்பிடி, கிராமிய அபிவிருத்தி வர்த்தக வாணிப அமைச்சர் பா.டெனீஸ்வரன், வடக்கு மாகாண அமைச்சர வையில் தொடர்ந்து நீடிக் கிறார் என மேன்முறை யீட்டு நீதிமன்றம் வழங்கிய கட்டளையின் பின்னர் மாகாண நிர்வாகத் தினை நடைமுறைப்படுத் துவது தொடர்பாக கலந்துரையாடு வதற்கான சிறப்பு அமர்வு எதிர்வரும் 16ஆம் திகதி திங்கட்கிழமை இடம் பெற வுள்ளது.

வடக்கு மாகாண சபை யின் 19 உறுப்பினர்கள் எழுத்து மூலம் கோரியதற்கு அமைவாக வடக்கு மாகாண சபை அவைத்தலைவர் இவ் வாறு அறிவித்துள்ளார்.

தம்மை முதலமைச்சர் விக்னேஸ்வரன் பதவியில் இருந்து நீக்கியது செல்லு படியற்றது என அறிவிக்கக் கோரி, வட மாகாண அமை ச்சராக இருந்த பா.டெனிஸ் வரன் மேன்முறையீட்டு நீதி மன்றத்தில் மனுத் தாக்கல் செய்திருந்தார்.

நீதிமன்று வழங்கிய இடைக்கால உத்தரவில், டெனீஸ்வரனை அமைச்சர் பதவியில் இருந்து நீக்கிய முதலமைச்சர் விக்னேஸ் வரனின் உத்தரவு செல்லுபடிய ற்றது என்றும், அவர் தொடர ந்தும் அமைச்சராகவே இருப்பதாக கருதப்படுகிறார் என்றும் கூறப்பட்டிருந்தது.

மேன்முறையீட்டு நீதிம ன்றத்தின் இடைக்கால உத் தரவுக்கு எதிராக, முதலமைச சர் தரப்பில் மனுவொன்று உயர் நீதிமன்றத்தில் தாக் கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில் வடக்கு மாகாண சபைக்கான அமர்வு கைதடியிலுள்ள பேரவைச் செயலகத்தில் நேற்று இடம் பெற்றது.

இதன்போது மாகாண போக்குவரத்து அமைச்சு மீது மேன்முறையீட்டு நீதி மன்றம் வழங்கிய கட்ட ளையை முன்னிலைப்படுத்தி சிறப்புரிமை தொடர்பான முடிவை அவை எடுக்கவேண டும் என வட மாகாணசபை உறுப்பினர் கேசவன் சயந் தன் தெரிவித்தார்.

அதாவது மாகாணத்தி ற்கு ஐந்து அமைச்சர்களே இருக்கலாம் என்ற அரசிய லமைப்பின் சட்ட ஏற்பாடுக ளினடிப் மேன்முறையீட்டு நீதிமன்றத் தீர்ப்பை வட மாகாண முதலமைச்சர் நடைமுறைப்படுத்துவதற் கான செயற்பாடுகளை மேற் கொண்டு பா.டெனீஸ்வரனை அமைச்சராக அங்கீகரித்து அவருக்குரிய ஆசனத்தை வழங்குவதுடன் அவரை தொடர்ந்தும் அமைச்சராக பதவி வகிக்க ஆவன செய்ய வேண்டும் அதன் பின்னரே பிக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

இதற்கு பதிலளித்த வட மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ் வரன், "இவ்விடயம் தொடர் பில் நான் உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள் ளேன். நீதிமன்ற நடவடிக்கை யில் குறித்த விடயம் இருப்ப தால் தீர்ப்பு வந்தபின்னரே இது தொடர்பில் நடவடிக்கை எடுக்க முடியும்" என தெரி வித்தார்.

இதையடுத்து குறித்த விட யம் தொடர்பாக உறுப்பினர் கள் சிலர் சார்பாகவும் எதிரா கவும் தமது காரசாரமான விவா தங்களை முன்வைத்தனர்.

அதனை தொடர்ந்து அவைத்தலைவர் பதிலளிக் கையில், பா.டெனீஸ்வரன் தனக்குரிய ஆசனம் ஒதுக் கப்பட வேண்டும் என்பது டனான தனது கோரிக்கையை எனக்கு நேற்று முன்தினம் மின்னஞ்சல் மூலம் அனுப் பியிருந்தார்.

டெனீஸ்வரனுடைய கோரி க்கையை முன்வைத்து ஆளுநருக்கு நான் எனது கோரிக்கை கடிதத்தை அனுப் பியிருந்தேன். மேற்குறித்த விடயம் தொடர்பாக உத்தி யோகபூர்வ அறிவித்தல் எவையும் ஆளுநரால் என க்கு வழங்கப்படவில்லை. எனவே அதன் பின்னரே இக் கோரிக்கை நிறைவேற் றுவது தொடர்பாக பரிசீலிக் கப்படும் என தெரிவித்தார்.

அதனை தொடர்ந்து சபை முடிவில் மேற்குறித்த விடயம் தொடர்பாக கலந் துரையாடுவதற்கு சிறப்பு அமர்வு நடத்தப்பட வேண் டும் என 19 உறுப்பினர்கள் கையொப்பமிட்ட மனு ஒன்று அவைத் தலைவரிடம் கைய ளிக்கப்பட்டது.

அதனை ஏற்றுக் கொண்ட அவைத்தலைவர் சிறப்பு அமர்வை எதிர்வரும் வரும் 16ஆம் திகதி திங்கட்கி ழமை நடத்த அனுமதியளித் தார். (இ-9)

# அரியாலை கிழக்கு அ.த.க.பாடசாலை மூடப்படும் அபாய நிலையில் உள்ளது
## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கவலை

1928ஆம் ஆண்டு ஆரம் பிக்கப்பட்டு பலரை உருவா க்கிய அரியாலை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மூடப்படும் அபாய நிலையில் உள்ளதாக இலங்கைத் தமி ழர் ஆசிரியர் சங்கம் கவலை வெளியிட்டுள்ளது.

இது குறித்து அச்சங்கம் வெளியிட்டுள்ள செய் திக் குறிப்பில்,

யாழ்ப்பாண நகரில் இரு ந்து சில மைல்கள் தொலை வில் உள்ள அரியாலை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஜே/90 கிராம உத்தியோகத்தர் பிரிவுக்கு உட்பட்டுள்ள ஒரு பாடசாலை யாகும்.

கடுமையான யுத்த காலங் களிலும் அதிகளவான மாண வர்களுடன் இயங்கிய இப் பாடசாலையின் அப்போது பழைமையானகட்டம்ஒன்றே இருந்தது. தரம் ஒன்று முதல தரம் 9 வரை மாணவர்கள் கற்கும் வாய்ப்புக்கள் ஏற் படுத்தப்பட்டிருந்தன.

ஆனால் இன்று தரம் 1 முதல் தரம் 7 வரை பத்து மாணவர்களுடனும் அதி பரை விடுத்து மூன்று ஆசிரி யர்களுடனும் இப்பாடசாலை இயங்குகின்றது.

சென்ற ஆண்டு 18 மாண வர்கள் கல்வி கற்றனர். இப்போது அவர்களில் ஒன் பது மாணவர்கள் வேறு பாடசாலைகளில் சேர்ந்துள் ளனர். இவர்களுக்கு அதிபர விடுகைப்பத்திரமும் வழங்கி யுள்ளார்.

அரியாலைச் சந்தியில் இருந்து பாடசாலை செல லும் வரை பயணம் செய்ய முடியாத அளவுக்கு வீதி படுமோசமாக இருந்த நெரு க்கடியான காலத்தில் மாண வர்களின் கற்றல் செயற்பா டுகள் சிறப்பாகவே இருந் தது. இப்பொழுது அரியாலை பூம்புகார் வரை வீதி ஓரள வுக்கு செப்பனிடப்பட்டுள்ள தோடு மிகுதிப் பகுதியை யாரும் கவனிப்பதாக இல்லை.

இப்பாடசாலையில் சுனாமி அனர்த்தத்தின் பின்னர் உரு வாக்கப்பட்ட மாடிக்கட்டிட மும் உள்ளது. ஆனால் பத்து மாணவர்கள் மட்டுமே அங்கு கல்வி பயில்கின்றனர்.

வெவ்வேறு பிரதேசங் களில் பாடசாலைகள் திறக் கப்படும் நிலையில் 100 வரு டங்களை எட்டும் நிலையி லுள்ள இப்பாடசாலையை மூடு வதற்கான சூழ்நிலை ஏற்படு வது கவலைதரும் விடயம் என அந்த அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள் ளது. (இ-7)

## உலக தரநிர்ணய சான்றிதழ் பெறல்

(யாழ்ப்பாணம்)

மேக்கன்ரைஸ் பாதுகாப் புச் சேவை நிறுவனமானது இலங்கைக் கம்பனிகள் சட் டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டு வடக்கு-கிழக்கு மாகாணங் களில் பாதுகாப்புச் சேவை யினை மேற்கொண்டு வருகி றது. தேசிய கைத்தொழில் வியாபார மன்றத்தினால் கொழும்பு ஹில்ரன் ஹோட் டலில் தேசிய வியாபார சிறப்பு விருதினையும் இந் நிறுவ னம் பெற்றுள்ளது.

இந் நிறுவனம் ISO 9001: 2015 எனும் உலக தர நிர் ணய சான்றிதழினை TUV SUD Asia Pacific of TUV-SUD Group எனும் நிறுவனத்திடமி டமிருந்து இன்று மாலை 6 மணியளவில் யாழ்ப்பாணம் ரில்கோ சிற்றி ஹோட்டலில் பெற்றுக் கொள்ளவுள்ளது.(இ)

## நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் வரியிறுப்பாளர்களின்நன்மை கருதி நிலுவை அறவீடு களை மேற்கொள்ளும் பொரு ட்டு 12.07.2018ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை வட்டாரம் 3 இற்கான நடமாடும் சேவை சென்.ஜேம்ஸ் சன சமூக நிலையத்தில் இடம் பெறும் என ஆணையாளர் அறிவித் துள்ளார். (இ)

## மாவட்ட நிகழ்ச்சித்திட்ட மதிப்பீட்டில் ஜெய்ப்பூர் நிறுவனம் முதலாமிடம்

(யாழ்ப்பாணம்)

சமூக சேவைகள் திணை க்களத்தின் "சுயஉதவிக் கௌரவம் (சுவசக்தி அபி மானி) 2018 - சுய உதவி அமைப்புக்களைப் பாரா ட்டும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மாவட்ட மட்டத்தில் அங்கவீனமுற்ற நபர்களைத் தொழில்ரீதியாக வலுவூட்டும் பங்களிப்புக்களுக்காக முதல் நிறுவனமாக யாழ்.ஜெய்ப் பூர் நிறுவனம் முதலாமிடம் பெற்றுள்ளதனால்இவ்வருடம ஆவணி மாதம் கொழும்பு சமூக சேவை திணைக்கள த்தில் நடைபெறவுள்ள தேசிய மட்டப் போட்டியில் கலந்து கொள்ளுமாறு ஜெய்ப்பூர் நிறுவனம் அழைக்கப்பட் டுள்ளது என அந் நிறுவனத் தின் தலைவர் ....... திரு ....... மூர்த்தி அறிவித்துள்ளார். (இ)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநி யோக மார்க்கங்களின் கட் டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை யாழ். பிரதே சத்தில் சிவகாமி அம்மன் கோவிலடி காரைநகர் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் மலையா பருத்திக்குளம் கிராமம், பண்டாரிக்குளம் கிராமம், தவசிக்குளம் கிராமம், அட் டம்பஸ்கட கிராமம், நெளுக் குளம், கூமாங்குளம், இரா சேந்திரகுளம், பாரதிபுரம், அறுகம்புல்வெளி ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில மடுசந்தியிலி ருந்து பூமலர்ந்தான் வரை ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

noolaham.org | aavanaham.org

# வடமாகாண தடகளப் போட்டி முடிவுகள்

**வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை திணைக்களத்தின் ஏற்பாட்டில், வடமாகாணப் பாடசாலைகளின் விளையாட்டு வீர, வீராங்கனைகளுக்கான தடகளப் போட்டிகள் 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்று வருகின்றது.**

**வடமாகாணத்தைச் சேர்ந்த 12 கல்வி வலயங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி பங்கு பற்று வீர, வீராங்கனைகளுக்கு 12, 14, 16, 18 மற்றும் 20 வயதுப்பிரிவுகளில் போட்டிகள் நடைபெறுகின்றன.**

**இந்தத் தடகளப் போட்டிகளில் இதுவரையில் நடைபெற்ற போட்டி முடிவுகள்.**

**20 வயதுப்பிரிவு ஆண்கள் 200 மீற்றர் ஓட்டம்**

முதலாமிடம் - ஏ.கலைவேந்தன் குரூஸ் (சென்.ஆன்ஸ் ம.ம.வி).இரண்டாமிடம் - எஸ்.சிறிதனுஜன் (கொக்குவில் இந்துக் கல்லூரி). மூன்றாமிடம் - ஜெ.ஜெயபிரியதர்சன் (முருங்கன் ம.வி).

**18 வயதுப்பிரிவு பெண்களுக்கான உயரம் பாய்தல்**

முதலாமிடம் - சி.ஹெரீனா (மகாஜனாக் கல்லூரி - 1.42 மீற்றர் உயரம்).இரண்டாமிடம் - பி.தனுசங்கவி (அருணோதயக் கல்லூரி).மூன்றாமிடம் - ஜி.ஏ.பவித்திரா (பளை மத்திய கல்லூரி).

**20 வயதுப்பிரிவு ஆண்களுக்கான நீளம் பாய்தல்**

முதலாமிடம் - எஸ்.றுசாந்தன் (வவுனியா விபுலானந்தா கல்லூரி - 6.8 மீற்றர் தூரம்).இரண்டாமிடம் - எஸ்.இனோக்ராஜ் (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி).மூன்றாமிடம் - எம்.குஜசாந்தன் (விக்டோரியா கல்லூரி).

**16 வயதுப்பிரிவு ஆண்களுக்கான குண்டெறிதல்**

முதலாமிடம் - எஸ்.மிதுன்ராஜ் (ஹாட்லிக் கல்லூரி). இரண்டாமிடம் - ரி.சந்தோஸ் (ஹாட்லிக் கல்லூரி). மூன்றாமிடம் - ஆர்.டினுஸன் (மூளாய் சிவப்பிரகாச வித்தியாலயம்).

**16 வயதுப்பிரிவு பெண்களுக்கான தட்டெறிதல்**

முதலாமிடம்-ஜே.சுகன்யா(பாசையூர் சென்.அன்ரனீஸ் கல்லூரி). இரண்டாமிடம் - எஸ்.தர்சிகா (விநாயகபுரம் ஜி.ரி.எம்.எஸ்.). மூன்றாமிடம்-எம்.அகவிழி (வட்டக்கச்சி மத்திய கல்லூரி).

**18 வயதுப்பிரிவு ஆண்களுக்கான நீளம் பாய்தல்**

முதலாமிடம்-கே.பி.ஜனுசன் பீரிஸ் (கோண்டாச்சி ஜி.எம்.எம்.எஸ்.),இரண்டாமிடம்-ஆர்.மகிந்தன் (கைதடி நுணாவில் ஜி.ரி.எம்.எஸ்.).மூன்றாமிடம்-சி.பி.தனுஜன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி).

**12 வயதுப்பிரிவு பெண்கள் உயரம் பாய்தல்**

முதலாமிடம்-எஸ்.புகழ்நிலா (மல்லாவி மத்திய கல்லூரி). இரண்டாமிடம் ஜே.சுபேசனா (மல்லாவி மத்திய கல்லூரி). மூன்றாமிடம்- ஜே.கலைநிலா (உடையார்கட்டு ஜி.ரி.எம்.எஸ்).

**20 வயதுப்பிரிவு பெண்கள் குண்டெறிதல்**

முதலாமிடம்-எஸ்.தரண்யா (மகாஜனாக் கல்லூரி), இரண்டாமிடம் - பி.அஜித்தா (மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), மூன்றாமிடம்-ஆர்.சுஜீபா (வைத்தீஸ்வராக் கல்லூரி).

**16 வயதுப்பிரிவு பெண்கள் நீளம் பாய்தல்**

முதலாமிடம்-ஜி.பி.பிரியங்க (கிளிநொச்சி மகா வித்தியாலயம்).இரண்டாமிடம்-ஜி.பி.மதுசா(வயாவிளான் மகா வித்தியாலயம்).மூன்றாமிடம்-சிலோஜா (உயரப்புலம் எம்.எம்.ரி.எம்.எஸ்).

**12 வயதுப்பிரிவு பெண்கள் 100 மீற்றர் ஓட்டம்**

முதலாமிடம் - ஜி.எஸ்.அருணவி (கிளிநொச்சி மகா வித்தியாலயம்).இரண்டாமிடம்-ஜி.பி.லக்ஸனா (மகாஜனாக் கல்லூரி).மூன்றாமிடம்-நயோமி அஸ்திகா லம்பேர்ட் (பெரிய பன்றிவிரிச்சான் ம.வி).

**12 வயதுப்பிரிவு ஆண்கள் 100 மீற்றர் ஓட்டம்**

முதலாமிடம் - கே.எம்.மாலிக் (இலகடிபிட்டி ஆர்.சி.ரி. எம்.எஸ்).இரண்டாமிடம்-எஸ்.நமீதன் (சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி).மூன்றாமிடம்-எஸ்.வேணுஜன் (சென். ஜோன்ஸ் கல்லூரி).

**16 வயதுப்பிரிவு ஆண்கள் 800 மீற்றர் ஓட்டம்**

முதலாமிடம் - ஆர்.ரஸ்கன் (பாத்திமா ம.ம.வி),இரண்டாமிடம்-எஸ்.தனுஸன் (நெளுக்குளம் கலைமகள் ம.வி). மூன்றாமிடம்-எஸ்.ஜோன் சார்ளஸ் (சென்.பற்றிக்ஸ் கல்லூரி).

**20 வயதுப்பிரிவு ஆண்கள் முப்பாய்தல்**


முதலாமிடம் - கே.பவீந்திரன் (முக்கொம்பன் மகா வித்தியாலயம்).இரண்டாமிடம்-எஸ்.பிரட்மன் (சென்.ஆன்ஸ் ம.ம.வி).மூன்றாமிடம்-எஸ்.றுசாந்தன் (வவுனியா விபுலானந்தா கல்லூரி).

**18 வயதுப்பிரிவு ஆண்கள் ஈட்டி எறிதல்**

முதலாமிடம்-எஸ்.நிதுசன் (வேலணை மத்திய கல்லூரி). இரண்டாமிடம்-ஜெ.நீல்ஜோன்ஸன் (மகாஜனாக் கல்லூரி). மூன்றாமிடம் - எஸ்.றெமின்ஸன் (பரிகரிகண்டல் ஜி.ரி.எம்.எஸ்.).

**12 வயதுப்பிரிவு ஆண்கள் உயரம் பாய்தல்**

முதலாமிடம்-பி.அன்பழகன் (யோகபுரம் மகா வித்தியாலயம்), இரண்டாமிடம்-கே.சச்சின் (மகாஜனாக் கல்லூரி), ஏ.அதீஸன் (நெல்லியடி மத்திய கல்லூரி).



**18 வயதுப்பிரிவு ஆண்கள் கோலூன்றிப் பாய்தல்**

முதலாமிடம்-எஸ்.திசாந்த்(அருணோதயக் கல்லூரி). இரண்டாமிடம்-எஸ்.ஜாம்சன் (மகாஜனாக் கல்லூரி). மூன்றாமிடம்-வி.றுசான் (அருணோதயக் கல்லூரி).

**20 வயதுப்பிரிவு ஆண்கள் தட்டெறிதல்**

முதலாமிடம்-எஸ்.பிரகாஸ்ராஜ் (ஹாட்லிக் கல்லூரி). இரண்டாமிடம்-எஸ்.கிங்ஸ்லி றெஜினோல்ட் (வவுனியா விபுலானந்தா கல்லூரி). மூன்றாமிடம்-எம்.அபிராம் (ஹாட்லிக் கல்லூரி).

**16 வயதுப்பிரிவு பெண்கள் 300 மீற்றர் தடைதாண்டல்**

முதலாமிடம்-சி.தீபிகா (மகாஜனாக் கல்லூரி). இரண்டாமிடம் - ஜெ.கிருசாந்தினி (பிரான்பற்று கலைமகள் வித்தி). மூன்றாமிடம்-ஆர்.கௌசிகா (மீசாலை வீரசிங்கம் மத்தி கல்லூரி).

**16 வயதுப்பிரிவு ஆண்கள் 300 மீற்றர் தடைதாண்டல்**

முதலாமிடம்-ஆர்.ராஸ்கன் (பாத்திமா ம.ம.வி). இரண்டாமிடம்-வி.ஜீவராஜ் (நானாட்டன் ம.வி). மூன்றாமிடம்-வை.கமலகண்ணன் (விக்டோரியா கல்லூரி).

**18 வயதுப்பிரிவு பெண்கள் 400 மீற்றர் தடைதாண்டல்**

முதலாமிடம்-எல்.டிலக்சனா (உடுப்புக்குளம் தமிழ் வித்தி).இரண்டாமிடம்-கே.குமுதா (நெளுக்குளம் கலைமகள் ம.வி).மூன்றாமிடம்-ஏ.அனற்மேரி (தூய ஜோசப்வாஸ் ம.வி).

**20 வயதுப்பிரிவு பெண்கள் 400 மீற்றர் தடை தாண்டல்**

முதலாமிடம்-பி.பிரியங்கா (தட்சணமருதமடு மகா வித்தி).இரண்டாமிடம்-யு.குயின்சினி (கிளிநொச்சி மகா வித்தியாலயம்).மூன்றாமிடம்-என்.தருசிகா (சாவகச்சேரி இந்து கல்லூரி).

**18 வயதுப்பிரிவு ஆண்கள் 400 மீற்றர் தடைதாண்டல்**

முதலாமிடம்-எம்.நசாத்கன் (பாத்திமா ம.ம.வி), இரண்டாமிடம்-ஜி.கோபிநாத் (யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி).மூன்றாமிடம்-ஆர்.சாரப் (முருங்கன் ம.வி).

**20 வயதுப்பிரிவு ஆண்கள் 400 மீற்றர் தடைதாண்டல்**

முதலாமிடம்-ஏ.அபிக்ஸன் (சென்.ஆன்ஸ் ம.ம.வி). இரண்டாமிடம் ஏ.அபிநாஸ் (பாத்திமா ம.ம.வி), மூன்றாமிடம்-எஸ்.சுகந்தன் (பாரதி மகா வித்தியாலயம்)

**16 வயதுப்பிரிவு பெண்கள் உயரம் பாய்தல்**

முதலாமிடம் - சி.தீபிகா (மகாஜனாக் கல்லூரி). இரண்டாமிடம் - ரி.தீபிகா (கிளிநொச்சி மகா வித்தியாலயம்), மூன்றாமிடம் - ஆர்.டிலக்சனா (யூனியன் கல்லூரி).

**18 வயதுப்பிரிவு ஆண்கள் குண்டெறிதல்**

முதலாமிடம்-வி.சனுஜன் (தும்பளை சிவப்பிரகாச ம.வி). இரண்டாமிடம்-எஸ்.துவிந்தன் (ஓமந்தை மத்திய கல்லூரி). மூன்றாமிடம்-வி.வசிகரன் (வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்).

**20 வயதுப்பிரிவு பெண்கள் முப்பாய்தல்**

முதலாமிடம்-வி.ஜெனிற்றா (ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம்),இரண்டாமிடம்-ஏ.மேரி தயாந்தினி (கிளிநொச்சி மகா வித்தியாலயம்),மூன்றாமிடம்- வி.சாத்விகா (அருணோதயக் கல்லூரி)

**16 வயதுப்பிரிவு ஆண்கள் ஈட்டி எறிதல்**

முதலாமிடம்-எஸ்.மிதுன்ராஜ்(ஹாட்லிக் கல்லூரி). இரண்டாமிடம்-ஏ.கஜன் (யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி). மூன்றாமிடம்-பி.தனுஸ் (சென்.அன்ரனீஸ் கல்லூரி).

**12 வயதுப்பிரிவு பெண்கள் 4X50 மீற்றர் அஞ்சலோட்டம்**

முதலாமிடம் - மகாஜனாக் கல்லூரி.இரண்டாமிடம்-சாவகச்சேரி மகளிர் கல்லூரி.மூன்றாமிடம் - கற்கிடந்தகுளம் ஆர்.சி.ரி.எம்.எஸ்.

**12 வயதுப்பிரிவு ஆண்கள் 4X50 மீற்றர் அஞ்சலோட்டம்**

முதலாமிடம்-முல்லைத்தீவு மகா வித்தியாலயம், இரண்டாமிடம்-சென்.பற்றிக்ஸ் கல்லூரி. மூன்றாமிடம்-பூந்தோட்டம் மகா வித்தியாலயம்.

**14 வயதுப்பிரிவு பெண்கள் 4X100 மீற்றர் அஞ்சலோட்டம்**

முதலாமிடம்-தர்மபாலா வித்தியாலயம்.இரண்டாமிடம்-மகாஜனாக் கல்லூரி.மூன்றாமிடம்-வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி.

**14 வயதுப்பிரிவு ஆண்கள் 4X100 மீற்றர் அஞ்சலோட்டம்**

முதலாமிடம்-சென்.பற்றிக்ஸ் கல்லூரி.இரண்டாமிடம்-நெல்லியடி மத்திய கல்லூரி.மூன்றாமிடம்-ஹாட்லிக் கல்லூரி

**16 வயதுப்பிரிவு பெண்கள் 4X100 மீற்றர் அஞ்சலோட்டம்**

முதலாமிடம் - சென்.ஆன்ஸ் ம.ம.வி.இரண்டாமிடம்-கற்கிடந்தகுளம் ஆர்.சி.ரி.எம்.எஸ்.,மூன்றாமிடம்- ஸ்கந்தவரோதய கல்லூரி.

**16 வயதுப்பிரிவு ஆண்கள் 4X100 மீற்றர் அஞ்சலோட்டம்**

முதலாமிடம்-பாத்திமா ம.ம.வி.இரண்டாமிடம்-விக்டோரியா கல்லூரி.மூன்றாமிடம்-சென்.பற்றிக்ஸ் கல்லூரி.

**18 வயதுப்பிரிவு பெண்கள் 4X100 மீற்றர் அஞ்சலோட்டம்**

முதலாமிடம்-கொக்குவில் இந்துக் கல்லூரி. இரண்டாமிடம்-அருணோதயக் கல்லூரி.மூன்றாமிடம்- முருங்கன் ம.வி.

**18 வயதுப்பிரிவு ஆண்கள் 4X100 மீற்றர் அஞ்சலோட்டம்**

முதலாமிடம்-மகாஜனாக் கல்லூரி.இரண்டாமிடம்-சென்.ஆன்ஸ் ம.வி. மூன்றாமிடம்-கொக்குவில் இந்துக் கல்லூரி.

**20 வயதுப்பிரிவு பெண்கள் 4X100 மீற்றர் அஞ்சலோட்டம்**

முதலாமிடம்-சுண்டுக்குளி மகளிர் கல்லூரி. இரண்டாமிடம்-பாத்திமா ம.ம.வி.மூன்றாமிடம்-இளவாலை கன்னியர்மடம் ம.வி.

**20 வயதுப்பிரிவு பெண்கள் 4X100 மீற்றர் அஞ்சலோட்டம்**

முதலாமிடம்-பாத்திமா ம.வி.இரண்டாமிடம்-முருங்கன் ம.வி.,மூன்றாமிடம்-கொக்குவில் இந்துக் கல்லூரி. (சு-26)



சங்கானை பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் 30 ஆவது வருடாந்த விளையாட்டு விழா விக்ரோறியாக் கல்லூரி மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றது. (படம்: சோபிகா)



வடமாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரிய சங்கத்தினரால் நா.விஜயகுமாரின் நிதி உதவியுடன் கீரிமலை நகுலேஸ்வரா வித்தியாலயத்துக்கு உதைபந்தாட்ட பந்துகள் வழங்கப்பட்டன. அதிபரிடம் சங்கத் தலைவர் ப.தர்மகுமாரன் உபகரணங்களை வழங்கியிருந்தார். வடமாகாண பெண்கள் உதைபந்தாட்ட போட்டியில் இப் பாடசாலை அணி நான்காம் இடத்தைப் பெற்று தம்மை அடையாளப்படுத்தியது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வட மாகாண சபையில்...

அதில் சிறப்புரிமைப் பிரச்சினையொன்றை பேசப்போவதாக உறுப்பினர் கேசவன் சயந்தன் அவைத்தலைவரிடம் கோரியிருந்தார்.

அதாவது மாகாண அமைச்சர் டெனீஸ்வரன் தன்னுடைய பதவி நீக்கத்தை எதிர்த்து தாக்கல் வழக்கில் மேன்முறையீட்டு நீதிமன்றம், டெனீஸ்வரன் தொடர்ந்தும் அமைச்சராகவே இருக்கின்றார். அவர் அமைச்சராகத் தொடர்வதற்கு அனுமதிக்க வேண்டும் என கட்டளை வழங்கியிருக்கின்றது.

அந்த கட்டளை வழங்கப்பட்டுள்ள போதிலும் அவருடைய பதவி இன்னமும் ஒப்படைக்கப்படாமல் அமைச்சருக்கான ஆசன ஒதுக்கீடு செய்யப்படாமல் இருக்கின்ற நிலையில் சபை நடவடிக்கைகளை தொடர முடியாது.

இந்தச் சபை மக்களால் உருவாக்கப்பட்டது. இறைமை மக்களிடம் தான் உள்ளது. தங்கள் இறைமையை தங்கள் சார்பில் செயற்படுத்தவே மக்கள் எங்களை தெரிவு செய்திருக்கின்றனர். அவ்வாறு மக்கள் எம்மிடம் கையளித்த இறைமையை நாம் செயற்படுத்தி வருகிறோம். ஆனாலும் மக்கள் எம்மிடம் தந்த இறைமை தொடர்பில் தற்போது வெற்றிடமே காணப்படுகிறது.

மேற்குறித்த விடயத்துக்கு பரிகாரம் காணப்படாவிட்டால் இங்கு மேலும் நாங்கள் குந்திக் கொண்டிருப்பது பொருத்தமற்றது. அதற்கமைய இந்தச் சபை டெனீஸ்வரனை அமைச்சராக ஏற்றுக் கொண்டு அவருக்குரிய ஆசனத்தை வழங்க வேண்டும். ஆனாலும் அதனைச் செய்யாமல் இருப்பது தீர்ப்புக் குறித்து பாராமுகமாக இருப்பதாகவே அமையும். எனவே அவருக்கு அமைச்சருக்கான ஆசனம் வழங்கப்பட்டு சபை தொடர வேண்டுமென தெரிவித்தார்.

குறித்த விடயத்துக்கு முதலமைச்சர் தனது விளக்கத்தை வழங்கிய பின்னர். கருத்து வெளியிட்ட சயந்தன், இந்த விடயம் குறித்து உச்ச நீதிமன்ற நீதியரசராக இருந்த முதலமைச்சர் விக்கினேஸ்வரனின் கருத்துக்கள் வியப்பையும் ஏமாற்றத்தையும் தருகின்றதாக குறிப்பிட்டார். இதற்குப் பதிலளித்த முதலமைச்சர், நீதிமன்றில் இருக்கின்ற விடயங்களை கவனத்திலெடுத்துச் செயற்பட வேண்டுமென தெரிவித்தார்.

இதனிடையே அமைச்சர் விவகாரம் தொடர்பில் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், டெனீஸ்வரன் மீது பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்து கருத்து தெரிவித்தபோது அமர்வில் சலசலப்பு ஏற்பட்டது. இதற்கு டெனீஸ்வரன் பதிலளிக்க சர்ச்சைகள் நிறைந்த வாதப்பிரதிவாதங்கள் ஏற்பட்டிருந்தன. தமது கட்சி தொடர்பாக விவாதங்களும் மேலோங்கி காணப்பட்டது. இதனையடுத்து இருபகுதிகளாக ஆளும் கட்சி உறுப்பினர்கள் பேச்சுச் சமரை நடத்தினர். இதனால் சபையில் குழப்பம் ஏற்படவே சபையின் உறுப்பினர்களின் ஒலி வாங்கிகளை நிறுத்தி உறுப்பினர்களை சமரசப்படுத்திய அவைத்தலைவர் சபையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து தொடர்ந்து நடத்தினார். (ம-9)

## எரிபொருள் விலை...

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் நிதி அமைச்சர் மங்கள சமரவீரவுக்கும் இடையே நேற்று மாலை இடம்பெற்ற சந்திப்பையடுத்து இதற்கான உத்தரவு பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு விடுக்கப்பட்டுள்ளதாக் அறிய முடிகிறது.

பெற்றோல் (92 ஒக்ரைன்) 8 ரூபாவாலும் பெற்றோல் (95 ஒக்ரைன்) 7 ரூபாவாலும் டீசல் 9 ரூபாவாலும் சுப்பர் டீசல் 10 ரூபாவாலும் நள்ளிரவு முதல் அதிகரிக்கப்படுவதாக நிதியமைச்சு அறிவித்தது.

இதனால் பெற்றோல் (92 ஒக்ரைன்) 145 ரூபாவாகவும் பெற்றோல் (95 ஒக்ரைன்) 155 ரூபாவாகவும் டீசல் 117 ரூபாவாகவும் சுப்பர் டீசல் 129 ரூபாவாகவும் அதிகரிக்கப்படுகிறது. (ம)

## மாதாந்தம் 10ஆம்...

வரும் நிதி அமைச்சின் யோசனைக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அனுமதியளித்துள்ளார்.

இதற்கமைய ஒவ்வொரு மாதம் 10ஆம் திகதியும் எரிபொருள்களின் விலைகள் மாற்றமடையும் என நிதி அமைச்சு அறிவித்துள்ளது. (ம)

## போதைப்பொருள்...

த்துத் தீர்ப்பளிக்கப்படுகின்றது.

எனினும் அந்த தண்டனைத் தீர்ப்பு ஜனாதிபதியால் நிறைவேற்றப்படுவதில்லை.

இந்த நிலையில் போதைப் பொருள்கள் குற்றத்துக்கு விதிக்கப்படும் தூக்குத் தண்டனை குற்றத் தீர்ப்பை நிறைவேற்றுவது என அமைச்சரவை நேற்று ஏகமனதாகத் தீர்மானித்துள்ளது. (ம)

## 457 தொண்டர் ஆசிரியர்...

த்தில் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றும் 457 பேருக்கு ஆசிரியர் நியமனத்தை வழங்கிவைக்கிறார். (ம)

## மோசமான சித்திரவதை...

கூட்டு அரசாங்கம் ஆட்சி பீடம் ஏறி மூன்று வருடங்கள் பூர்த்தியாகின்ற போதிலும் இன்னமும் இலங்கையில் மிகவும் கொடூரமான சித்திரவதைகள், ஆட்கடத்தல்கள், பாலியல் துஷ்பிரயோகங்கள் தொடர்ந்து இடம்பெறுவதாக பிரித்தானியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் அந்த அமைப்பின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அந்த அமைப்பு 96 நாடுகளில் சித்திரவதைகளுக்கு உள்ளானவர்களுக்கு உதவி வரும் நிலையிலேயே சித்திரவதைகள் தொடர்பான பட்டியலை வெளியிட்டிருக்கின்றது.

இலங்கையில் கடந்த 2017ஆம் ஆண்டு சித்திரவதைகளுக்கு உள்ளான 184 பேருக்கு தாம் உதவி செய்துள்ளதாக தெரிவித்துள்ள குறித்த அமைப்பு, இதற்கமைய உலக நாடுகளில் அதிகளவிலானோர் சித்திரவதைக்கு உள்ளான நாடுகளின் பட்டியலை வெளியிட்டுள்ளது.

கடந்த 2016ஆம் ஆண்டு ஜுலை மாதம் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்பு அறிக்கையாளர் பென் எமர்சன் தனது விஜயத்தின் இறுதியில் இலங்கையில் தொடர்ந்தும் மோசமான சித்திரவதைகள் இடம்பெறுவதாக பகிரங்கமாக குற்றம்சாட்டியிருந்த விடயத்தையும் அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, சித்திரவதைக்குள்ளாவதை தடுப்பதற்காக, நியாயமான பொறுப்புக்கூறல் நடவடிக்கைகளை எடுத்தல் அல்லது பாதுகாப்புப் படையை மறுசீரமைப்பதற்கு அரசாங்கம் எவ்வித நடவடிக்கையையும் எடுக்கவில்லை எனவும் அந்த அமைப்பின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## சட்ட ஒழுங்கு அமைச்சர்...

ச்சர் ரஞ்சித் மத்தும பண்டாரவும் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவும் நாளை வியாழக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருகை தருகின்றனர்.

இவர்கள் காங்கேசன்துறையில் தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருக்கு பொலிஸ் திணைக்களத்தால் அமைத்து வழங்கப்படும் வீட்டை இருவரும் இணைந்து கையளித்து வைப்பர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, முன்னாள் இராஜாங்க அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விஜயகலா மகேஸ்வரன், விடுதலைப் புலிகளின் கை ஓங்கவேண்டும் என்று வலியுறுத்தியமைக்கான காரணம் யாழ்ப்பாணத்தில் அதிகரித்துள்ள குற்றச்செயல்களே என ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு எடுத்துரைக்கபட்டுள்ளது. (ம)

## மாணவிக்கு தொல்லை...

களும் பொலிஸ் நிலையத்தைச்சுற்றி வளைத்துள்ளனர். இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

நேற்று பிற்பகல் 4மணியளவில் பூவரசன் குளம் ஊடாக மெனிக்பாம் சென்ற இ.போ.ச பேருந்தில் பாடசாலைச்சீருடையுடன் மாணவி ஒருவர் பயணம் மேற்கொண்டுள்ளார். இதன்போது பேருந்தில் பயணம் மேற்கொண்ட இராணுவ வீரர் ஒருவர் குறித்த மாணவியை அணுகி தொலைபேசி இலக்கத்தினை கேட்டதுடன் தொல்லைகளும் கொடுத்துள்ளார். இதை அவதானித்த பயணி ஒருவர் குருமன்காட்டிலுள்ள பொலிஸ் காவல் அரணில் பேருந்தை நிறுத்துமாறு சாரதியிடம் தெரிவித்துள்ளார்.

பேருந்தை நிறுத்தியதும் இராணுவச் சிப்பாய் பேருந்திலிருந்து இறங்கி தப்பி ஓடிய போது பேருந்தின் நடத்துநர் துரத்திச் சென்று பிடித்து காவலரணிலுள்ள பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார். (ம-250,281)

## அனுமதியின்றி இயங்கும்...

த்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்தப்படவில்லை என உறுப்பினர் சிவாஜிலிங்கம் கேள்வி எழுப்பியிருந்தார் அதற்கு பதில் அளிக்கும் போதே மேற்படி தெரிவித்தார். தொடர்ந்து விளக்கமளிக்கையில்.

வடமாகாணம் முழுவதும் பல மருந்தகங்கள் இயங்கி வருகிறது. அது தொடர்பாக முறைப்பாடுகள் கிடைக்கும் பட்சத்தில் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம். அனுமதிப்பத்திரம் இல்லாமல், மருந்தாளர்கள் இல்லாமலும் பல மருந்தகங்கள் இயங்கி வருகின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 14 மருந்தகங்கள் உள்ளன அவை அனைத்தும் அனுமதிப்பத்திரம் பெறவில்லை. வவுனியா மாவட்டத்தில் இயங்கும் 19 மருந்தகங்களில் 9 மருந்தகங்களுக்கு அனுமதிப்பத்திரம் இல்லை, யாழ் மாவட்டத்தில் இயங்கும் 80 மருந்தகங்களில் 10 மருந்தகங்களுக்கு அனுமதிப்பத்திரம் இல்லை, கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்கும் 6 மருந்தகங்களில் 2 மருந்தகங்கள் அனுமதிபெறப்படவில்லை, மன்னாரில் இயங்குகின்ற 11 மருந்தகங்கள் இயங்குகின்றன அவை அனைத்தும் அனுமதி பெற்றுள்ளன.

அடிப்படையான விடயம் மருந்தகங்கள் அனுமதிப்பத்திரம் பெற்றிருக்க வேண்டும், அதன் பின்னர் தான் மருந்தாளர்கள் இல்லாது மருந்து வழங்கல் சிட்டைகள் இல்லாது மருந்து வழங்கல் போன்ற பிரச்சினைகள் பார்க்கப்படுகிறது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள சில மருந்தகங்களில் கருக்கலைப்பு செய்யப்படுவதற்கான மருந்துகள் வழங்கப்படுவதாக முறைப்பாடு கிடைத்தது குறித்த மருந்தை பயன்படுத்தி ஒரு தாய் கற்பப்பை வெடித்தும் அண்மையில் இறந்த சம்பவம் அங்கு இடம் பெற்றுள்ளது. அது தொடர்பாக விசாரணை நடைபெறுகிறது.

இதை போன்று பல மருந்துகள் போதை ஊட்டுவதாக உள்ளன. அவை வைத்தியரின் அனுமதியுடன் தான் வழங்கப்படவேண்டும் ஆனால் போதைக்கு அடிமையானவர்கள் இதை பயன்படுத்துகிறார்கள்.

நுண்ணாங்கிகளை கொல்லும் மருந்துகள் என மருத்துவத்துடன் தொடர்பில்லா தவர்களால் விநியோகிக்கப்படுகிறது. அவ்வாறான மருந்துகளுக்கான எதிர்ப்பு தன்மை கிருமிகளுக்கு வந்தால் எமது எதிர்காலம் கேள்விக்குறியாகிவிடும்.

மேலும் பாலியல் உணர்வுகளை தூண்டக்கூடிய மருந்துகள் விற்பனை செய்யப்படுகின்றன. இவை வைத்தியர்களின் சிபாரிசிலேயே வழங்கப்பட வேண்டும் வியாபார நோக்கத்துக்காக சிலர் தாராளமாக வழங்குகிறார்கள் இதனால் உயிரிழப்பும் ஏற்படுகிறது.

மருந்தகங்கள் சரியானவர்களால் திறக்கப்படவேண்டும். மருத்துவத்துடன் தொடர்புடையவர்களால் நடத்தப்பட வேண்டும். முல்லைத்தீவு ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில், அங்கு பூட்டப்பட்ட மருந்தகங்களை 6மாத காலம் திறந்து விடுமாறு கோரப்பட்டது அதற்கு எனக்கு அனுமதி இல்லை.

வைத்தியசாலைகளில் மருந்துகள் வழங்கப்படும். சிகிச்சை நிலையங்களில் மருந்துகளை பெறலாம் ஏனைய மருந்து வகைகள் வெளியிடத்தில் தான் தற்போது பெற்றுக்கொள்ள வேண்டும். விரைவில் அதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன.

பாடசாலை, வைத்தியசாலை மருந்தகங்கள் விடயத்தில் அரசியலை புகுத்த முடியாது. நல்ல நோக்கத்துக்காக தான் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என மேலும் தெரிவித்தார். (ம-9)

## காணாமல் ஆக்கப்பட்ட...

ள்ளார்.

கனேடிய நாட்டின் இலங்கைக்கான தூதுவர் டான்ட் மிக்கினோ நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை மன்னாருக்கு விஜயமொன்றினை மேற்கொண்டிருந்தார்.

இதன்போது, மன்னார் மாவட்ட பிரஜைகள் குழு அலுவலகத்தில் தலைவர் அருட்பணி ஞானப்பிரகாசம் அடிகளார் தலைமையில் ஆளுநர் சபை பிரதி நிதிகளையும் சந்தித்து கலந்துரையாடும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பிரஜைகள் குழுவினர் இந்த அலுவலகம் அரசுக்கு சாதகமாகத்தான் செயல்படும் போல் எங்களுக்கு சந்தேகம் ஏற்படுவதாக பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்பணி ஞானப்பிரகாசம் தெரிவித்தார்.

இதற்கு பதிலளித்த கனேடிய தூதுவர்,

இந்த அலுவலகத்தை முன்னெடுத்துச் செல்பவர் சாலிய பீரீஸ். அவருக்காக சிறிது காலத்தையும் சந்தர்ப்பத்தையும் அவர்களுக்கு கொடுக்குமாறு கூறிய அவர், அவர்களது செயல்பாட்டை உடன் கணிக்க முடியாது என்றார். (ம)

## காலில் கிருமி தொற்று...

சிவம் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்கும் தவராசா நாகசுலக்சன். (வயது 16) என்ற மாணவனே மேற்படி உயிரிழந்தவராவார்.

கடந்த 4ஆம் திகதி குறித்த மாணவனின் காலில் அடிபட்டு முழங்கால் வீங்கியதாக யாழ்ப்பாண வைத்தியசாலையில் சிகிச்சை பெற வந்து அனுமதிக்கப்பட்டார் பின்னர் இரண்டு நாட்கள்தங்கியிருந்து சிகிச்சை பெற்றுவிட்டு வீடு திரும்பியுள்ளார்.

வீக்கம் அடைந்த குறித்த பகுதியில் காயம ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் நேற்று முன்தினம் நெஞ்சு அடைப்பதாக தெரிவித்துள்ளான். உடனடியாக ஊர்காவற்துறை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது.

ஆனால் சிகிச்சை பலனின்றி நேற்று அதிகாலை குறித்த மாணவன் உயிரிழந்துள்ளார் இது தொடர்பான மரண விசாரணையை யாழ் போதனாவைத்தியசாலை மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டிருந்தார். (ம-9)

**கொவிசெத**
திகதி 2018.07.10
சீட்டிழுப்பு இலக்கம் 1816
ஆங்கில எழுத்து: M
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 01 03 40 44

**மஹஜன சம்பத**
திகதி 2018/07/10
சீட்டிழுப்பு இலக்கம் 3699
ஆங்கில எழுத்து: Z
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 3 8 2 1 3 0

**நீரோகா**
திகதி 2018/07/10
சீட்டிழுப்பு இலக்கம் 418
லக்கினம்: விருச்சிகம்
வெற்றி இலக்கங்கள்: 09 12 67 68
30

**செவண**
திகதி 2018/07/10
சீட்டிழுப்பு இலக்கம் 99
ஆங்கில எழுத்து: O
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 12 16 47 55

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலமைச்சர்...

பட்டதா இல்லையா என்ற அரசியல் யாப்பு சம்பந்தமான விடயத்தையும் உச்ச நீதிமன்றமே தீர்மானிக்க வேண்டும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடக்கு மாகாண சபையின் 126-வது அமர்வு நேற்று கைதடியில் உள்ள மாகாண சபை சபாமண்டபத்தில் இடம்பெற்றது. அதில் மேன்முறையீட்டுமன்றத் தீர்ப்பு பற்றிய விளக்கம் அளிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

அண்மைய மேன்முறையீட்டு நீதிமன்றத் தீர்மானம் பலவிதமான விமர்சனங்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. அதன் நிமித்தம் இந்த சபைக்கு சுருக்கமான ஒரு விளக்கத்தை அளிக்கவேண்டிய கடப்பாடு எனக்குள்ளது.

உச்ச நீதிமன்றத்தின்முன் மேன்முறையீட்டுக்கு உட்படுத்தப்பட்டிருக்கும் இந்தத் தீர்மானத்தில் மேன்முறையீட்டு நீதிமன்றம் எந்த ஒரு மாகாண முதலமைச்சர் தானும் தமது அமைச்சர் குழாமின் அமைச்சர் ஒருவரை நியமிக்கவோ, பதவி இறக்கவோ முடியாது என்ற கருத்தை வெளிப்படுத்தியுள்ளது.

அந்த அதிகாரம் ஆளுநருக்கே உண்டு எனக் கூறி டெனீஸ்வரனின் பதவி இறக்கத்தை ஆளுநர் உத்தியோகபூர்வமாக வர்த்தமானியில் பிரசுரிக்காத காரணத்தினாலோ என்னவோ டெனீஸ்வரன் தொடர்ந்து பதவியில் இருக்கின்றார் என்று தீர்மானித்துள்ளார்கள்.

ஆனால் இத் தீர்மானம் குழப்பத்தை விளைவித்துள்ளது. டெனீஸ்வரனை சேர்த்தால் அமைச்சர் குழாம் ஆறாக மாறும். இது சட்டத்திற்குப் புறம்பானது. ஐந்துக்குக் கூட அமைச்சர்கள் இருந்தால் அது அரசியல் யாப்பு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக அமையும். ஆறுபேருடன் அமைச்சர் குழாம் செயற்பட்டால் அது அரசியல் யாப்பின் ஏற்பாடுகளுக்கு முரண்பட்டதாக ஆகிவிடும். சட்ட வலுவற்றதாக அமையும். அதனால் அமைச்சர் குழாமின் செயற்பாடுகள் சட்டபூர்வமற்றதாய் அமைவன.

அரசியல் யாப்பின் ஏற்பாடுகளுக்கு முரணாக செயற்படுவது பாரிய விளைவுகளை ஏற்படுத்தும். ஆகவே அரசியல் யாப்பின் ஏற்பாடுகளுக்கு முரணாக நடந்து கொள்ள நாங்கள் தயாரில்லை.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் எம்மால் இசைந்து அரசியல் யாப்பின் ஏற்பாடுகளை மீற முடியாது. ஆகவே தான் நாங்கள் இது பற்றிய உச்ச நீதிமன்ற தீர்மானத்தை எதிர்பார்த்து நிற்க வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

இவ் வழக்கில் மிகவும் முக்கியமான சட்டப் பிரச்சினைகள் எழுந்துள்ளன. அவற்றை ஆராய்ந்து ஒரு முடிவை எடுக்கக் கூடியவர்கள் உச்ச நீதிமன்ற நீதியரசர்களே. உண்மையில் அவர்களுக்கு மட்டுமே இந்த அதி காரம் அரசியல் யாப்பின் 125-ம் இலக்க ஏற்பாட்டால் வழங்கப்பட்டுள்ளது.

எமது நிலைப்பாடு மாகாண அமைச்சர் குழாமில் உள்ள அமைச்சர்களை நியமிக்கும் மற்றும் பதவி இறக்குவதைத் தீர்மானிப்பது அந்தந்த மாகாணங்களின் முதலமைச்சர்களையே சார்ந்ததாகும் என்பதே. அரசியல் யாப்பின் 154(5)இன் ஏற்பாடுகள் பின்வருமாறு அமைந்துள்ளது.

"மாகாணமொன்றின் சார்பாக அமைக்கப்பெறும் மாகாணசபையொன்றின் மற்றைய அமைச்சர்கள், சபை உறுப்பினர்களின் மத்தியில் இருந்து முதலமைச்சரின் சிபார்சின் பெயரில் ஆளுநரால் நியமிக்கப்படுவார்கள்."

இந்த உறுப்புரை அமைச்சர்களை எவ்வாறு பதவி நீக்கம் செய்யலாம் என்பது பற்றி எதுவும் கூறவில்லை.

மேற்படி உறுப்புரையின் ஏற்பாடுகளைக் கவனித்தீர்களானால் ஆளுநர் தானாக அமைச்சர் ஒருவரை நியமிக்க முடியாது என்பது கண்கூடாகப் புரியும். முதலமைச்சரின் சிபார்சின் பெயராலேயே அவர் எவரையாவது அமைச்சராக நியமிக்க முடியும். இது சம்பந்தமாகத் தானாக அவர் இயங்க முடியாது.

தற்போதுள்ள நிலையில் ஐந்துக்கு மேற்பட்ட அமைச்சர்கள் பதவி வகித்தால் அது சட்டத்திற்குப் புறம்பாகும். எமது நடவடிக்கைகள் சட்ட வலுவற்றதாக மாறிவிடுவன. ஆகவே தான் நாங்கள் உச்ச நீதிமன்ற தீர்மானத்தை எதிர்பார்த்துள்ளோம்.

இதில் பல சிக்கல்கள் உள்ளன. மேன்முறையீட்டு நீதிமன்றத் தீர்மானப்படி முதலமைச்சர், அமைச்சர் ஒருவரை நியமிக்கவோ பதவி இறக்கவோ முடியாது. ஆகவே தற்போது எந்த ஒரு அமைச்சரையும் பதவி இறக்க என்னால் முடியாது. முன்னர் எனது சிபார்சுக்கு அமைய தொடர் நடவடிக்கை எடுக்க வேண்டிய பொறுப்பு ஆளுநருக்கிருந்தது. முதலமைச்சர் என்ற கடமையில் இருந்து நான் தவறவில்லை. என் வரையறைக்குள் இருந்து எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை நான் எடுத்துள்ளேன். வர்த்தமானிப் பிரசுரங்கள் போன்றவை எனது வரையறைக்கு அப்பாற்பட்டன.

ஆளுநருக்கு அமைச்சர்களை நியமிக்கும் அதிகாரம் இருக்கின்றதென்றால் அதிகாரப்பகிர்வுக்கு என்ன நடந்தது என்ற கேள்வி எழும். நேரடியாக மத்திய அரசு மாகாண அமைச்சர்களை நியமித்து ஒற்றையாட்சியை நடத்த முடியுமென்றாகின்றது. இவ்வாறான ஒற்றையாட்சியையும் ஆளுநரின் சர்வாதிகாரத்தையும் தான் எம்மவர்கள் எதிர்பார்க்கின்றார்களோ எனக்குத்தெரியாது.

தெற்கில் உள்ள மாகாண சபைகளையும் இவ்வாறான தீர்மானங்கள் பாதிக்கின்றன. ஆகவே அதிகாரப் பரவலாக்கம் பதின்மூன்றாம் திருத்தச் சட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டதா இல்லையா என்ற அரசியல் யாப்பு சம்பந்தமான விடயத்தையும் உச்ச நீதிமன்றமே தீர்மானிக்க வேண்டும்.

ஒரு சில நாட்களுள் உச்ச நீதிமன்றம் எமது மேன்முறையீட்டின் காரணமாகப் பூர்வாங்கத் தீர்மானம் ஒன்றை எடுக்க வேண்டியிருக்கும். இவை எனது சொந்தக் கருத்துக்களே. வழக்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்திலும் உச்ச நீதிமன்றத்திலும் நடவடிக்கையில் இருப்பதால் நீதிமன்றத் தீர்மானங்களைப் பற்றி இச்சபையில் விவாதம் நடத்துவது முறையாகாது என மேலும் தெரிவித்தார். (ம-9)


எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது
வெளிநாடுகளுக்கான துரித கடிதங்கள் பொதிகள் சேவை
20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை
• அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
• அருள்ஸ் பிறைவேற் லிமிட்டற் நிறுவனங்களின் இணை நிறுவனம்.
அருள்
சாவகச்சேரி இல. 01 NDB வங்கிக் கட்டடம், தபாற் கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576
நெல்லியடி இல. 01 பெற்றோல் செற் லேன் ,நெல்லியடி. 076 443 1576
கிளிநொச்சி இல. 10, கரடிப்போக்கு, கிளிநொச்சி. (வாகன புகைப்பரிசோதனை நிலையம் அருகில்) 076 443 1576
(C-3191)



அகரம் கல்வி நிலையம்
(காங்கேசன்துறை சாலை)
மல்லாகம் கொக்குவில்
இரண்டாந் தவணைக்கான பெற்றோர்களுடனான கலந்துரையாடலும் வினாத்தாட் கோவை கையளிப்பும்
16.07.2018 மாலை 04.30 கொக்குவில் அகரம் கல்வி நிலையத்திலும்
17.07.2018 மாலை 04.30 மல்லாகம் அகரம் கல்வி நிலையத்திலும்
நடைபெறும்.
இந் நிகழ்வில் எமது நிலையத்தின் பெற்றோர்கள் அனைவரும் கலந்து கொள்வது மிக அவசியம் என்பதனை அன்புடன் அறியத்தருகின்றோம்.
குறிப்பு:-
• 15.07.2018 வரை உரிய நேரசூசிக்கு அமைய வகுப்புக்கள் நடைபெறுகின்றன். இவ் வகுப்புக்கள் யாவும் வலயமட்ட, மாகாணமட்ட பரீட்சைகளுக்கு மாணவர்களை தயார்ப்படுத்தும் வகையில் பாட மீட்டல் மற்றும் மாதிரி வினாத்தாட் பயிற்சி வகுப்புக்களாக நடைபெறுகின்றன.
• மேற் குறிப்பிடப்பட்ட விடயங்களை மாணவர்கள், பெற்றோர்கள் அனைவரும் சிரத்தையுடன் கருத்தில் எடுக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.
"அகரம் எம் தேசக் குழந்தைகளின் ஏற்றமிகு எதிர்காலம்"
- நிர்வாகி
அகரம் கல்விநிலையம்
(4865)



வேலைவாய்ப்பு
■ 2018 ஆம் ஆண்டுக்கான ஐந்தாயிரம் தொழில் வழங்கல் கருத்திட்டத்தில் பதிவு செய்துள்ள தனியார் நிறுவனத்தின் இறுதிக்கட்ட ஆட்சேர்ப்பு ஆரம்பம்.
தகைமை: க.பொ.த.சா/தரத்தில் இருந்து
வயதெல்லை: 18-30 வரையில்
(வெளிமாவட்டத்தினருக்கு தங்குமிட வசதி இலவசம்)
வருமானம்: 20,500/= - 45,000/= வரை
நேர்முகத் தேர்வின் போது (பிறப்புரிமைச் சான்று பிரதி, தேசிய அடையாள அட்டை பிரதி) கொண்டு வரவும்.
தொடர்புகளுக்கு:- 077 157 1699
(C-3234)



FLC FRENCH LANGUAGE CENTRE
பிரெஞ்சு
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட DELF A1,A2,B1,B2.
V. ஜெகன் (Trained in France- 2007)
40, பலாலி வீதி, அரியகுளம். 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் : 14.07.18 சனி 1 மணி.
181, பிரதான வீதி, நெல்லியடி. 021 320 2973 ஆரம்பம் :16.07.18 மாலை 3.30 மணி
திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1, Spoken English மற்றும் IELTS வகுப்புக்களும் நடைபெறுகின்றன.
(C-3194)



CNR உள்நாடு, வெளிநாடுகளுக்கான தபால், பொதிகள் விநியோக சேவை
அதிவேக மற்றும் சிக்கன பொதிகள் சேவை
நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
வீடு, அலுவலகங்களில் இருந்தவாறு அனுப்பும் வசதி
அனுப்பும் பொதிகளுக்கான காப்புறுதி உத்தரவாதம்
கடல் ஆகாய மார்க்க பெரிய சரக்குப் பரிமாற்ற சேவை
CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 021 5674145 077 2931062 077 6655413
(C-3189)



துரித தபால்கள் பொதிகள் சேவை
எங்கும் இல்லாத மிகக் குறைந்த கட்டணத்தில் 11Kg க்கு மேற்பட்ட பொதிகளுக்கு
3-5 வேலை நாட்களில்
UK -550/=
Germany -650/=
France -700/=
Australia -800/=
திருமுருகன் கொம் நெற்
321, K.K.S வீதி, யாழ்ப்பாணம். (முட்டாஸ் கடை சந்திக்கு அருகாமையில்)
Hotline -0777554528
(4839)



வேலைவாய்ப்புக்கள்
➤ கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ள ஹோட்டல் ஒன்றுக்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.
வரவேற்பாளர் - பெண்
தகைமை- • கணினி அறிவு.
• ஆங்கிலம், தமிழ் சரளமாக பேசக் கூடியவர்கள்.
• சிங்களமொழி தெரிந்திருப்பின் சிறப்பானது.
சமையலாளர் - இருபாலாரும்
துப்புரவாளர் - ஆண்
சம்பளம்:கவர்ச்சிகரமான சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளும் வழங்கப்படும். (நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்)
முடிவுத்திகதி: 13.07.2018
தொடர்புகளுக்கு : 076 202 6882
(4848)



விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து- 700 /=Kg
DELIVERY IN 3-5 DAYS
0768226240
V2 TRAVELS
• மானிப்பாய் • யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை
(C-3192)



வெளிநாடு-உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை
WESTERN UNION 070 330 5500 WESTERN UNION
அண்ணா பொதிகள் சேவை
976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும் நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.
3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்
வேலணை - அரியாலை - சங்கானை - சுன்னாகம்
கரணவாய் -மீசாலை-கிளிநொச்சி-கனகராயன்குளம்
முல்லைத்தீவு-மன்னார்-வவுனியா-திருகோணமலை
(C-3188)



கணனி திருத்தம்
Sever Installation
☞ உங்கள் கணனிகள், Laptop பழுதடைந்து விட்டதா? உங்கள் வீடுகளுக்கே வந்து திருத்தித் தருகின்றோம்.
மற்றும் கணனிகள் விற்றல், வாங்குதல்.
தொடர்புகளுக்கு:- ALM Computer System
077 243 8537



தவறிவிட்டது
சின்னக்கிளி குமணாதரன் என்பவரது சாரதி அனுமதிப்பத்திரம் கடந்த சனிக்கிழமை 30.06.2018 நெல்லியடியில் தவறுதலாக கைவிடப்பட்டதால் அதனை எடுத்தவர்கள் தயவு செய்து தந்து உதவவும்.
தொடர்பு:- 077 163 1246


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.07.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org